# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2024.06.12 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## குடிவரவு

**இலங்கையினுள் ஆட்கள் உட்பிரவேசிப்பதனையும் இலங்கையிலிருந்து புறப்படுவதனையும் கட்டுப்படுத்துவதற்காக வும்; இலங்கைப் பிரசைகளல்லாத ஆட்கள் இலங்கையில் தங்கியிருப்பதனைக் கட்டுப்படுத்துவதற்காகவும்; பயண ஆவணங்களை வழங்குவதற்காகவும்; (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தையும் 1971 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, கடவுச்சீட்டு (ஒழுங்குபடுத்தல்) மற்றும் வெளிச்செல்கை அனுமதிப்பத்திரச் சட்டத்தையும் நீக்குவதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு
பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா *300.00* தபாற் செலவு : ரூபா *150.00*

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

குடிவரவு

ச.வ.-ஒ. 31/2018

***இலங்கையினுள் ஆட்கள் உட்பிரவேசிப்பதனையும் இலங்கையிலிருந்து புறப்படுவதனையும் கட்டுப்படுத்துவதற்காகவும்; இலங்கைப் பிரசைகளல்லாத ஆட்கள் இலங்கையில் தங்கியிருப்பதனைக் கட்டுப்படுத்துவதற்காகவும்; பயண ஆவணங்களை வழங்குவதற்காகவும்; (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தையும் 1971 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, கடவுச்சீட்டு (ஒழுங்குபடுத்தல்) மற்றும் வெளிச்செல்கை அனுமதிப்பத்திரச் சட்டத்தையும் நீக்குவதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதிகளும்

***1.*** *(1) இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின்            ஆம் இலக்க, குடிவரவுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*(2) இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும். இச்சட்டத்தின் வெவ்வேறு பாகங்கள் அல்லது வெவ்வேறு பிரிவுகள் நடைமுறைக்கு வருவதற்காக வெவ்வேறு தேதிகள் அமைச்சரினால் நியமிக்கப்படலாம்.*

*(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டமூலம் பாராளுமன்றச் சட்டமொன்றாகவரும் தேதியன்று வலுவுக்குவருதல் வேண்டும்.*

பாகம் I

**முதனிலையானவை**

சட்டத்தின் குறிக்கோள்கள்

**2.** இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) தேசிய நலனுக்கு ஒத்ததாகவுள்ளவொரு முறையில் குடிவரவையும் குடியகல்வையும் ஒழுங்குபடுத்துதல்;

(ஆ) இலங்கையின் ஆளடையாளம் மற்றும் பிரசாவுரிமைக்குச் சான்றாக இலங்கைப் பிரசைகளுக்குக் கடவுச்சீட்டுகளை வழங்குதலும் அவற்றின் வழங்குகையை நிருவகித்தலும்;

(இ) இலங்கைப் பிரசைகள் தவிர்ந்த எவரேனுமாள் இலங்கையினுட் பிரவேசிப்பதனைக் கட்டுப்படுத்துதல்;

(ஈ) ஆளொவ்வொருவரும் இலங்கையிலிருந்து புறப்படுவதனைக் கட்டுப்படுத்துதல்; அத்துடன்

(உ) இலங்கைப் பிரசையல்லாத எவரேனுமாளின் செயற்பாடுகளை மேற்பார்வைசெய்தல்.

சட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்து விலக்களிப்பதற்கான தத்துவம்

**3.** (1) (அ) இலங்கையின் ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவராகவுள்ள; அல்லது

(ஆ) வேறேதேனும் நாட்டின் அரசாங்கத்தினால் இலங்கை அரசாங்கத்துக்கு உரியமுறையில் தராதர அங்கீகாரமளிக்கப்பட்டவராகவுள்ள; அல்லது

(இ) வேறேதேனும் நாட்டின் அரசாங்கத்தினால் ஒரு விசேட தூதரகப் பணிக்காக இலங்கைக்கு அனுப்பப்பட்டவராகவுள்ள; அல்லது

(ஈ) எவ்வாளின் சம்பளம் அல்லது பிரதான வேதனாதிகள் இலங்கை அரசாங்கத்தினால் செலுத்தப்படற்

பாலதல்லாததாகவுள்ளதோ அவ்வாளாகவுள்ளவரும் ஐக்கிய நாடுகள் ஒழுங்கமைப்பின் ஏதேனும் விசேடித்த முகவராண்மையினூடாக, அல்லது ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசாங்கத்தினது நான்கு விடய உதவி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ், அல்லது கொழும்புத் திட்ட ஒழுங்கமைப்பினூடாக (அதன் தொழினுட்ப உதவிப் பணியகமுட்பட), அல்லது அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒத்த ஒழுங்கமைப்பினூடாக இலங்கை அரசாங்கத்தினால் இலங்கைக்குக் கொண்டுவரப்படுகின்ற வருமான ஒழுங்கமைப் பொன்றின் ஒரு நிபுணராக, மதியுரைநராக, தொழினுட்பவியலராக, அல்லது உத்தியோகத்தராகவுள்ள; அல்லது

(உ) ஐக்கிய நாடுகள் ஒழுங்கமைப்பினதும் அதன் விசேடித்த முகவராண்மைகளினதும் அல்லது கொழும்புத் திட்ட ஒழுங்கமைப்பினதும், அல்லது அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒத்த ஒழுங்கமைப்பினதும் தொழினுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுள் எவற்றின்கீழும் இலங்கைக்கு அனுப்பப்படுகின்ற வெளிநாட்டிலிருந்தான எவரேனும் பயிற்சி பெறுநராகவுள்ள; அல்லது

(ஊ) இலங்கை அரசாங்கத்தின் சேவையினுட் பிரவேசித்துள்ள அல்லது பிரவேசிப்பதற்கு ஓர் உடன்படிக்கையின்கீழுள்ள;

(எ) முற்போந்த (அ) முதல் (ஊ) வரையிலான பந்திகளுள் எவற்றிலும் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனுமாளின் அலுவலகமுறையான பணியாட்டொகுதியின் அல்லது குடும்பத்தின் உறுப்பினரொருவராகவுள்ள; அல்லது

(ஏ) முற்போந்த (அ) முதல் (எ) வரையிலான பந்திகளுள் எவற்றிலும் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனுமாளின் மனைவியாக அல்லது எவரேனும் தங்கிவாழும் பிள்ளையாகவுள்ள; அல்லது

(ஐ) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளிலுள்ள ஒரு கப்பலின் சிப்பந்திகளினது உறுப்பினராகவுள்ள,

ஆளொவ்வொருவரும் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையொன்றின்மூலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அளவுக்கும் அல்லது அத்தகைய நிபந்தனைகளுக்கு அல்லது மட்டுப்பாடுகளுக்கு அமையவும், இச்சட்டத்தின் பாகங்கள் III, IV, V, VI மற்றும் VII என்பவற்றின் நடைமுறையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின்கீழான கட்டளையொன்று இருவிடயங்களுள் ஒன்றில் இவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களாகவுள்ள, ஒன்றில் எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் தொகுதி தொடர்பிலான கட்டளையொன்றாக, அல்லது ஏதேனும் வகுப்பினரான அல்லது விவரணத்தினரான ஆட்களுக்கு ஏற்புடையற்பாலதானவொரு கட்டளையாக இருக்கலாம்.

(2) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், ஏதேனும் பொது அவசரநிலைமை இடம்பெறுவதன்மீது குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதிக்காக, சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றிலிருந்தும், அத்தகைய அளவுக்கு அல்லது பொதுமக்கள் நலன்கருதி அவசியமானவையென அவருக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய நியதிகள், நிபந்தனைகள் அல்லது மட்டுப்பாடுகளுக்கமைய, எவரேனுமாளுக்கு அல்லது வகுப்பினரான அல்லது விவரணத்தினரான ஆட்களுக்கு விலக்களிக்கலாம்.

## பாகம் II

## நிருவாக ஒழுங்கேற்பாடுகள்

**4.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பெயரினாலேனுஞ்சரி அல்லது பதவியினாலேனுஞ்சரி பின்வருவோர் நியமிக்கப்படலாம்:- அலுவலர்கள்

(அ) (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) குடிவரவுக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியாக இருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்குத் தகுதியான வரும் தகுந்தவருமான ஆளொருவர்;

(ஆ) மேலதிகக் குடிவரவுக் கட்டுப்பாட்டாளர் தலைமையதி பதியாக இருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்குத் தகுதியானவரும் தகுந்தவருமான ஆளொருவர்;

(இ) குடிவரவுக் கட்டுப்பாட்டாளர்களாக இருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்குத் தகுதியானவர்களும் தகுந்தவர்களுமான ஆட்கள்;

(ஈ) பிரதிக் குடிவரவுக் கட்டுப்பாட்டாளர்களாக இருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்குத் தகுதியானவர்களும் தகுந்தவர்களுமான ஆட்கள்;

(உ) உதவிக் குடிவரவுக் கட்டுப்பாட்டாளர்களாக இருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்குத் தகுதியானவர்களும் தகுந்தவர்களுமான ஆட்கள்;

(ஊ) பிரதான குடிவரவு அலுவலர்களாக இருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்குத் தகுதியானவர்களும் தகுந்தவர்களுமான ஆட்கள்; அத்துடன்

(எ) குடிவரவு அலுவலர்களாக இருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்குத் தகுதியானவர்களும் தகுந்தவர் களுமான ஆட்கள்.

(2) இச்சட்டத்தை நிருவகிப்பதற்காக (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலர்களை உதவுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களும் ஊழியர்களும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

அலுவலர்களின் தத்துவங்களும், கடமைகளும் பணிகளும்

**5.** *(1)* இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் உரித்தாக்கப்பட்ட, அளிக்கப்பட்ட, சுமத்தப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதில், புரிவதில் அல்லது நிறைவேற்றுவதில் –

(அ) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அமைச்சரின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கு அமைந்தவராதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட மேலதிகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, ஒவ்வொரு கட்டுப்பாட்டாளரும், ஒவ்வொரு பிரதிக் கட்டுப்பாட்டாளரும், ஒவ்வோர் உதவிக் கட்டுப்பாட்டாளரும், ஒவ்வொரு பிரதான குடிவரவு அலுவலரும், ஒவ்வொரு குடிவரவு அலுவலரும், மற்றும் வேறெவரேனும் அலுவலரும் அல்லது வேறெவரேனும் ஊழியரும், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*(2)* கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, ஒன்றில் பொதுவாகவோ அல்லது விசேடமாகவோ, இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் அல்லது நிறைவேற்றுவதற்கும் மேலதிகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு, எவரேனும் கட்டுப்பாட்டாளருக்கு, எவரேனும் பிரதிக் கட்டுப்பாட்டாளருக்கு, எவரேனும் உதவிக் கட்டுப்பாட்டாளருக்கு, எவரேனும் பிரதான குடிவரவு அலுவலருக்கு அல்லது எவரேனும் குடிவரவு அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம்.

*(3)* கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, மேலதிகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, ஒவ்வொரு கட்டுப்பாட்டாளர், ஒவ்வொரு பிரதிக் கட்டுப்பாட்டாளர் அல்லது ஒவ்வோர் உதவிக் கட்டுப்பாட்டாளர், இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் ஒரு பிரதான குடிவரவு அலுவலருக்கு அல்லது ஒரு குடிவரவு அலுவலருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

(4) ஒரு பிரதான குடிவரவு அலுவலர், இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் ஒரு குடிவரவு அலுவலருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

*அமைச்சரின் சார்பில் செயலாற்றுவதற்கு அவரினாலான அதிகாரமளிப்பு*

**6.** அமைச்சர் பின்வருவன தவிர ஒன்றில் பொதுவாக அல்லது விசேடமாக ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அமைச்சுக்கான செயலாளர், அமைச்சுக்கான மேலதிகச் செயலாளர் அல்லது கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு அதிகாரமளிக்கலாம்–

(அ) பிரிவு 3, பிரிவு 7 இன் (4) ஆம் உட்பிரிவினால், பிரிவு 8 இன் உட்பிரிவு (4), பிரிவு 45, பிரிவுகள் 99, 165, 168, 172 மற்றும் பிரிவு 176 இன் உட்பிரிவு (2) என்பவற்றினால் அளிக்கப்பட்ட தத்துவங்கள்; அல்லது

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட, சுமத்தப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட ஏதேனும் கடமை அல்லது பணி.

*படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினர்கள்*

**7.** (1) சனாதிபதி, அமைச்சரின் கோரிக்கையின்மேல், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினர்களாகப் பின்வருவோர் எல்லோரையும் அல்லது அவர்களுள் எவரையும் பெயர்குறித்துநியமிக்கலாம்:-

(அ) (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் திரட்டப்பட்டுப் பேணப்பட்ட இலங்கைத் தரைப்படையின் உறுப்பினர்கள்;

(ஆ) (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் திரட்டப்பட்டுப் பேணப்பட்ட இலங்கைக் கடற்படையின் உறுப்பினர்கள்; அத்துடன்

(இ) (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் திரட்டப்பட்டுப் பேணப்பட்ட இலங்கை வான்படையின் உறுப்பினர்கள்.

(2) நான்காம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பினுள், படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினரொருவர்,-

(அ) 46 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு;

(ஆ) 51 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு;

(இ) 124 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு;

(ஈ) 126 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு;

(உ) 136 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு;

(ஊ) 137 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு;

(எ) 138 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு; அத்துடன்

(ஏ) 139 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு,

என்பன தொடர்பில் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தினால் சமாதான அலுவலரொருவருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக மட்டும் அச்சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஒரு சமாதான அலுவலராகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவினால் அதிகாரமளிக்கப்பட்ட படைகளின் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டு அவர்கள்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களும் கடமைகளும் (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் (358ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளினால் அவர்களுக்கு அல்லது அவர்கள்மீது அவை அளிக்கப்படாத அல்லது சுமத்தப்படாத அத்தகைய தத்துவங்களாகவும் கடமைகளாகவும் இல்லாதிருக்கின்றமை எவ்வாறிருப்பினும், பிரயோகிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அதிகாரமளிக்கப்பட்ட படைகளின் உறுப்பினர் இச்சட்டத்தின் கீழான தத்துவங்களும் கடமைகளும் பிரயோகிக்கப்பட்டு நிறைவேற்றப்படக்கூடிய இடப்பரப்புகளைக் குறித்துரைக்கலாம்.

(5) பிடியாணையின்றிக் கைதொன்றைச் செய்கின்ற படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினரொருவர் –

(அ) அக்கைது பற்றிக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவ்வாறு கைதுசெய்யப்பட்ட ஆளை ஒரு பொலிசு அலுவலரின் கட்டுக்காப்பிற்குக் கையளித்தல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான குறித்தசில தத்துவங்கள் கரையோரக் காவல் திணைக்களத்தின் கரையோரக் காவல் அலுவலர்களினால் பிரயோகிக்கப் படலாம்

**8.** (1) சனாதிபதி, அமைச்சரின் கோரிக்கையின்மேல், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், 2009 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கரையோரக் காவல் திணைக்களச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் திரட்டப்பட்டுப் பேணப்பட்ட கரையோரக் காவல் திணைக்களத்தின் எல்லா அல்லது எவரேனும் கரையோரக் காவல் அலுலர்களை, கரையோரக் காவல் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட கரையோரக் காவல் அலுவலர்களாகப் பெயர்குறிக்கலாம்.

(2) நான்காம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பினுள், கரையோரக் காவல் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட கரையோரக் காவல் அலுவலர் ஒருவர், -

(அ) 46 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு;

(ஆ) 51 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு;

(இ) 124 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு;

(ஈ) 126 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு;

(உ) 136 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு;

(ஊ) 137 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு;

(எ) 138 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு; அத்துடன்

(ஏ) 139 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறு;

தொடர்பில், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினால் ஒரு சமாதான அலுவலருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கின்ற நோக்கத்துக்காக மட்டும் அச்சட்டத்தின் கருத்துக்குட்பட ஒரு சமாதான அலுவலராகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவினால் கரையோரக் காவல் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட கரையோரக் காவல் அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டு அவர்கள்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களும் கடமைகளும், அத்தகைய தத்துவங்களும் கடமைகளும் 2009 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கரையோரக் காவல் திணைக்களச் சட்டத்தின் ஏற்பாடுகளினால் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை அல்லது அவர்கள்மீது சுமத்தப்படவில்லை என்பது எவ்வாறிருப்பினும், பிரயோகிக்கப்பட்டு நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இச்சட்டத்தின்கீழான தத்துவங்களும், கடமைகளும், கரையோரக் காவல் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட கரையோரக் காவல் அலுவலர்களினால் எந்த இடப்பரப்பில் பிரயோகிக்கப்பட்டு நிறைவேற்றப்படலாமோ அந்த இடப்பரப்பைக் குறித்துரைக்கலாம்.

(5) ஒரு பிடியாணையின்றிக் கைதொன்றைச் செய்கின்ற கரையோரக் காவல் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட கரையோரக் காவல் அலுவலர் ஒருவர், உடனடியாக —

(அ) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு அக்கைதை அறிவித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவ்வாறு கைதுசெய்யப்பட்ட ஆளை ஒரு பொலிசு அலுவலரின் கட்டுக்காப்புக்குக் கையளித்தல் வேண்டும்.

## பாகம் III

### விசா

பாகம் III இன் ஏற்புடைமை

**9.** பின்வருவோர் தவிர்ந்த ஆளொவ்வொருவருக்கும் இப்பாகம் ஏற்புடையதாதல் வேண்டும்:-

(அ) இலங்கைப் பிரசையொருவர்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் பாகம் I நின்கீழ் ஆக்கப்பட்ட அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் கட்டளையின் பயனைக்கொண்டு, இப்பாகத்தின் ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஆளொருவர்.

**10.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், இலங்கைப் பிரசையொருவரல்லாத ஆளொருவருக்கு, இலங்கையினுட் பிரவேசித்து குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதியின் போது இலங்கையில் தங்கியிருப்பதற்கு (ஓர் "இலங்கை விசா" எனக் குறிப்பீடுசெய்யப்படவேண்டிய) அனுமதியொன்றை வழங்கலாம். இலங்கை விசா

(2) (அ) ஒரு விசாவில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, ஐந்தாண்டுகளை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்காகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் அவ்விசாவானது வழங்கப்படலாம்.

(ஆ) ஒரு விசாவில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, ஐந்தாண்டுகளை விஞ்சுகின்ற ஆனால் பத்தாண்டுகளை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்காக, அவ்விசாவானது அமைச்சரின் அங்கீகாரத்துடன், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட காலவரையறைகள் எவ்வாறிருப்பினும், நிரந்தர வதிவிட விசாவொன்று, அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான ஒரு காலப்பகுதிக்காகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் ஆளொருவருக்கு வழங்கப்படலாம்.

(4) ஆளொருவர் அப்போதைக்கு இலங்கையிலுள்ளாரென்ற நிகழ்வு, அத்தகைய ஆளுக்கு ஒரு விசாவை அல்லது புறக்குறிப்பை

அளிப்பதனை அல்லது வழங்குவதனை, அல்லது அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட அத்தகைய விசாவில் அல்லது புறக்குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியை நீடிப்பதனைத் தடுத்தலாகாது.

இலங்கைக்குப் பயணிப்பதற்கு அல்லது இலங்கையில் தரித்திருப்ப தற்கு விசாவொன்று தேவைப்படுதல்

**11.** (1) இலங்கைப் பிரசையொருவரல்லாத ஆளொருவர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்றின்மூலம் அமைச்சரினால் 3 ஆம் பிரிவின்கீழ் விசா தேவைப்பாடுகளிலிருந்து அவருக்கு விலக்களிக்கப்பட்டிருந்தாலொழிய, செல்லுபடியான விசாவொன்றின்றி இலங்கைக்குப் பயணித்தலோ அல்லது இலங்கையில் தரித்திருத்தலோ ஆகாது.

(2) இப்பாகம் ஏற்புடையதாகின்றவரும் இலங்கையினுட் பிரவேசிக்கின்றவருமான ஆளொருவர் -

(அ) அவர் ஒரு விசா வைத்திருப்பவராக இராதிருப்பின், அவர் இலங்கையில் தரித்திருக்கும் காலம்வரை, அவர் உட்பிரவேசித்த நேரத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட புறக்குறிப்பின் நியதிநிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்; அல்லது

(ஆ) அவர் அத்தகைய ஏதேனும் விசாவை வைத்திருப்பவராக இருப்பின், அவர் இலங்கையில் தரித்திருக்கும் காலம்வரை விசாவின் நியதிநிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(3) இப்பாகமும் பாகங்கள் IV மற்றும் V என்பனவும் ஏற்புடையனவாகின்றவரும் இலங்கையினுட் பிரவேசிக்கின்றவருமான ஆளொருவர் -

(அ) அவர், ஒரு விசாவை அல்லது ஓர் இலத்திரனியல் பயண அதிகாரவளிப்பை வைத்திருப்பவராக இராதிருப்பின், அவர் உட்பிரவேசித்த நேரத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட புறக்குறிப்பின்மூலம் இலங்கையில் தரித்திருப்பதற்கு எக்காலப்பகுதிக்காக அவருக்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்காலப் பகுதி முடிவுற்றபின்னர் இலங்கையில் தரித்திருத்தலாகாது;

(ஆ) அவர், ஏதேனும் விசாவை அல்லது ஓர் இலத்திரனியல் பயண அதிகாரவளிப்பை வைத்திருப்பவராக இருப்பின், அவ்விசாவின்மூலம் அல்லது இலத்திரனியல் பயண அதிகாரவளிப்பின்மூலம் அல்லது அவ்விசாவின் ஏதேனும் நீடிப்பின் பயனைக்கொண்டு எக்காலப்பகுதிக்காக இலங்கையில் தரித்திருப்பதற்கு அவருக்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக் காலப்பகுதி முடிவுற்றபின்னர் இலங்கையில் தரித்திருத்தலாகாது; அல்லது

(இ) அவர் இலங்கையினுட் பிரவேசித்தல், பாகங்கள் IV அல்லது V என்பவற்றின் ஏற்பாடுகளை மீறுவதாக விருப்பின் இலங்கையில் தரித்திருத்தலாகாது.

(4) ஒரு விசாவை வழங்குதலானது, இச்சட்டத்தின் கீழ் உட்பிரவேச அனுமதியளிக்கப்படுவதற்கு வைத்திருப்பவரை அதன் காரணமாகவே உரித்துடையவராக்குவதில்லை.

(5) செல்லுபடியான விசாவொன்றை வைத்திருக்கின்ற இலங்கைப் பிரசையொருவரல்லாத ஆளொருவர் அல்லது இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மூலம் அமைச்சரினால் விசா தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள இலங்கைப் பிரசையொருவரல்லாத ஆளொருவர், இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு 49 ஆம் பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட உட்பிரவேசப் புறக்குறிப்பொன்றை உடையவராகவிருத்தல் வேண்டும்.

(6) வைத்திருப்பவருக்கு உட்பிரவேசப் புறக்குறிப்பு அளிக்கப்படின், விசா ஏதேனுமிருப்பின் அதன் அல்லது உட்பிரவேசப் புறக்குறிப்பின் நிபந்தனைகளுக்கிணங்க இலங்கையினுட் பிரவேசிப்பதற்கும் தங்கியிருப்பதற்கும் வைத்திருப்பவருக்கு அனுமதியுண்டு.

ஆளொருவர் ஒரு செல்லுபடியான விசாவை மட்டுமே வைத்திருக்கலாம்

**12.** ஆளொருவர் கொடுக்கப்பட்ட ஏதேனும் நேரத்தில் ஒரு செல்லுபடியான விசாவை மட்டுமே வைத்திருத்தல் வேண்டும்.

விசாவொன்றை வழங்குவதற்கு அல்லது வழங்க மறுப்பதற்குக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்குள்ள தத்துவம்

**13.** (1) ஆளொருவர் உரிமையென்றவகையாக ஒரு விசாவுக்கு உரித்துடையவரல்லர்.

(2) இச்சட்டத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, ஒரு விசா விண்ணப்பத்தைத் தீர்மானிப்பதில், அவரது தனித் தற்றுணிபின் படி,-

(அ) ஒரு விசாவை வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம்;

(ஆ) விண்ணப்பிக்கப்பட்ட விசாவின் வகுப்பு மற்றும் வகுதி எவ்வாறிருப்பினும், ஏதேனும் வகுப்பினதான, உபவகுப்பினதான, வகுதியினதான அல்லது உப வகுதியினதான விசாவொன்றை வழங்கலாம்;

(இ) வழங்கப்பட்ட விசாவின்மீது அத்தகைய நிபந்தனைகளை விதிக்கலாம் அல்லது நிபந்தனைகளை வேறுபடுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்; அல்லது

(ஈ) ஒரு விசாவுக்கான நீடிப்பை வழங்கலாம் அல்லது நீடிப்பை வழங்க மறுக்கலாம்.

விசாவின் வழங்குகை

**14.** கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, பின்வருமாறிருப்பின், ஆளொருவருக்கு விசாவொன்றை வழங்கலாம்:-

(அ) விதித்துரைக்கப்படுகின்றவாறான தேவைப்பாடுகளை அத்தகைய ஆள் திருப்திசெய்திருப்பின்;

(ஆ) அத்தகைய ஆள் எந்நோக்கத்துக்காக இலங்கையினுட் பிரவேசிக்கின்றாரோ அந்நோக்கத்தைக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அங்கீகரிப்பின்;

(இ) அவ்வாள் இலங்கையினுட் பிரவேசிப்பதற்காக ஏற்பாடுசெய்கின்ற ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டை அல்லது பயண ஆவணத்தை அவர் வைத்திருப்பின்;

(ஈ) அத்தகைய ஆள் இலங்கையில் அவரது பராமரிப்புக் காகவும் அவரது கடவுச்சீட்டை அல்லது பயண ஆவணத்தை வழங்கிய நாட்டுக்கு அவர் திரும்பிச்செல்வ தற்கான அவரது பயணச்செலவுக்கான கொடுப்பனவுக் காகவும் போதிய நிதிகளைக் கொண்டுள்ளாரெனக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி திருப்திப்படின்; அத்துடன்

(உ) இச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தகைமையீனத்துக்கு அத்தகைய ஆள் அமைந்தவராக இராதிருப்பின்.

ஒரு விசாவுக்கான விண்ணப்பம்

**15.** ஒரு விசாவைப் பெற்றுக்கொள்வதற்கு நாடுகின்ற ஆளொருவர், ஒழுங்குவிதிகளின்மூலம் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்ப தன்மூலம் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

விசாவின் வகுப்புக்கள்

**16.** (1) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட விசா பின்வரும் வகுப்பினவாக இருத்தல் வேண்டும்:-

(அ) வதிவு விசா;

(ஆ) நிரந்தர வதிவு விசா;

(இ) வருகை விசா; அத்துடன்

(ஈ) இடைப்பெயர்வு விசா.

(2) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் ஒழுங்கு விதிகள்மூலம் ஒரு விசாவின் உபவகுப்பை அறிமுகப்படுத்தலாம், இல்லாதாக்கலாம், திருத்தலாம் அல்லது இல்லாதொழிக்க லாம்.

(3) அமைச்சர், பணிப்புகளின்மூலம், ஒரு விசாவின் ஏதேனும் வகுப்பின்கீழ் அல்லது உபவகுப்பின்கீழ் விசாவொன்றின் ஏதேனும் வகுதியை அல்லது உபவகுதியை அறிமுகப்படுத்தலாம்.

ஒரு விசாவின் செல்லுபடிக் காலப்பகுதி

**17.** (1) பத்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றை வழங்கலாம்:-

(அ) ஒன்பது மாதங்களை விஞ்சாத அத்தகைய காலப் பகுதிக்காக எவரேனுமாளுக்கு ஒரு வருகை விசா;

(ஆ) இலங்கையினூடாகப் பயணிக்கும் ஆளொருவருக்கு ஓர் இடைப்பெயர்வு விசாவில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறாக முப்பது நாட்களை விஞ்சாதவொரு காலப் பகுதிக்காக அத்தகைய விசா; அல்லது

(இ) பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்காக எவரேனுமாளுக்கு ஒரு வதிவு விசா:

ஆயின், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, விசாவின் காலப்பகுதி ஐந்தாண்டுகளை விஞ்சுமிடத்து, 10 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(2) இப்பிரிவிலுள்ளதெதுவும், இலங்கைக்குக் குறித்தளிக்கப்பட்ட எவரேனும் இராஜதந்திரிக்கு, அத்தகைய இராஜதந்திரியின் பதவிக்காலப்பகுதிக்காக ஒரு வதிவு விசாவை வழங்குவதிலிருந்து கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியைத் தடுத்தலாகாது.

இடைக்கால விசா

**18.** கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, வதிவு விசாவுக்கான விண்ணப்பகாரரொருவரின் விண்ணப்பம் கவனத்துட்கொள்ளப் படுகையில் இலங்கையில் அவரின் சட்டமுறையான அந்தஸ்தைப் பேணுகின்ற நோக்கத்துக்காக, ஒருமாதத்துக்குக் குறைவான காலத்துக்குச் செல்லுபடியான இடைக்கால விசாவொன்றை வழங்கலாம்.

இலத்திரனியல் பயண அதிகார வளிப்பு

**19.** (1) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, உட்பிரவேச இடத்தில் குடிவரவு இசைவுக்கமைய, இலங்கைப் பிரசையொருவர் அல்லாதவரும், 3 ஆம் பிரிவின்கீழ் விசாவொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படாத வருமான ஆளொருவருக்கு, இலத்திரனியல் பயண அதிகாரவளிப்பு

எனக் குறிப்பீடுசெய்யப்படும் அங்கீகாரமொன்றின் மீது விசாவொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் குறுகியவொரு காலப்பகுதிக்காக இலங்கையில் பயணிப்பதற்கும் தங்கியிருப்ப தற்கும் அதிகாரமளிக்கலாம்.

(2) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இலத்திரனியற் பயண அதிகாரவளிப்பின் வகுதியை அல்லது வகையை மற்றும் அத்தகைய பயண அதிகாரவளிப்பின் செல்லுபடிக் காலப்பகுதியைக் குறித்துரைத்தல் வேண்டும்.

ஒரு விசாவுக்காக ஏற்புடையற் பாலனவான நிபந்தனைகள்

**20.** (1) ஒவ்வொரு விசாவும், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகள் எவையேனுமிருப்பின் அவற்றுக்கமைந்த தாகும்.

(2) ஒரு விசாவின் நிபந்தனைகள் -

(அ) தனிப் பயணத்தின்மீது, பல்புடைப் பயணங்களின்மீது அல்லது பல்லெண்ணிக்கையினவான பயணங்களின் மீது இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்க லாம்; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக அல்லது அக்காலப்பகுதியினுள் இலங்கையினுட் பிரவேசிப்ப தற்கு அனுமதியளிக்கலாம்; அல்லது

(இ) இலங்கையினுள் ஏதேனும் மேலதிக உட்பிரவேசத்தை வெளிப்படையாகத் தடைசெய்யலாம்.

(3) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய விபரங்களை, ஒரு விசாவுக்காக ஏற்புடையனவாக்கப்பட வேண்டிய நிபந்தனைகளை அல்லது விசாக்கள் தொடர்பான தகைமைகளைத் திரிபுபடுத்தலாம் அல்லது திருத்தலாம்.

(4) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் ஒழுங்கு விதிகள்மூலம், நிரந்தர வதிவு விசாவின் வழங்குகைக்கான நியதிநிபந்தனைகளை விதித்துரைக்கலாம்.

ஒரு விசாவுக்கான தகைமையீனங்கள்

**21.** (1) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சூழ்நிலைகளிற்றவிர, பின்வரும் எவரேனும் ஆளுக்கு விசாவெதுவும் வழங்கப்படுதலாகாது, அல்லது நீடிக்கப்படுதலாகாது:-

(அ) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில், தன்னையும் தனது தங்கிவாழுநர்களையும் பராமரிப்பதற்கு இயலாதுள்ளவர்;

(ஆ) சித்தசுவாதீனமற்ற ஆளொருவர் மற்றும் தனக்கும் ஏனையோருக்கும் அபாயமேற்படுத்தக்கூடியவர்;

(இ) மருத்துவக் காரணங்களுக்காக இலங்கையினுள் அனுமதிக்கப்படுவதற்கு விரும்பத்தக்கவரல்லாத ஆளொருவரென ஒரு விதித்துரைக்கப்பட்ட மருத்துவ அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டவர்;

(ஈ) ஒன்றில் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே, அபாயகரமான அவுடதங்கள், போதையூட்டும் அவுடதங்கள் அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்கள், சிறுவர் துர்ப்பிரயோகம், மனிதரைக் கள்ளமாகக் கடத்தல், மனித வியாபாரம், பயங்கரவாதம் அல்லது பணம் தூய்தாக்கல் என்பன தொடர்பிலான தவறுகளுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவர் அல்லது குற்றவழக்குத் தொடுக்கப்படுகின்றவர்;

(உ) மீளஒப்படைத்தல் தொடர்பாக இலங்கையில் வலுவிலிருந்த அல்லது வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கருத்துக்குட்பட மீளஒப்படைக்கத்தக்கவொரு தவறுக்காக இலங்கைக்கு வெளியே தண்டனைத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளவர்;

(ஊ) விபச்சாரத்துக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவர் அல்லது கூட்டிக்கொடுப்பவராகவுள்ளவர் அல்லது மற்றவர்களின் விபச்சாரத்தின்மீது வாழ்கின்ற ஆளொரு வராகவுள்ளவர்;

(எ) அதற்கென வழங்கப்பட்ட விசேடமான அல்லது பொதுவான பணிப்புகளின்மூலம் பொதுமக்கள் நலன் கருதி அமைச்சர் விதிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு தேவைப்பாடுகளை நிறைவேற்றத் தவறுகின்றவர்;

(ஏ) இச்சட்டத்தின் கீழ் வலுவிலுள்ள நாடுகடத்தற் கட்டளையொன்றின் விடயமாகவுள்ளவர் அல்லது இடைப்பெயர்விலுள்ள ஒரு நாடுகடத்தப்படுகின்ற வராகவுள்ளவர் அல்லது வேறொரு நாட்டினால் அப்புறப்படுத்தப்பட்டுள்ள இடைப்பெயர்விலுள்ள ஆளொருவராகவுள்ளவர்;

(ஐ) தடைசெய்யப்பட்டவொரு குடிவருபவராக அல்லது தடைசெய்யப்பட்டவொரு வருகையாளராகவுள்ளவரென 47 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மூலம் வெளிப்படுத்தப்பட்டவர்;

(ஒ) ஏதேனும் நோய்க்கெதிராகத் தடுப்பூசியேற்றப்பட்டி ராதவர் அல்லது அத்தகைய தடுப்பூசியேற்றப் படுவதற்கு அல்லது இச்சட்டத்தின் 56 ஆம் பிரிவின் கீழான வேறு ஏதேனும் தேவைப்பாட்டை நிறைவேற்று வதற்கு மறுத்துள்ளவர்;

(ஓ) ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறான அல்லது அமைச்சரினால் வழங்கப்பட்ட ஒரு கட்டளையில் அல்லது ஏதேனும் பணிப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு இணங்கியொழுகத் தவறு கின்றவர்;

(ஔ) நியாயமான காரணமின்றி இலங்கையில் வரம்புகடந்து தங்கியிருக்கின்ற ஆளொருவராகவுள்ளவர்;

(க) இயைபான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானத்தின்மூலம் ஐக்கிய நாடுகள் சபையின் திரட்டிய நிரலின் கீழ் பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவராக வுள்ளவர்;

(ஙு) இலங்கையிலிருந்து முன்னர் நாடுகடத்தப்பட்ட அல்லது அப்புறப்படுத்தப்பட்ட ஆளொருவராகவுள்ளவர் என்பதுடன் விசாவை வழங்கிய அல்லது விசாவை நீடித்த நேரத்தில் அத்தகைய ஆளுக்கெதிராகப் பயணத்தடையொன்று வலுவிலுள்ள ஆளொருவராக வுள்ளவர்; அல்லது

(ச) கட்டணமில்லாக் கரவுப்பயணியொருவராகவுள்ளவர்.

(2) இப்பிரிவுக்கு முரணாக வழங்கப்பட்ட அல்லது நீடிக்கப்பட்ட ஏதேனும் விசா, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வறிதான தென்றும் பயனற்றதென்றும் கருதப்படுதல் வேண்டும்.

குறித்தசில சூழ்நிலைகளில் பாதுகாப்பு அமைச்சின் விதப்புரை பெற்றுக் கொள்ளப் படுதல் வேண்டும்

**22.** அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கோரிக்கையின்பேரில், தேசியப் பந்தோபஸ்துக்கும் பொதுமக்கள் நலனுக்குமான ஏதேனும் அச்சுறுத்தலைக் கவனத்துட்கொண்டு, அத்தகைய அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட நாடுகளிலிருந்து வந்தடைகின்ற குறித்துரைக் கப்பட்டவோர் ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு விசாவொன்று வழங்கப்படுமுன்னர் பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக் கப்பட்ட அமைச்சரின் அமைச்சினது விதப்புரையைப் பெற்றுக் கொள்ளும்படி கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்குப் பணிப்பு களை வழங்கலாம்.

ஏதேனும் தகவலைக் கொடுத்துதவு வதற்கான தேவைப்பாடு

**23.** கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, விசாவொன்று வழங் கப்பட்டுள்ள அல்லது ஒரு விசாவை வழங்குவதற்கான அல்லது நீடிப்பதற்கான விண்ணப்பமொன்றைச் செய்துள்ள எவரேனு மாளை, அவ்விசாவை வழங்குவதற்கு அல்லது நீடிப்பதற்கு அவசியமெனக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி கருதக்கூடிய வாறான பயண ஆவணத்தையும் மற்றும் அத்தகைய வேறு விடயங் களையும் தகவலையும் அல்லது ஆவணங்களையும் கொடுத்து தவும்படி தேவைப்படுத்தலாம்.

**24.** (1) எவரேனுமாள் தொடர்பில் விசாவொன்றுக்கான விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து, கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அத்தகைய விசாவுக்காக விண்ணப்பிக்கும் ஆளை— அடையாளங் காண் தகவலையும் நிழற்படங்களையும் தேவைப் படுத்து வதற்கான தத்துவம்

(அ) அவரது நிழற்படத்தைக் கொடுத்துதவும்படியும்; அத்துடன்

(ஆ) அவரது அடையாளங்காண் தகவலை வழங்கும்படியும்,

தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட ஒவ்வொரு நிழற்படமும் அல்லது அடையாளங்காண் தகவலும் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பகாரர் அடையாளங்காண் தகவலை வழங்க மறுத்தால், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி விசாவொன்றுக்கான விண்ணப்பத்தை மறுக்கலாம்.

**25.** இச்சட்டத்தின்கீழ் எவரேனுமாளுக்கு வழங்கப்பட்ட விசாவொன்று, அத்தகைய ஆளினால் வைத்திருக்கப்பட்ட பயண ஆவணம் முடிவுறும் தேதிக்குமுன்னர் ஆகக்குறைந்தது இரண்டு மாதங்களுக்கு முன்னரேனுமுள்ள ஒரு தேதியாகவிருக்கவேண்டிய ஒரு தேதியன்று அத்தகைய விசா முடிவுறவேண்டியதாக அவ்வாறு வழங்கப்படுதல் வேண்டும். பயண ஆவணம் முடிவுறும் தேதிக்கு ஆகக் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு முன்னரேனுமுள்ள ஒரு தேதியில் விசா முடிவுறுதல் வேண்டும்

**26.** (1) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, அவரது தனித் தற்றுணிபில், ஏதேனும் விசாவின் ஏதேனும் நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு இணங்கியொழுகத்தவறியுள்ள ஆளொருவருக்கு வழங்கப்பட்ட அத்தகைய விசாவை அல்லது அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை இல்லாதாக்கலாம், வேறுபடுத்தலாம் அல்லது திருத்தலாம். ஒரு விசாவை இல்லா தாக்குவதற்கு, வேறு படுத்துவதற்கு அல்லது திருத்துவதற்குக் கட்டுப்பாட்டாளர் தலைமை யதிபதிக்குள்ள தத்துவம்

(2) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி ஏதேனும் விசாவை இல்லாதாக்குமிடத்து, வேறுபடுத்துமிடத்து அல்லது திருத்துமிடத்து, விடயத்துத்துகேற்ப, இல்லாதாக்குகை, வேறுபடுத்துகை அல்லது திருத்தம்பற்றிய அறிவித்தல் அவ்விசா வைத்திருப்பவருக்குச் சேர்ப்பிக்கப்படுவதனை அவர் செய்வித்தல் வேண்டும்.

*பிறழ்பிரதிநிதித்துவத்தினூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட விசாவை இல்லாதாக்குவதற்கான தத்துவம்*

**27.** (1) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியும் முக்கியமான நிகழ்வுகளைப் பிறழ்பிரதிநிதித்துவஞ்செய்தல் அல்லது மறைத்துவைத்தல் என்ற அடிப்படையிலும் எவரேனுமாளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் விசாவை இல்லாதாக்குதல் வேண்டும்.

(2) ஒரு விசாவைப் பெற்றுக்கொள்வதற்காக முக்கியமான விடயங்களைப் பிறழ்பிரதிநிதித்துவஞ்செய்கின்ற அல்லது மறைத்துவைக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*ஒரு விசாவின் செல்லுபடியாந்தன்மையை நீடித்தல்*

**28.** (1) இருபத்தைந்தாம் பிரிவில் எது எவ்வாறிருப்பினும், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி,-

(அ) வந்தடைந்த தேதியிலிருந்து ஒன்பது மாதங்களை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்காக வருகை விசாவொன்றின்; அத்துடன்

(ஆ) ஒரு தடவையில் ஐந்தாண்டுக் காலப்பகுதிக்காக வதிவு விசாவொன்றின்,

செல்லுபடியாந்தன்மையை நீடிக்கலாம்.

(2) இடைப்பெயர்வு விசாவொன்று நீடிக்கப்படுதலாகாது.

*ஒரு விசாவின் செல்லுபடியாந்தன்மை இல்லாதொழிதல்*

**29.** ஒவ்வொரு விசாவும் பின்வரும் சந்தர்ப்பங்களில் செல்லுபடியில்லாதொழிதல் வேண்டும்:-

(அ) இருபத்தெட்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான அத்தகைய நீடிப்புக்கமைய அத்தகைய விசா எக்காலப் பகுதிக்காக வழங்கப்பட்டதோ அக்காலப்பகுதி முடிவுறு வதன்மீது;

(ஆ) அத்தகைய விசா எந்நோக்கங்களுக்காக வழங்கப் பட்டதோ அந்நோக்கங்கள் இல்லாதொழிவதன்மீது;

(இ) அத்தகைய விசா எந்த நியதி அல்லது நிபந்தனைக் கமைய வழங்கப்பட்டதோ அந்த ஏதேனும் நியதி அல்லது நிபந்தனை இல்லாதொழிவதன்மீது;

(ஈ) அத்தகைய விசா எந்த நியதி அல்லது நிபந்தனைக் கமைய வழங்ப்பட்டதோ அந்த ஏதேனும் நியதி அல்லது நிபந்தனை நிறைவேற்றப்படாததன் மீது அல்லது மீறப்படுவதன்மீது; அல்லது

(உ) விசாவைத்திருப்பவர் இறப்பதன்மீது.

இலங்கையில் பிறந்தவரும் இலங்கைப் பிரசையொரு வரல்லாத வருமானவொரு பிள்ளைக்காக விசாவொன்றுக் கான தேவைப்பாடு

**30.** (1)(அ) இலங்கையில் பிறந்தவரும்; அத்துடன்

(ஆ) அவர் பிறந்த நேரத்தில் இலங்கைப் பிரசையல்லாத வருமான,

ஒரு பிள்ளை இலங்கையில் தரித்திருப்பதற்கு அவருக்கு அதிகார மளிக்கின்றவொரு விசா வழங்கப்பட்டுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவொரு விசா, அத்தகைய பிள்ளை பிறந்ததேதியிலிருந்து நாற்பத்திரெண்டு நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விசாவொன்றுக் கான அல்லது அதனைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்ப மொன்று,-

(அ) தகப்பனினால், தாயினால் அல்லது சட்டப் பாதுகாவ லரினால் செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒழுங்குவிதிகளின் மூலம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்ப மொன்றின்மேல், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அவர் தகுதியானதெனக் கருதக்கூடியவாறாக விசாவை நீடிக்கலாம்.

(5) ஒரு பிள்ளைக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ் நீடிக்கப்பட்ட விசா, அவரது பெற்றோருக்கு அல்லது சட்டப் பாதுகாவலருக்கு அளிக்கப்பட்ட விசாவின் செல்லுபடியாந்தன்மை இல்லாதொழிவதுடன் செல்லு படியானதாக இல்லாதொழிதல் வேண்டும்.

(6) ஒரு பிள்ளையின் பெற்றோருள் ஒருவர் அல்லது சட்டப் பாதுகாவலர், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பிள்ளை, விசா முடிவுற்றபின்னர் இலங்கையில் தரித்திராதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

ஒரு வாழ்க்கைத் துணைக்கு அல்லது தங்கி வாழுநருக்கு வழங்கப்பட்ட விசாவொன்றின் செல்லுபடி யாந்தன்மை இல்லா தொழிதல்

**31.** எவரேனுமாளுக்கு வழங்கப்பட்ட வதிவு விசா செல்லுபடி யானதாக இல்லாதொழிந்துள்ளவிடத்து, அவ்வாள் வதிவு விசாவொன்றை வைத்திருப்பவராகவுள்ளாரென்ற ஏதுவின்மீது மட்டுமே அவ்வாளின் வாழ்க்கைத்துணைக்கு அல்லது தங்கி வாழுநரொருவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் விசா செல்லு படியானதாக இல்லாதொழிதல் வேண்டும்.

ஒரு பிள்ளைக்கு வழங்கப்பட்ட விசா வொன்றின் செல்லு படியாந்தன்மை இல்லாதொழிதல்

**32.** ஒரு பிள்ளைக்கு வழங்கப்பட்ட வதிவு விசா, அப்பிள்ளை பதினாறு வயதை எய்தியபின்னர் செல்லுபடியானதாக இல்லா தொழிதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மேல், அத்தயை

வதிவு விசாவின் காலப்பகுதியை நீடிக்கலாம்; அவ்விசாவானது எக்காலப்பகுதிக்காக நீடிக்கப்படுகின்றதோ அக்காலப்பகுதிக்காக அது தொடர்ந்து செல்லுபடியானதாதல் வேண்டும்.

இலங்கைப் பிரசைகளாக இல்லா தொழிகின்ற ஆட்களுக்கான விசா தேவைப்பாடு

**33.** (1) (349 ஆம் அத்தியாயமான) பிரசாவுரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஓர் இலங்கைப் பிரசையாக இல்லாதொழிகின்ற வரும், அதன் பின்னர் இலங்கையில் தரித்திருப்பதற்கு உட்கருது கின்றவருமான ஆளொருவர், இலங்கையில் தரித்திருப்பதற்கு அவருக்கு அதிகாரமளிக்கின்ற விசாவொன்றுக்காக விதித்துரைக் கப்பட்ட முறையில் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று செய்யப் பட்டதன்மேலும் விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின் மேலும், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி விண்ணப்பகாரருக்கு இலங்கையில் தரித்திருப்பதற்கு அதிகாரமளிக்கின்ற விசா வொன்றை அவருக்கு வழங்கலாம்.

(3) (349 ஆம் அத்தியாயமான) பிரசாவுரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழிந்த பின்னர் விசாவொன்றின்றி இலங்கையில் தரித்திருக்கின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

கடல்கடந்த முன்னாள் இலங்கையர் களைப் பதிவுசெய்தல்

**34.** (1) அமைச்சர், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைய, (349 ஆம் அத்தியாயமான) பிரசாவுரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழிந்துள்ள ஆளொரு வரினால் விதித்துரைக்கப்பட்ட முறையில் அதற்கெனச் செய்யப்பட்ட வொரு விண்ணப்பத்தின்மேல், அத்தகைய ஆள் பின்வருமா றிருப்பின் அவரைக் கடல்கடந்த முன்னாள் இலங்கையராகப் பதிவு செய்யலாம்:-

(அ) முழுவயதையும் ஆற்றலையும் உடையவராக இருப்பதுடன் வேறொரு நாட்டின் பிரசையொருவராகவும் இருப்பின்; அல்லது

(ஆ) பந்தி (அ) விற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளின் பராயமடையாத பிள்ளையாகவிருப்பின்;

அத்துடன் அவருக்கு ஒரு நிரந்தர வதிவு விசா வழங்கப்படலாம்.

(2) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி பதிவுசெய்யப்பட்ட முன்னாள் இலங்கையர்கள் தொடர்பான விபரங்கள் அதில் பதியப்படவேண்டிய இடாப்பொன்றை வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் பாகம் III றின் நோக்கத்துக்காக, இலங்கைப் பிரசையொருவராகவிராத கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவரின் வாழ்க்கைத்துணை, கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவரைத் திருமணஞ்செய்துள்ள வெளிநாட்டினத்தவர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் வெளிநாட்டினத்தவராகவுள்ளவரும் இலங்கைப் பிரசையொருவரைத் திருமணஞ்செய்துள்ளவருமானவொரு வாழ்கைத் துணைக்கு ஏற்புடையற்பாலனவான எல்லா விசா உரித்துடைமைகளுக்கும் அதேமுறையில் அவர் உரித்துடையவராதலும் வேண்டும்.

(4) (349 ஆம் அத்தியாயமான) பிரசாவுரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழிந்துள்ள ஆளொருவராகவுள்ளவரும் கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கு உட்கருதுகின்றவருமான முன்னாள் இலங்கையரொருவரின் வாழ்க்கைத்துணை, (1) ஆம் உட்பிரிவின்கீழ் தனிவேறான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

(5) அமைச்சர், அத்தகைய கடல்கடந்த முன்னாள் இலங்கையர்களுக்கு நிரந்தர வதிவு விசா வழங்குவதற்கான கட்டணங்களையும், படிவங்களையும், முறையையும் விதித்துரைக்கலாம்.

*கடல்கடந்த முன்னாள் இலங்கையர் களின் சிறப்புரிமைகள்*

**35.** வேறேதேனும் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவர்,-

(அ) நிரந்தர வதிவு விசாவொன்றை உடைமையில் வைத்திருப்பதன் பயனைக்கொண்டு இலங்கையினுட் பிரவேசித்து அங்கு தரித்திருக்கலாம்;

(ஆ) பகிரங்க சேவை, நீதிச் சேவை மற்றும் மாகாணப் பகிரங்க சேவையிற்றவிர, இலங்கையில் தொழிலில் ஈடுபடலாம்;

(இ) இயைபான எழுத்திலான சட்டங்களின்கீழ் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறாக இலங்கையிலுள்ள ஆதனங்களை மரபுரிவழியாகப் பெறலாம், கைமாற்றலாம் அல்லது பராதீனப்படுத்தலாம்; அத்துடன்

(ஈ) ஏதேனும் சட்டமுறையான தொழிலில் அல்லது வர்த்தகச் செயற்பாட்டில் ஈடுபடலாம்.

*கடல்கடந்த முன்னாள் இலங்கையர் என்ற அந்தஸ்தைக் கைதுறத்தல்*

**36.** (1) முழுவயதையும் ஆற்றலையும் கொண்ட எவரேனும் கடல்கடந்த முன்னாள் இலங்கையர், கடல்கடந்த முன்னாள் இலங்கையரென்ற அவரது அந்தஸ்தைக் கைதுறந்து விதித்துரைக்கப்பட்ட முறையில் அமைச்சருக்கு வெளிப்படுத்துகையொன்றைச் செய்தால், அத்தகைய ஆள் கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவராக இல்லாதொழிதல் வேண்டும்.

(2) ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவராக இல்லாதொழியுமிடத்து, கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவராகப் பதிவுசெய்யப்பட்ட அவ்வாளின் ஒவ்வொரு பராயமடையாதவரும், அதன்மேல் கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவராக இல்லாதொழிதல் வேண்டும்.

(3) ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவராக இல்லாதொழியுமிடத்து, அத்தகைய ஆள்

தொடர்பிலும் அவரது எல்லாப் பிள்ளைகள் தொடர்பிலும் 34 ஆம் பிரிவின்கீழ் பேணப்பட்ட இடாப்பில் பதியப்பட்ட விபரங்கள் அத்தகைய இடாப்பிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் கடல்கடந்த முன்னாள் இலங்கையரென்ற அந்தஸ்தைக் கைதுறப்பதன்மேல், அவ்வாள் கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவரைத் திருமணஞ் செய்திருந்தாரென்ற ஏதுவின்மீது மட்டுமே, இலங்கைப் பிரசையொருவரல்லாத அவ்வாளின் வாழ்க்கைத்துணைக்கு அளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் விசா செல்லுபடியானதாக இல்லாதொழிதல் வேண்டும்.

*கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவராகப் பதிவுசெய்யப் பட்டமையை இல்லாதாக்குதல்*

**37.** (1) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அவர் பின்வருவனபற்றித் திருப்திப்படின், 34 ஆம் பிரிவின்கீழ் கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவராக ஆளொருவரின் பதிவை இல்லாதாக்கலாம்:-

(அ) கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவராகப் பதிவுசெய்யப்பட்டமை, மோசடி, பொய்யான பிரதிநிதித்துவம், அல்லது ஏதேனும் முக்கியமான நிகழ்வை மறைத்துவைத்தல் என்றவகையாகப் பெற்றுக்கொள்ளப் பட்டது;

(ஆ) கடல்கடந்த முன்னாள் இலங்கையர் இலங்கை அரசியலமைப்பை மீறிச் செயலாற்றியுள்ளார்;

(இ) கடல்கடந்த முன்னாள் இலங்கையர், இலங்கை எந்தப் போரில் ஈடுபடக்கூடுமோ அந்த ஏதேனும் போரின் போது, ஒரு பகைவனுடன் சட்டமுறையற்றவகையில் வியாபாரஞ்செய்துள்ளார் அல்லது தொடர்பு கொண்டுள்ளார் அல்லது அப்போரில் பகைவ னொருவனுக்கு உதவும் அத்தகைய முறையில் கொண்டுநடாத்தப் பட்டதென அவர் அறிந்திருந்த ஏதேனும் தொழிலில் அல்லது வர்த்தகச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார் அல்லது இணைந்துள்ளார்;

(ஈ) கடல்கடந்த முன்னாள் இலங்கையர், 34 ஆம் பிரிவின்கீழான பதிவின்பின்னர் ஐந்தாண்டுகளினுள், இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே இரண்டாண்டுகளுக்குக் குறையாதவொரு காலத்துக் கான மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார்;

(உ) இலங்கையின் இறைமையினதும் ஒருமைப்பாட்டினதும் மற்றும் தேசியப் பந்தோபஸ்தினதும் ஏதேனும் வெளிநாட்டுடன் இலங்கையின் நட்புறவான தொடர்பு களினதும் நலன் கருதி அல்லது பொதுமக்களின் நலன் கருதி அவ்வாறு செய்வது அவசியமாக வுள்ளவிடத்து; அல்லது

(ஊ) அத்தகைய ஆள் இலங்கையினுட் பிரவேசித்தலும் மீளஉட்பிரவேசித்தலும், இச்சட்டத்தின் 47 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை யொன்றின் பயனைக்கொண்டு தடைசெய்யப் பட்டுள்ளது அல்லது வரையறுக்கப்பட்டுள்ளது.

(2) ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கடல்கடந்த முன்னாள் இலங்கையர் ஒருவராக இல்லாதொழியுடமிடத்து, கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவராக பதிவுசெய்யப்பட்ட அவ்வாளின் ஒவ்வொரு பராயமடையாதவரும் அதன்மேல் கடல்கடந்த முன்னாள் இலங்கையரொருவராக இல்லாதொழிதல் வேண்டும்.

(3) ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கடல்கடந்த முன்னாள் இலங்கையொருவராக இல்லாதொழியுமிடத்து, அத்தகைய ஆள் மற்றும் அவருடைய பிள்ளைகள் தொடர்பில் பிரிவு 34 இன்கீழ் பேணப்படும் இடாப்பில் பதியப்பட்ட விபரங்கள் அத்தகைய இடாப்பிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் கடல்கடந்த முன்னாள் இலங்கைய ரொருவரின் அந்தஸ்தை இல்லாதாக்குவதன்மேல், இலங்கைப் பிரசையொருவராகவிராத ஆளின் வாழ்க்கைத் துணைக்கு அளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் அவ்வாள் கடல்கடந்த முன்னாள் இலங்கையொருவரை திருமணம் புரிந்துள்ளார் என்ற தனியே ஏதுவின் மீது செல்லுபடியானதாக இல்லாதொழிதல் வேண்டும்.

**38.** ஆளொருவர் அமைந்தவராகவுள்ள ஏதேனும் நாட்டின் சட்டத்தின்கீழ் அத்தகைய ஆள் அந்நாட்டினுள் உட்பிரவேசிப்பதற்கு அதிகாரமளிக்கின்ற விசாவொன்றைத் தனதுடமையில் வைத்திருப்பதற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அந்நாட்டின் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு விசாவொன்றை அவர் தனதுடைமையில் வைத்திருந்தாலொழிய, அத்தகைய ஆளுக்கு இடைப்பெயர்வு விசாவெதுவும் வழங்கப்படுதலாகாது.

ஓர் இடைப் பெயர்வு விசாவை வழங்குவதன் மீதான மட்டுப்பாடு

**39.** நாற்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் ஒழுங்குவதிகாரங்களின்மூலம் விதித்துரைக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்கமைய (1) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, ஒரு விசாவை வழங்குவதற்காக 20 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, நிபந்தனையொன்றாக, விசாவொன்றுக்கான விண்ணப்பகாரரை அல்லது கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட அவரது சார்பிலான ஆளொருவரை, கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையைக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியிடம் வைப்பிலிடுவதன்மூலம் அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையின் கொடுப்பனவுக்காக முறியொன்றை எழுதிநிறைவேற்றுவதன்மூலம் பிணைப் பொறுப்பைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலாம்.

விசாவின் வழங்குகை, பிணைப் பொறுப்பு கொடுத்து தவப்படுவதன் மீதான நிபந்தனைக் குட்படலாம்

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் எந்த ஆள் தொடர்பாகப் பிணைப்பொறுப்பு கொடுத்துதவப்பட்டுள்ளதோ அந்த எவரேனுமாளுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் விசாவின் ஏதேனும் நியதி அல்லது நிபந்தனை மீறப்படுமிடத்து அல்லது நிறைவேற்றப்படாதவிடத்து, அத்தகைய ஏதேனும் பிணைப் பொறுப்பின் முழுமையும் அல்லது பாகமும் அரசுக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

**40.** நாற்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் ஒழுங்குவதிகாரங்களின்மூலம் விதித்துரைக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்கமைய (1) பின்வரும் எல்லா அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பிலும் இப்பாகத்தின் நோக்கத்துக்காக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்:-

ஒழுங்கு விதிகள்

(அ) விதித்துரைக்கப்படவேண்டுமென இப்பாகத்தில் கூறப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம்;

(ஆ) ஒரு விசாவுக்காக விண்ணப்பங்களைச் செய்யும் படிவமும் முறையும், அத்தகைய விண்ணப்பங்களின் படிவம், அத்தகைய விண்ணப்பங்களுடன் இணைக்கப் படவேண்டிய நிழற்படங்களும் உயிரியளவைத் தகவலும் உட்பட்ட ஆவணங்கள் மற்றும் அவற்றின் கண் பதியப்படவேண்டிய விபரங்கள்;

(இ) எந்த அதிகாரியினால் விசாவொன்று அளிக்கப் படலாமோ அல்லது வழங்கப்படலாமோ அந்த அதிகாரி;

(ஈ) அத்தகைய விசாவை அளிப்பதற்கான அல்லது வழங்குவதற்கான கட்டளைக்கற்களும் அத்தகைய விசாவை மறுத்தலும்;

(உ) எவரேனுமாளுக்கு ஒரு விசாவை அளிக்கும் அல்லது வழங்கும் நோக்கத்துக்காக நிபந்தனையொன்றாக, ஏதேனுமொரு பணத்தொகையொன்றை வைப்புச் செய்வதன்மூலம் இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் இல்லாதொழிக்கப்பட்டு கோரும்போது வழங்கப்படும் பிணைப்பொறுப் பொன்றைக் கொடுத்துதவுதல்;

(ஊ) முப்பத்தொன்பதாம் பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் பிணைப்பொறுப்பின் முழுமை யையும் அல்லது அதன் பாகத்தை இழப்பித்தல்;

(எ) பொதுமக்கள் நலன்கருதி அவசியமென அமைச்சர் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனை களுட்பட அத்தகைய விசா எந்த நியதிநிபந்தனைகளுக் கமைய வழங்கப்படலாமோ அந்த நியதி நிபந்தனைகள்;

(ஏ) அத்தகைய விசாவை அல்லது அதன்கண் குறித் துரைக்கப்பட்ட எவையேனும் நியதிநிபந்தனைகளை இல்லாதாக்குதல், வேறுபடுத்துதல் அல்லது திருத்துதல், அத்தகைய விசாக்களின் படிவம் மற்றும் அவற்றின்கண் பதியப்படவேண்டிய விபரங்கள்;

(ஐ) அத்தகைய விசாவின் வழங்குகை தொடர்பிலான கட்டணங்களை விதித்தல், அறவிடுதல், கையுதிர்த்தல், அல்லது மீளளித்தல், அத்தகைய கட்டணங்களின் கொடுப்பனவிலிருந்து ஆளொருவருக்கு விதித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில் விலக்களித்தல் மற்றும் அச்சூழ்நிலைகளில் அத்தகைய கட்டணங்களை மீளளித்தல்;

(ஒ) ஒரு விசாவுக்காக அல்லது ஒரு விசாவின் நீடிப்புக்காக விண்ணப்பகாரரினால் கொடுத்துதவப்படவேண்டிய விபரங்களும், தகவலும், ஆவணங்களும்;

(ஓ) எவரேனுமாளுக்கு அத்தகைய விசாவை வழங்குவதற்கான நிபந்தனையொன்றாக, தங்கியிருக்கும் காலத்துக்காக அவர் உடனலக் காப்புறுதிக் காப்பீட்டைக் கொடுத்துதவுதலும், அத்தகைய உடனலக் காப்புறுதிக் காப்பீடு கொடுத்துதவப்படவேண்டிய முறையும்; அத்துடன்

(ஔ) இப்பாகத்திற் குறிப்பீடுசெய்யப்பட்ட கருமங்களின் அல்லது விடயங்களின் இடைநேர்விளைவான அல்லது அவற்றுடன் சம்பந்தப்பட்ட மற்றும் அவற்றுக்கு இயைபான எல்லாக் கருமங்களும்.

## பாகம் IV

## உட்பிரவேசமும் புறப்பாடும்

பாகம் IV இன் ஏற்புடைமை

***41.*** இப்பாகத்தின் ஏற்பாடுகள், இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு நாடுகின்ற அல்லது உட்பிரவேசிக்கின்ற ஆளொவ்வொருவருக்கும், அப்போதைக்கு வலுவிலுள்ளதும் பாகம் I இன்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையொன்றின் பயனைக்கொண்டு அத்தகைய ஆளுக்கு இப்பாகத்தின் ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தாலொழிய, ஏற்புடையனவாதல் வேண்டும்.

உட்பிரவேசத்துக்கான உரிமை

***42.*** (1) இலங்கைப் பிரசையொருவர் விசாவின்றி இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) எவரேனுமாள் இலங்கைப் பிரசையொருவராகவுள்ளாரென்பதை எண்பிப்பதற்கான பொறுப்பு அத்தகைய ஆளைச் சார்ந்ததாதல் வேண்டும்.

*இலங்கைப் பிரசையொருவர் அவரது இலங்கைப் பயண ஆவணத்தை உட்பிரவேச நுழைவாயிலில் காண்பிப்பதற்கு இயலாதவராகவுள்ள போது பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள்*

**43.** (1) இலங்கைப் பிரசையொருவர், இலங்கையில் அவரது பிரசாவுரிமை அந்தஸ்துப்பற்றிய சான்றாக, அவரது இலங்கைப் பயண ஆவணத்தை உட்பிரவேச நுழைவாயிலில் குடிவரவு அலுவலரொருவருக்குக் காண்பித்தல் வேண்டும்.

(2) அவரது இலங்கைப் பயண ஆவணத்தைக் காண்பிப்பதற்கு இயலாதுள்ளவரான இலங்கைப் பிரசையொருவர், இலங்கையில் அத்தகைய ஆளின் பிரசாவுரிமை அந்தஸ்தை நிச்சயிப்பதற்குக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் புலனாய்வுசெய்யப் படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நடாத்தப்பட்ட புலனாய்வொன்றின்பின்னர் இலங்கையில் அவ்வாளின் பிரசாவுரிமை அந்தஸ்துப்பற்றி கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி திருப்திப் படின், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி தகுதியெனக் கருதக் கூடியவாறான தற்காலிகப் பயண ஆவணமொன்றை வழங்குவதன்மூலம் அவ்வாளுக்கு இலங்கையினுட் பிரவேசிப்பதற்குக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அனுமதியளிக்கலாம்.

*இலங்கையினுட் பிரவேசிக்கும் மற்றும் இலங்கையை விட்டுநீங்கும் ஆட்களை அடையாளங் காணுதல்*

**44.** இலங்கையினுட் பிரவேசிக்கின்ற அல்லது இலங்கையை விட்டு நீங்குகின்ற ஆளொவ்வொருவரும், அவ்வாள் இலங்கைப் பிரசையொருவராகவுள்ளாரா அல்லது இல்லையாவென்பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக எவரேனும் குடிவரவு அலுவலருக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய தகவலை அவ்வலுவலருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

*அங்கீகரிக்கப்பட்ட உட்பிரவேச மற்றும் புறப்பாட்டு வாயில்கள்*

**45.** (1) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்றின்மூலம், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக (இதனகத்துப்பின்னர் ஓர் "அங்கீகரிக்கப்பட்ட வாயில்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அங்கீகரிக்கப்பட்டவோர் உட்பிரவேச வாயிலாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட புறப்பாட்டுவாயிலாக இலங்கையிலுள்ள ஏதேனுமிடத்தை வெளிப்படுத்தலாம்.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில், அங்கீகரிக்கப்பட்டவொரு வாயில் அல்லது அங்கீகரிக்கப்பட்டவொரு வாயிலின் ஏதேனும் பாகம், பொதுவாக உட்பிரவேசச் செய் முறைப்படுத்தலுக்காக அல்லது நிர்ணயிக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக மட்டும் அல்லது ஏதேனும் நாளில் நிர்ணயிக் கப்பட்ட காலப்பகுதிகளுக்காக மட்டும், அங்கீகரிக்கப்பட்டவோர் இடமாக இருத்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கலாம்.

(3) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில், அங்கீகரிக்கப்பட்டவொரு வாயில் அல்லது அங்கீகரிக்கப்பட்டவொரு வாயிலின் ஏதேனும் பாகம், பொதுவாகப் புறப்பாட்டுச் செய் முறைப்படுத்தலுக்காக அல்லது நிர்ணயிக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக மட்டும், அங்கீகரிக்கப்பட்டவோர் இடமாக இருத்தல் வேண்டுமெனக் குறித்துரைக்கலாம்.

(4) அமைச்சர் அவசரகால சந்தர்ப்பத்தின் போது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைமூலம், பின்வருவனவற்றுக் காக அங்கீகரிக்கப்பட்ட துறையொன்று அல்லது அங்கீகரிக்கப்பட்ட துறையின் ஏதேனும் பாகம் ஒன்று அங்கீகரிக்கப்பட்ட இடமொன்றாக இருத்தல் வேண்டும் -

(அ) உட்பிரவேச அல்லது புறப்பாட்டுச் செயல்முறைக்காக அல்லது பொதுவாக உட்பிரவேச மற்றும் புறப்பாட்டுச் செயல்முறையொன்றுக்காக; அல்லது

(ஆ) குறிப்பிட்ட ஆள் அல்லது ஆட்கள் வகுப்பொன்றின் தனிப்பட்ட மற்றும் புறநீங்கலான உட்பிரவேச அல்லது புறப்பாட்டுச் செயல்முறைக்காக மட்டும்:

ஆயின், அமைச்சர் விரைவானவளவு மற்றும் அத்தகைய கட்டளை ஆக்கியதிலிருந்து நாற்பது நாட்களுக்குப் பிந்தாமல் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் அத்தகைய கட்டளையை இடுதல் வேண்டுமென்பதுடன் பாராளுமன்றத்தினால் அத்தகைய அங்கீகாரத்துக்கான அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் கட்டளை அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட

எவற்றினதும் வலிதாந்தன்மைக்கு பங்கமின்றி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். கட்டளை இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்பட்ட தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(5) உட்பிரிவு (1), (2), (3) அல்லது (4) என்பவற்றுக்குப் பங்கமின்றி, உட்பிரிவு (2), (3) அல்லது (4) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஓராளின் அல்லது வகுப்பினரான ஆட்களின் தனிவேறான மற்றும் புறநீங்கலான உட்பிரவேச அல்லது புறப்பாட்டுச் செய்முறைப் படுத்தலுக்காக அல்லது வழமையான செய்முறைப்படுத்தல் நேரங்களுக்குவெளியே உட்பிரவேச அல்லது புறப்பாட்டுச் செய்முறைப்படுத்தலுக்காக ஆளொருவர் அல்லது காவுநரொருவர் கோருமிடத்து, கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, கோரிக்கையை விடுக்கின்ற அத்தகைய ஆளை அல்லது காவுநரை ஒழுங்கு விதிகளின்மூலம் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலஇடைவெளிகளிலும், அத்தகைய தொகைகளிலும் அல்லது வீதங்களிலும் நிருவாகக் கட்டண மொன்றைக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தும்படி தேவைப்படுத்தலாம்.

(6) நான்காம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் அல்லது காவுநர், பின்வருவனவற்றுக்காக நிருவாகக் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்:-

(அ) உட்பிரிவு (4) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவரின் அல்லது வகுப்பினரான ஆட்களின் தனிவேறான மற்றும் புறநீங்கலான உட்பிரவேச அல்லது புறப்பாட்டுச் செய்முறைப்படுத்தலின் நோக்கத்துக்காகவும்;

(ஆ) வழமையான செய்முறைப்படுத்தல் நேரங்களுக்கு வெளியே உட்பிரவேச அல்லது புறப்பாட்டுச் செய்முறைப்படுத்தலுக்காகவும்; அல்லது

(இ) அவ்விடத்தில் அல்லது அதன் பாகத்தில் குடிவரவு அலுவலர்களினால் புரியப்பட்ட குடிவரவு இசைவு சம்பந்தமாகவும்.

உட்பிரவேசமானது அங்கீகரிக்கப்பட்டவொரு நுழைவாயிலில் மட்டுமே இருத்தல் வேண்டும்

**46.** (1) இலங்கைப் பிரசையொருவருட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயில் தவிர்ந்த வேறேதேனுமிடத்தில் இலங்கையினுட் பிரவேசிக்கின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

(2) (அ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவசரநிலைமைச் சூழ்நிலைகளின் கீழ் இலங்கையினுட் பிரவேசிக்கின்ற ஆளொருவருக்கு ஏற்புடையனவாதலாகாது. அத்தகைய ஆள் செயல்முறைக்குகந்தவரை விரைவாக ஒரு குடிவரவு அலுவலருக்கு அல்லது ஒரு பொலிசு அலுவலருக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன் உட்பிரவேசச் செய்முறைப் படுத்தலுக்கு உட்படுதலும் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) விற் குறிப்பீடுசெய்யப்பட்ட குடிவரவு அலுவலர் அல்லது பொலிசு அலுவலர் அத்தகைய ஆளிடமிருந்தான கூற்றொன்றைப் பதிதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வந்தடைதல் பற்றிக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடுதலும் அத்தகைய ஆளை ஒரு நீதிவான்முன்னர் நிறுத்துதலும் வேண்டும்.

இலங்கையினுட் பிரவேசிப்பதனைத் தடை செய்வதற்கான அல்லது வரையறுப்பதற்கான தத்துவம்

**47.** (1) அமைச்சர் -

(அ) ஆளொருவர் அல்லது ஒரு வகுப்பினரான ஆட்கள், இலங்கையினுள் அனுமதிக்கப்படும் நோக்கங்களுக்காக, விடயத்துக்கேற்ப, விரும்பத்தகாத ஆளொருவராக அல்லது ஒரு வகுப்பினரான ஆட்களாக இருக்கலாமென அலுவலகமுறையான அல்லது இராஜதந்திர மூலங்களினூடாகத் தகவல் பெற்றுள்ளவிடத்து;

(ஆ) ஆளொருவர் இலங்கையில் சமாதானத்துக்கும் நல்லொழுங்குக்கும் அபாயமேற்படுத்தும் வகையில் நடந்துகொள்ளும் சாத்தியமுண்டென, அமைச்சர் போதியதெனக் கருதுகின்ற சான்றைப் பெற்றுள்ள விடத்து; அல்லது

(இ) ஆளொருவர் ஏதேனும் நாட்டில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு எத்தவறுக்காக மறியற்றண்டனைத் தீர்ப்பொன்று அளிக்கப்பட்டுள்ளதோ அத்தவறு

தொடர்பில் கட்டற்ற மன்னிப்பொன்றைப் பெற்றிருக்க வில்லையென அமைச்சர் போதியதெனக் கருதுகின்ற சான்றைப் பெற்றுள்ளவிடத்து,

அத்துடன் அதனோடு சம்மந்தப்பட்ட சூழ்நிலைகள் காரணமாக, தேசியப் பந்தோபஸ்து, ஆள்புல ஒருமைப்பாடு, பொதுமக்கள் காப்பு என்பவற்றின் நலன் கருதியும், குற்றச்செயல்களை அல்லது ஒழுங்கீனத்தைத் தடுப்பதற்காக அல்லது சுகாதாரத்தை அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாப்பதற்காக அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் பொருளாதார, கைத்தொழில், சமூக கல்விசார் அல்லது வேறு நிலைமைகள் காரணமாக இலங்கையினுள் அனுமதிக்கப் படுவதற்கு விரும்பத்தகாத ஆளொருவராகவுள்ளாரென அமைச்சரினால் கருதப்படுமிடத்து, அவர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் (2) ஆம் உட்பிரிவில் குறித் துரைக்கப்பட்ட நடவடிக்கை களுள் எவற்றையும் எடுக்கலாம்:

ஆயின், பந்திகள் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் ஏற்பாடுகள் இலங்கைப் பிரசையொருவருக்கு ஏற்புடையதாதலாகாது.

(2) அமைச்சர் -

(அ) ஒன்றில் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக அல்லது நிரந்தரமாக, இலங்கைப் பிரசையொருவர் தவிர்ந்த எவரேனுமாள் அல்லது வகுப்பினரான ஆட்கள் இலங்கையினுட் பிரவேசிப்பதனை அல்லது மீளஉட்பிரவேசிப்பதனை அல்லது இலங்கையில் தரித்திருப்பதனைத் தடைசெய்யலாம்;

(ஆ) கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் இலங்கையினுட் பிரவேசிக்கக்கூடிய, மீளஉட்பிரவேசிக் கக்கூடிய அல்லது இலங்கையில் தரித்திருக்கக்கூடிய இலங்கைப் பிரசையொருவர் தவிர்ந்த ஏதேனும் வகுப்பினரான ஆட்களின் என்ணிக்கையை வரை யறுக்கலாம்;

(இ) இலங்கையினுட் பிரவேசிக்கின்ற அல்லது மீள உட்பிரவேசிக்கின்ற இலங்கைப் பிரசைகள் தவிர்ந்த

எவரேனுமாள் அல்லது வகுப்பினரான ஆட்கள் எக்காலப்பகுதியின்போது அதன்கண் தரித்திருக்கக் கூடுமோ அக்காலப் பகுதியை வரையறுக்கலாம்;

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக மறுக்கின்ற அல்லது அவற்றை அசட்டைசெய்கின்ற எவரேனும் காவுநர்மூலம் இலங்கைக்குக் கொணரப்பட்ட இலங்கைப் பிரசையொருவர் தவிர்ந்த பயணிகள், அவசியமாகக்கூடியவாறான அத்தகைய காலத்துக்கு இலங்கையினுட் பிரவேசிப்பதனைத் தடைசெய்யலாம்; அல்லது

(உ) இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள இலங்கைப் பிரசை யொருவர் தவிர்ந்த எவரேனுமாள் அல்லது வகுப்பினரான ஆட்கள், இச்சட்டத்தின் நோக்கங்களுக் காகத் தடைசெய்யப்பட்டவொரு குடிவருபவராக அல்லது தடைசெய்யப்பட்டவொரு வருகையாளராக இருக்கின்றாரென அல்லது இருக்கின்றனரென வெளிப் படுத்தலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று இலங்கையினுள்ளான அல்லது இலங்கைக்கு வெளியேயான எவரேனுமாளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை மீறி இலங்கையினுட் பிரவேசிக்கின்ற, மீளஉட்பிரவேசிக்கின்ற அல்லது அங்கு தரித்திருக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன் மீது, இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் நான்காண்டுகளுக்கு மேற்படாததுமான மறியற்றண்டனைக் காலத்துக்கு ஆளாதலும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆளொருவருக்கெதிராக ஆக்கப்பட்ட கட்டளையிற் கூறப்பட்ட பெயரிலிருந்து வித்தியாசப்படுகின்றவொரு பெயரைக்கொண்டுள்ள ஒரு கடவுச்சீட்டின் பெயரிலிருந்து வித்தியாயசப்படுகின்றவொரு பெயரைக்கொண்டுள்ள ஒரு

கடவுச்சீட்டின் அல்லது வேறு பயண ஆவணத்தின் பாவனையின் மூலம் அவர் (4) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிகின்றவிடத்து, அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளுக்கு மேற்படாததுமான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கும் ஆளாதலும் வேண்டும்.

உட்பிரவேசிக்கும் நேரத்தில் தேவைப்பட்ட ஆவணங்கள்

**48.** (1) இலங்கைப் பிரசையொருவர்தவிர்ந்த ஆளொருவர், தனதுடைமையில் பின்வருவனவற்றைக் கொண்டிருந்தாலொழிய, இலங்கையினுட் பிரவேசித்தலாகாது:-

(அ) இப்பாகத்தின்கீழ் குடிவரவு அலுவலரொருவரினால் அவருக்கு அளிக்கப்பட்டதும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் புறக்குறிப்பொன்றைக் கொண்டுள்ளதுமான செல்லுபடியான கடவுச்சீட்டொன்று அல்லது பயண ஆவணமொன்று; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் அவ்வாறு தேவைப் படுத்தப்படின், இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அவருக்களிக்கப்பட்ட விசாவொன்று.

(2) இப்பிரிவினதும் 43 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகள், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினாலான விசாரணையொன் றின் பின்னர் தீர்மானிக்கப்பட்ட அவசரகாலச் சூழ்நிலைகளின்கீழ் இலங்கையினுட் பிரவேசிக்கின்ற ஆளொருவருக்கு ஏற்புடையன வாதலாகாது.

புறக்குறிப்புகள் பற்றிய தேவைப் பாடுகள்

**49.** (1) ஒவ்வொரு குடிவரவு அலுவலரும், உட்பிரவேச அல்லது புறப்பாட்டு இடத்தில் ஆளொருவரின் செல்லுபடியான கடவுச்சீட்டின்மீது அல்லது பயண ஆவணத்தின்மீது ஒன்றில் கையினாலான அல்லது இலத்திரனியற் புறக்குறிப்பொன்றை இடுவதில் உரிய விழிப்புக்கவனத்தைப் பிரயோகித்தல் வேண்டும்:

ஆயின், குடிவரவு அலுவலரொருவரினாலான இப்பாகத்தின் கீழ் செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது பயண ஆவணத்தின்

மீதான புறக்குறிப்பொன்று, இலங்கையினுட் பிரவேசித்து அங்கு தரித்திருப்பதற்கு விரும்புகின்றவரும், இப்பாகம் ஏற்புடையதாக வுள்ளவருமான ஆளிடமிருந்து தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) எவரேனுமாளுக்கு இப்பாகத்தின் கீழ் குடிவரவு அலுவலரொருவரினால் அளிக்கப்பட்ட ஒவ்வொரு புறக்குறிப்பும் –

(அ) அத்தகைய அலுவலரினால் கையினால் அல்லது இலத்திரனியல் முறையில் கையொப்பமிடப்படுதல் வேண்டும்;

(ஆ) விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) அத்தகைய ஆள் ஒரு விசாவை வைத்திருப்பதிலிருந்து விலக்களிக்கப்படின், அத்தகைய ஆள் எக்காலப் பகுதிக்காகவும் எந்நியதிநிபந்தனைகளுக்கமையவும் இலங்கையினுட் பிரவேசித்துத் தரித்திருக்கக்கூடுமோ அக்காலப்பகுதியையும் நியதிநிபந்தனைகளையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(3)(அ) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, இலங்கைப் பிரசையொருவராகவிராத ஆளொருவரை, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஓர் உட்பிரவேச இடத்தில், அவ்வாள் தொடர்பில் அரசாங்கம் உறக்கூடிய எவையேனும் செலவுகளை மீளக்கொடுப்பனவுசெய்வதற்காக விசேட சூழ்நிலைகளில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அத்தகைய பணத்தொகையை வைப்பிலிடுவன்மூலம் அத்தகைய பிணைப்பொறுப்பைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலாம்.

(ஆ) அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் இலங்கையில் வதிபவரும் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவருமான வேறெவரேனுமாளினால், இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளின் சார்பில் வைப்பிலிடப்படலாம்.

(இ) இவ்வுட்பிரிவின்கீழ் பிணைப்பொறுப்பு என்றவகையாக வைப்பிலிடப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் விதித்துரைக்கப்பட்ட முறையில் கையுதிர்க்கப்படுதல் வேண்டும்.

(ஈ) அமைச்சர், ஒழுங்குவிதிகளின்மூலம், பிணைப்பொறுப்பாக வைப்பிலிடப்படவேண்டிய அதிகபட்சப் பணத்தொகையையும் அத்தகைய பிணைப்பொறுப்பு கொடுத்துதவப்படக்கூடிய முறையையும் விதித்துரைக்கலாம்.

குறித்தசில ஆட்களுக்கு உட்பிரவேசத்துக்கான புறக்குறிப்பு அளிக்கப்படுதலாகாது

**50.** (1) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சூழ்நிலைகளிற்றவிர, பின்வருமாறுள்ளவரும் இலங்கைப் பிரசையொருவரல்லாதவருமான எவரேனுமாளுக்குப் புறக்குறிப் பெதுவும் அளிக்கப்படுதலாகாது:-

(அ) அத்தகைய ஏதேனும் உட்பிரவேசத்துக்கான புறக்குறிப்பை அளிப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ள அதிகாரியின் அபிப்பிராயத்தில், தன்னையும் தனது தங்கிவாழுநர்களையும் பராமரிப்பதற்கு இயலாதுள்ளவர்;

(ஆ) சித்தசுவாதீனமற்ற ஆளொருவராக இருப்பதுடன் தனக்கும் ஏனையோருக்கும் அபாயமேற்படுத்தக் கூடியவராகவுள்ளவர்;

(இ) மருத்துவக் காரணங்களுக்காக இலங்கையினுள் அனுமதிக்கப்படுவதற்கு விரும்பத்தகாதவரான ஆளொருவராகவுள்ளாரென விதித்துரைக்கப்பட்டவொரு மருத்துவ அலுவலரினால் சான்றுப்படுத்தப் பட்டுள்ளவர்;

(ஈ) ஒன்றில் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே, அபாயகரமான அவுடதங்கள், போதையூட்டும் அவுடதங்கள் அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்கள், சிறுவர் துர்ப்பிரயோகம், மனிதரைக் கள்ளமாகக் கடத்தல், மனித வியாபாரம் அல்லது பயங்கரவாதம் என்பன தொடர்பான தவறுகளுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவர் அல்லது குற்றவழக்குத் தொடுக்கப்படுகின்றவர்;

(ஊ) மீளஒப்படைத்தல் தொடர்பாக இலங்கையில் வலுவிலிருந்த அல்லது வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கருத்துக்குட்பட மீளஒப்படைக்கத்தக்கவொரு தவறுக்காக இலங்கைக்கு வெளியே தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவர்;

(ஊ) ஒரு விபச்சாரியாகவுள்ளவர் அல்லது கூட்டிக் கொடுப்பவராகவுள்ளவர் அல்லது மற்றவர்களின் விபச்சாரத்தின்மீது வாழ்கின்ற ஆளொருவராக வுள்ளவர்;

(எ) அதற்கென வழங்கப்பட்ட விசேடமான அல்லது பொதுவான அறிவுறுத்தல்களின்மூலம் பொதுமக்கள் நலன்கருதி அமைச்சர் விதிக்கக்கூடியவாறான அத்த கைய வேறு தேவைப்பாடுகளை நிறைவேற்றத் தவறுகின்றவர்;

(ஏ) இச்சட்டத்தின்கீழ் வலுவிலுள்ள ஒரு நாடுகடத்தற் கட்டளையின் அல்லது ஓர் அப்புறப்படுத்தற் கட்டளை யின் விடயமாகவுள்ளவர்;

(ஐ) கட்டணமில்லாக் கரவுப்பயணியொருவராகவுள்ளவர்;

(ஒ) தடைசெய்யப்பட்டவொரு குடிவருபவராக அல்லது தடைசெய்யப்பட்டவொரு வருகையாளராக உள்ளவ ரென 47 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரின் கட்டளைமூலம் வெளிப்படுத்தப்பட்டவர். அவ்வாள் தடைசெய்யப்பட்ட குடிவருபவரல்ல அல்லது தடைசெய்யப்பட்ட வருகை யாளரல்ல என்பதனை எண்பிக்கும் பொறுப்பு அவ்வாளின்மீதாதல் வேண்டும்;

(ஓ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டை அல்லது ஒரு பயண ஆவணத்தை வைத்திருப்பவரல்ல;

(ஔ) ஒரு விசா தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டா லொழிய, செல்லுபடியான விசாவொன்றை வைத்திருப் பவரல்ல;

(க) 56 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையினால் குறித்துரைக்கப்பட்டவாறு ஏதேனும் நோய்க்கெதிராகத் தடுப்பூசியேற்றப்படாதவராகவுள்ளார் அல்லது வேறு ஏதேனும் தேவைப்பாட்டை நிறைவேற்றாதவராக வுள்ளவர்;

(ங) இயைபான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானமொன்றினால் திரட்டிய நிரலின்கீழ் பெயர் குறிக்கப்பட்டவோர் ஆளாகவுள்ளவர்; அல்லது

(ச) வேறொரு நாட்டினால் அப்புறப்படுத்தப்பட்டுள்ள இடைப்பெயர்விலுள்ள நாடுகடத்தப்பட்டவராக வுள்ளவர் அல்லது இடைப்பெயர்விலுள்ள ஆளொரு வராகவுள்ளவர்.

(2) பிரிவு 19 இன்கீழ் இலத்திரனியற் பயண அதிகாரவளிப் பொன்றின் அளிப்பின் விடயத்தில், அத்தகைய அதிகாரவளிப்பு —

(அ) அத்தகைய ஆளினால் கொடுக்கப்பட்ட பொய்யான தகவலின் விளைவாகவும்;

(ஆ) முக்கியமான நிகழ்வுகளை வெளிப்படுத்துவதற்கு அவர் தவறியமையின் விளைவாகவும்; அத்துடன்

(இ) இலங்கையை வந்தடைகின்ற நோக்கம், குடிவரவு இசைவிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திலிருந்து வித்தியாசமானதாகவுள்ளதென்ற ஏதுவின் மீதும்,

பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின் அத்தகைய இலத்திரனியற் பயண அதிகாரவளிப்பு இல்லாதாக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை மீறி அளிக்கப்பட்ட ஏதேனும் புறக்குறிப்பு, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வறிதானதாகவும் பயனெதுவும் இல்லாததாகவும் கருதப்படுதல் வேண்டும்.

**51.** (1) அங்கீகரிக்கப்பட்ட புறப்பாட்டு வாயிலல்லாத ஏதேனுமிடத்திலிருந்து ஆளொருவர் இலங்கையை விட்டுநீங்குதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறும் ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார்.

அங்கீகரிக்கப் பட்டவொரு வாயிலிலிருந்து அல்லாது இலங்கையை விட்டு நீங்குதல்

**52.** (1) இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் இலங்கையை விட்டுநீங்குதல் வேண்டும்:-

(அ) அவர் இலங்கைப் பிரசையொருவராகவிருப்பின் மற்றும் இப்பாகத்தின்கீழ் குடிவரவு அலுவலரொருவரினால் அவருக்கு அளிக்கப்பட்டதும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் புறக்குறிப்பொன்றைக் கொண்டுள்ளதுமான செல்லுபடியான இலங்கைப் பயண ஆவணமொன்றைத் தனதுடைமையில் வைத்திருப்பின்; அல்லது

(ஆ) அவர் இலங்கைப் பிரசையொருவராக இராதிருப்பின், மற்றும் இப்பாகத்தின்கீழ் குடிவரவு அலுவலரொருவரினால் அவருக்கு அளிக்கப்பட்டதும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் புறக்குறிப்பொன்றைக் கொண்டுள்ளதுமான செல்லுபடியானவொரு கடவுச்சீட்டை அல்லது பயண ஆவணத்தைத் தனதுடைமையில் வைத்திருப்பின்.

இலங்கையிலிருந்து புறப்படுவதற்காகத் தேவைப்பட்ட கடவுச் சீட்டுகளும் புறக்குறிப்புக் களும்

(2) குடிவரவு அலுவலரொருவர், இலங்கையிலிருந்து புறப்படுவதற்கான தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளனவெனத் திருப்திப்படுவதன்மீது, ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வாயிலிலிருந்து இலங்கையை விட்டுநீங்கும் ஆளொவ்வொருவரினதும் செல்லுபடியான கடவுச்சீட்டில் அல்லது பயண ஆவணத்தில், விதித்துரைக்கப்படக்கூடியவாறாக, அத்தகைய புறக்குறிப்பைச் செய்தல் வேண்டும்.

**53.** விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சூழ்நிலைகளிற்றவிர, பின்வரும் சந்தர்ப்பங்களில் புறப்பாட்டுப் புறக்குறிப்பொன்று எவரேனுமாளுக்கு அளிக்கப்படுதலாகாது:-

புறப்பாடு பற்றிய புறக்குறிப்பு, குறித்தசில ஆட்களுக்கு அளிக்கப்படு தலாகாது

(அ) அத்தகைய ஆள் செல்லுபடியானவொரு கடவுச்சீட்டை அல்லது பயண ஆவணத்தை உடையவராகவிரா திருப்பின்;

(ஆ) 148 ஆம் பிரிவின்கீழ் ஒரு நீதிமன்றத்தினால் அத்தகைய ஆளுக்கெதிராக வழங்கப்பட்ட ஏதேனும் பயணத் தடையிருப்பின்;

(இ) இலங்கைப் பிரசையொருவராகவிருந்து அத்தகைய ஆளுக்கு ஏதேனும் நோய்க்கெதிராகத் தடுப்பூசியேற் றப்பட்டிராதிருப்பின் அல்லது சட்டத்தின் 56 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தேவைப்பாட்டை அவர் நிறைவேற்றாதிருப்பின்; அல்லது

(ஈ) இலங்கைப் பிரசையொருவராகவிருந்து 1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ் ஒரு நீதிமன்றத்தினால் அத்தகைய ஆளுக்கெதிராக வழங்கப்பட்ட பயணத்தடையொன்றிருப்பின்.

*உட்பிரவேசத்தின் போது ஓர் உட்பிரவேசத்துக்கான புறக்குறிப்பை அளிப்பதற்கு அல்லது மறுப்பதற்குக் குடிவரவு அலுவலருக்குள்ள தத்துவம்*

**54.** (1) ஓர் உட்பிரவேசத்துக்கான புறக்குறிப்பை நாடுகின்ற ஆளொருவரைக் குடிவரவு அலுவலரொருவர் விசாரணை செய்தல் வேண்டுமென்பதுடன் உட்பிரவேசத்துக்கான புறக்குறிப்பை அளிப்பதற்கான அல்லது அளிக்க மறுப்பதற்கான முடிபொன்றைச் செய்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விசாரணையொன்றில் குடிவரவு அலுவலர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையினது அல்லது ஒழுங்குவிதியினது நியதிகளின்படி அவ்வாள் இலங்கையினுட் பிரவேசிப்பதற்குத் தகவுடையவரென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) குடிவரவு அலுவலரொருவர் உட்பிரவேசத்துக்கான புறக்குறிப்பொன்றை அளிப்பதற்கு மறுத்தால், அத்தகைய ஆளினால் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் விசா இல்லாதாக்கப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாளுக்கு உட்பிரவேசம் மறுக்கப்படுதலும் வேண்டும்.

ஒரு புறப்பாட்டுப் புறக்குறிப்பை அளிப்பதற்கு அல்லது மறுப்பதற்குக் குடிவரவு அலுவலருக்குள்ள தத்துவம்

**55.** *(1)* குடிவரவு அலுவலரொருவர், ஒரு புறப்பாட்டுப் புறக்குறிப்பை நாடுகின்ற ஆளொருவரை விசாரணைசெய்தல் வேண்டுமென்பதுடன் அப்புறப்பாட்டுப் புறக்குறிப்பை அளிப்பதற்கான அல்லது அளிக்க மறுப்பதற்கான முடிபொன்றைச் செய்தலும் வேண்டும்; அத்துடன் செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லு படியான பயண ஆவணம் உட்பட்ட எல்லா ஆவணங்களையும், தேவைப்படின், செல்லுபடியான விசாவையும், தேவைப்படின் திரும்பிவருவதற்கான பயணச்சீட்டையும் குடிவரவு அலுவலருக்கு வழங்குதல் பயணியின் கடமையாதல் வேண்டும்.

*(2)* ஓராம் உட்பிரிவின்கீழான ஒரு விசாரணையில், குடிவரவு அலுவலர், இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின் அல்லது ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி அவ்வாள் இலங்கையிலிருந்து புறப்படுவதற்குத் தகவுடையவராவென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*(3)* அத்தகைய ஆளினால் காண்பிக்கப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒழுங்கீனத்தைக் குடிவரவு அலுவலரொருவர் கண்டுபிடித்தால், குடிவரவு அலுவலர் புறப்பாட்டுப் புறக்குறிப் பொன்றை மறுத்து அவ்வாளைப் பிரதான குடிவரவு அலுவலரிடம் ஆற்றுப்படுத்துதலும் வேண்டும்.

*(4)* இலங்கைப் பிரசையொருவருக்கு ஏதேனும் நோய்க்கெதிராகத் தடுப்பூசியேற்றப்பட்டிராவிடின் அல்லது 56 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மூலம் குறித்துரைக்கப்பட்டவாறு வேறேதேனும் தேவைப்பாட்டை அவர் நிறைவேற்றாதிருப்பின் அத்தகைய ஆளுக்குப் புறக்குறிப்பெதுவும் அளிக்கப்படுதலாகாது.

*(5)* மூன்றாம் உட்பிரிவுக்கமைய, கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, மேலதிகப் புலனாய்வுகளை நடாத்தி, புறப்பாட்டுப் புறக்குறிப்பை அளிப்பதா அல்லது அளிக்க மறுப்பதாவென்பது பற்றித் தீர்மானித்தல் வேண்டும்.

உடனல ஆபத்துக் காரணமாக ஆட்கள் இலங்கையை விட்டுநீங்குதல், இலங்கையினுட் பிரவேசித்தல் அல்லது இலங்கையில் தரித்திருத்தல் தொடர்பான மட்டுப்பாடு

**56.** (1) அமைச்சர், சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கோரிக்கையின்மீது இலங்கையினுட் பிரவேசிக்கின்ற அல்லது இலங்கையை விட்டுநீங்குகின்ற அல்லது ஒரு விசாவை வழங்குவதற்காக அல்லது நீடிப்பதற்காக விண்ணப்பிக்கின்ற இலங்கைப் பிரசைகள் அல்லாத ஆட்கள் தொடர்பாகக் கட்டளைமூலம் பின்வருமாறு வெளிப்படுத்தலாம்:-

(அ) குறிப்பிட்ட எவையேனும் நோய்களுக்கெதிராக தடுப்பூசியேற்றும்படியும்; அல்லது

(ஆ) உடனல ஆபத்துக் காரணமாகக் குறித்துரைக்கப்பட்டவாறான வேறேதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகும்படியும்.

(2) அவசர சூழ்நிலை எனும் சந்தர்ப்பத்தில், அமைச்சர் சுகாதாரம் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கோரிக்கையின்மீது இலங்கையினுட் பிரவேசிக்கின்ற அல்லது இலங்கையை விட்டு நீங்குகின்ற இலங்கைப் பிரசைகள் தொடர்பில் கட்டளைமூலம் பின்வருமாறு வெளிப்படுத்தலாம் -

(அ) ஏதேனும் குறித்த நோய்க்கெதிராக தடுப்பூசியேற்றும்படியும்; அல்லது

(ஆ) உடனல ஆபத்துக் காரணமாக குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகும்படியும்:

ஆயின், அமைச்சர் விரைவானளவு செயல்முறைக்குகந்தகாகவும் அத்தகைய கட்டளை ஆக்கியதிலிருந்து நாப்பது நாட்களுக்கும் பிந்தாமலும் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்னர் அத்தகைய கட்டளை இடப்படுதல் வேண்டுமென்பதுடன் பாராளுமன்றத்தினால் அத்தகைய அங்கீகாரத்துக்கான அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்டதான அத்தகைய ஏதேனும் கட்டளை அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி அத்தகைய அங்கீகாரம்

மறுக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும். கட்டளை இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்பட்ட தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

குறித்தசில சூழ்நிலை களில் உட்பிரவேசத்துக் கான புறக்குறிப்பு வறிதானதாதல் வேண்டும்

**57.** இச்சட்டத்தின்கீழ் எவரேனுமாள் தொடர்பில் நாடுகடத்தற் கட்டளையொன்று அல்லது அப்புறுப்படுத்தற் கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து, அவ்வாளுக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் புறக்குறிப்பு அல்லது வழங்கப்பட்ட விசாவொன்று இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வறிதானதாகவும் பயனெதுவும் இல்லாததாகவும் கருதப்படுதல் வேண்டும்.

கடிதங்களை அல்லது இலத்திரனியல் உபகரணங் களைச் சோதனை யிடுதல்

**58.** (1) இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள ஆளொருவர் -

(அ) அவர் இலங்கையினுட் பிரவேசிக்கும் அல்லது இலங்கையிலிருந்து புறப்படும் நேரத்தில், ஒரு குடிவரவு அலுவலரினால் தேவைப்படுத்தப்படின், அவர் ஏதேனும் எழுத்திலான ஆவணத்தை அல்லது ஏதேனும் இலத்திரனியல் உபகரணத்தைக் கொண்டுசெல்கின்றாராவென வெளிப்படுத்துகையொன்றைச் செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒரு குடிவரவு அலுவலரினால் தேவைப்படுத்தப்படின், அவ்வலுவலரினால் பரிசோதனை செய்யப்படுவதற்காக அத்தகைய ஆவணத்தை அல்லது இலத்திரனியல் உபகரணத்தைக் காண்பித்தல் வேண்டும்.

(2) குடிவரவு அலுவலரானவர் -

(அ) ஏதேனும் எழுத்திலான ஆவணத்துக்காக அல்லது இலத்திரனியல் உபகரணத்துக்காக அத்தகைய எவரேனுமாளையும் அவருக்குச் சொந்தமான அல்லது அவரது கட்டுப்பாட்டின்கீழுள்ள ஏதேனும் பயணப் பொதியையும் தேடலாம்;

(ஆ) இப்பிரிவின்கீழ் காண்பிக்கப்பட்ட அல்லது கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான ஆவணத்தை அல்லது இலத்திரனியல் உபகரணத்தைப் பரிசோதனை செய்யலாம்; அல்லது

(இ) குடிவரவு அலுவலர் ஏதேனும் எழுத்திலான ஆவணத்தின் அலல்து இலத்திரனியல் உபகரணத்தின் ஏதேனும் தேடுதலை அல்லது பரிசோதனையை இறுதியாக்கும்வரை அத்தகைய ஆளைத் தடுத்து வைக்கலாம்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "எழுத்திலான ஆவணம்" என்பது, ஏதேனும் கடிதத்தையும், எழுத்திலான செய்திகளையும், குறிப்பறிக்கைகளையும், வரைபடத்தையும், நிழற்படத்தையும், அல்லது ஏதேனும் படவகையான குறிப்பீட்டையும் உள்ளடக்கும்.

இலங்கையினுட் பிரவேசிக்கும் இடம்

**59.** ஏதேனும் வானூர்தியில் அல்லது கலத்தில் இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலை வந்தடைகின்ற ஆளொருவர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இலங்கையினுட் பிரவேசிப்பதற்குக் குடிவரவு அலுவலரொருவரினால் அவ்வாளுக்குப் புறக்குறிப்பொன்று வழங்கப்படுகின்றபோது மட்டுமே இலங்கையினுட் பிரவேசித்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

விதிவிலக்கான சூழ்நிலைகளில் உட்பிரவேசத்தை அனுமதிப்பதற்கான தத்துவம்

**60.** (1) குடிவரவு அலுவலரொருவர், ஒரு மருத்துவ அவசரநிலைமை அல்லது வேறேதேனும் அவசரநிலைமை உண்டென அவர் திருப்திப்படின், எவரேனுமாள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உட்பிரவேசிப்பதற்குத் தடைசெய்யப்பட்டுள்ளாராயினும், அத்தகைய அவசரநிலைமையைக் கவனிப்பதற்குத் தேவைப்படுகின்ற அத்தகைய காலத்துக்கு அத்தகைய ஆளுக்கான உட்பிரவேசத்தை அனுமதிக்கலாம்:

ஆயின், அத்தகைய உட்பிரவேசத்துக்கான காரணங்கள் இல்லாதொழியும்போது அத்தகைய ஆள் இலங்கையிலிருந்து உடனடியாக அப்புறப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் மருத்துவ மற்றும் பிணைப்பொறுப்புச் செலவுகளுட்பட அத்தகைய ஆளின் உட்பிரவேசம், தங்கியிருக்கை மற்றும் அப்புறப்படுத்துகை தொடர்பான எல்லாச் செலவுகளும் அத்தகைய ஆளை இலங்கைக்கு இடம்பெயர்த்த காவுநரினால் பொறுக்கப்படுதலும் வேண்டும்.

(2) குடிவரவு அலுவலரொருவர், மருத்துவ அவசர நிலைமையை உடையவரென உரிமைகோருகின்ற எவரேனுமாளை, அத்தகைய உரிமைக்கோரிக்கை பற்றிய ஏதேனும் ஐயமிருப்பின், விதித்துரைக்கப்பட்டவொரு மருத்துவ அலுவலரினாலான மருத்துவப் பரிசோதனையொன்றுக்கு அமைந்தவராக்கலாம்.

ஒழுங்கு விதிகள்

**61.** (1) பின்வரும் எல்லா அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் இப்பாகத்தினது அல்லது பாகம் V தினது நோக்கங்களுக்காக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்:-

(அ) விதித்துரைக்கப்படவேண்டுமென இப்பாகத்தில் அல்லது பாகம் V இல் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம்;

(ஆ) இப்பாகத்தின்கீழ் அல்லது பாகம் V இன்கீழ் புறக்குறிப்புகளை அளித்தல், அத்தகைய புறக்குறிப்புகளின் படிவம், பொதுமக்கள் நலன்கருதி அமைச்சர் அவசியமெனக் கருதக்கூடியவாறான நியதிநிபந்தனைகளுட்பட எந்த நியதிநிபந்தனைகளுக்கமைய புறக்குறிப்பொன்று அளிக்கப்படலாமோ அந்த நியதிநிபந்தனைகள், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியின் தனித் தற்றுணிபில் அல்லது குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில் அத்தகைய புறக்குறிப்புகளை அல்லது அவற்றின்கண் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் நியதிநிபந்தனைகளை இல்லாதாக்குதல், வேறுபடுத்துதல், அல்லது திருத்துதல், மற்றும் அத்தகைய புறக்குறிப்பில் பதியப்படவேண்டிய விபரங்கள்;

(இ) 47 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஆட்களின் அத்தகைய ஏதேனும் வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த எவரேனுமாள் விசாவொன்றைத் தனதுடைமையில் வைத்திருந்தாலொழிய, அத்தகைய ஆள் இலங்கையினுட் பிரவேசிப்பதனைத் தடைசெய்தல்;

(ஈ) அத்தகைய ஆட்கள் இலங்கைக்கு வெளியே திறனற்ற வேலையாளர்களாகத் தொழிலுக்கு ஆட்சேர்க்கப் படும்போது, அத்தகைய ஆட்களின் ஆட்சேர்ப்பு, அத்தகைய ஆட்சேர்ப்புகளை ஆளுகின்ற ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நிறைவேற்றப்பட்டிருந்தா லொழிய, இலங்கையிலிருந்து புறப்படுவதனைத் தடைசெய்தல்;

(உ) இப்பாகத்தின்கீழ் அல்லது பாகம் V இன்கீழ் ஆட் களினால் கொடுத்துவப்படவேண்டிய விபரத்திரட்டுக ளும் வழங்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட தகவலும்;

(ஊ) ஏதேனும் வைத்திருத்தல் நிலையத்தில் அல்லது வைத்திருத்தற் செயலிடத்தில் பேணப்படவேண்டிய நிலைமைகளும் அத்தகைய நிலையங்களை நிருவகிக் கின்ற முறையும்;

(எ) ஏதேனும் நுழைவாயிலை வந்தடையும் நேரத்தில் ஆட்களின் மருத்துவப் பரிசோதனைக்கான நடவடிக்கைமுறை;

(ஏ) கப்பலேறுதல் மற்றும் கப்பலிலிருந்து இறங்குதல் பற்றிய அட்டைகளில் உள்ளடக்கப்படவேண்டிய தகவல்; அத்துடன்

(ஐ) இப்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கருமங்களின் அல்லது விடயங்களின் இடைநேர்விளைவான அல்லது அவற்றுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "வெளிநாட்டரசு" என்பது, இலங்கையின் ஆள்புல எல்லைகளுக்கப்பாலான ஏதேனும் நாட்டில், குடியேற்றநாட்டில், மாகாணத்தில் அல்லது அவற்றின்மீது அல்லது ஆட்களின்மீது அரசாங்கத்தின் தத்துவங்களைப் பிரயோகிக்கின்ற அல்லது பிரயோகிப்பதாக ஊகிக்கப்படுகின்ற எவரேனும் ஆளையும் ஆட்களையும் உள்ளடக்கும்.

பாகம் V

## இலங்கையை வந்தடைவதன்மீதும் இலங்கையிலிருந்து புறப்படுவதன்மீதுமான நடவடிக்கைமுறை

இப்பாகத்தின் ஏற்புடைமை

**62.** இப்பாகத்தின் ஏற்பாடுகள், இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு நாடுகின்ற அல்லது இலங்கையினுட் பிரவேசிக்கின்ற ஒவ்வோராளுக்கும், அப்போதைக்கு வலுவிலுள்ளதும் பாகம் I நின்கீழ் ஆக்கப்பட்டதுமான ஏதேனும் கட்டளையின் பயனைக் கொண்டு இப்பாகத்தின் ஏற்பாடுகளிலிருந்து அவர் விலக்களிக்கப்பட்டாலொழிய, ஏற்புடையனவாதல் வேண்டும்.

குடிவரவுச் சமிக்ஞை

**63.** (1) இலங்கையை வந்தடைகின்ற அல்லது இலங்கையை உடனடியாக விட்டுநீங்கவுள்ள ஒவ்வொரு கலத்தினதும் கப்பற்றலைவர், விதித்துரைக்கப்பட்ட குடிவரவுச் சமிக்ஞையை உயர்த்துதல் வேண்டுமென்பதுடன் அதனைக் கீழே இழுத்துவிடும்படி குடிவரவு அலுவலரொருவரினால் அதிகாரமளிக்கப்படும்வரை அச்சமிக்ஞையை வெளிக்காட்டிவைத்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற ஒரு கலத்தின் கப்பற்றலைவர் தவறொன்றைப் புரிகின்றார்.

இலங்கையை வந்தடைகின்ற அல்லது இலங்கையிலிருந்து புறப்படுகின்ற வானூர்திகள்

**64.** (1) இலங்கையை வந்தடைகின்ற அல்லது இலங்கையை விட்டுநீங்குகின்ற ஒவ்வொரு வானூர்தியினதும் பணிமுதல்வர் ஓர் அங்கீகரிக்கப்பட்ட வானூர்திநிலையத்தில் அவரது வானூர்தியைத் தரையிறக்குதல் வேண்டும் அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட வானூர்திநிலையத்திலிருந்து பறத்தலை ஆரம்பித்தல் வேண்டும்.

(2) நியாயமான காரணமின்றி (1) ஆம் உட்பிரிவை மீறுகின்ற வானூர்தியொன்றின் பணிமுதல்வர் தவறொன்றைப் புரிகின்றார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு இடப்பரப்பு அல்லது வலயம்

**65.** (1) இயைபான சொந்தக்காரராக அல்லது குடியிருப்பாளராக 45 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வாயிலின் சொந்தக்காரரை அல்லது குடியிருப்பாளரைப் பின்வருமாறு செய்யும்படி தேவைப்படுத்தி அமைச்சர் எழுத்திலான அறிவித்தலொன்றை வழங்கலாம்:-

(அ) அமைச்சரினால் பணிக்கப்பட்டவாறு இடப்பரப்பொன்றைக் குடிவரவு இடப்பரப்பொன்றாக அல்லது வலயமாகப் பெயர்குறிக்கும்படியும்;

(ஆ) இயைபான சொந்தக்காரரின் அல்லது குடியிருப்பாளரின் செலவில், குடிவரவு இடப்பரப்பில் அல்லது வலயத்தில், குடிவரவு இடப்பரப்பின் அல்லது வலயத்தின் சுற்றளவினுள் அல்லது சுற்றளவில் அவர்கள் சமுகமாயிருப்பதனை அவர்களின் கடமைகள் தேவைப்படுத்துகின்ற குடிவரவு அலுவலர்களுக்கு அத்தகைய வசதிகளை வழங்குதலுட்பட, குடிவரவு இடப்பரப்பின் அல்லது வலயத்தின் முறையான, பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான பணியாற்றுகைக்கு அவசியமென அமைச்சர் கருதுகின்றவாறான அத்தகைய வசதிகளையும் வளங்களையும் வழங்கும்படியும் பேணும்படியும்; அத்துடன்

(இ) குடிவரவு அலுவலகங்களையும் செயலிடங்களையும் குடிவரவு இடப்பரப்பினுள் அல்லது வலயத்தினுள் தாபிப்பதற்கு அனுமதிக்கும்படியும்.

(2) பின்வருவனவற்றுக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எழுத்திலான பணிப்புகளை அமைச்சர் இயைபான சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு வழங்கலாம்:-

(அ) இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கும்; அல்லது

(ஆ) குடிவரவு மற்றும் குடியகல்வு இடப்பரப்பின் அல்லது வலயத்தின் முறையான, பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான பணியாற்றுகைக்காகவும்.

(3) இயைபான சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட எழுத்திலான அறிவித்தலுக்கு அல்லது பணிப்புக்கு இணங்கி யொழுகுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் இயைபான சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கும் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் அல்லது அதன் பாகத்துக்கு ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத மேலதிகக் குற்றப்பணத்துக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழான தவறொன்று, விடயத்துக் கேற்ப, ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அல்லது குழுமத்தினால் புரியப்படுமிடத்து, தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது குழுமத்தின் பணிப்பாளர், முகாமையாளர், பங்காளர் அல்லது வேறு ஒத்த அலுவலர் ஒருவராகவுள்ள எவரேனுமாள், அத்தகைய தவறு அவர் அறியாமல் அல்லது அவரது உட்கையின்றிப் புரியப்பட்டதென அல்லது அவரது பணிகளின் தன்மையையும் விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அவர் பிரயோகித்திருக்கவேண்டிய உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் தான் பிரயோகித்தாரென அத்தகைய ஆள் எண்பித்தாலொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவில், எவையேனும் வளவுகள் அல்லது இடம் தொடர்பாகச் "சொந்தக்காரர்" என்பது, அவ்வளவுகளில் அல்லது இடத்தில் மரணச்சொத்தொன்றை அல்லது அக்கறையொன்றைக் கொண்டுள்ளவரும் அத்தகைய வளவுகளினுள் அல்லது இடத்தினுள் வேறு ஆள் பிரவேசிப்பதற்கு அவரது அனுமதி அவசியமாகவுள்ளதுமான எவரேனுமாள் என்று பொருளாகும்.

**66.** (1) குடிவரவு இடப்பரப்பினுள் அல்லது வலயத்தினுள் பிரவேசிக்கின்ற எல்லா வந்தடைகின்ற பயணிகளும் தாமதமின்றி ஒரு குடிவரவு அலுவலர் முன்னர் தோன்றுதல் வேண்டும்.

*குடிவரவு இடப் பரப்பினுள் அல்லது வலயத்தினுள் பிரவேசிக்கின்ற பயணிகளினால் பின்பற்றப்பட வேண்டிய சம்பிரதாயங் கள்*

(2) குடிவரவு இடப்பரப்பில் அல்லது வலயத்தில் உள்ள எல்லா ஆட்களும் குடிவரவு அலுவலர்களின் பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

**67.** (1) உட்பிரவேச அனுமதிக்காக விண்ணப்பிக்கின்ற ஆளொருவர், அவரிடமிருந்து அடையாளங்காண் தகவல்கள் சேகரிக்கப்படுவதற்கு அனுமதியளித்தல் வேண்டும்.

*உட்பிரவேச அனுமதிக்காக விண்ணப் பிக்கின்ற ஆளொருவர் அடையாளங் காண் தகவல்கள் பெறப்படு வதற்கு அனுமதி யளித்தல்*

(2) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அல்லது குடிவரவு அலுவலரொருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சேகரிக்கப்பட்ட அடையாளங்காண் தகவல்களைப் பகுப்பாய்வுசெய்யலாமென்பதுடன் அவ்வாளுக்கு இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்படவேண்டுமா அல்லது இல்லையா என்பதுபற்றி முடிபுசெய்யலாம்.

(3) அடையாளங்காண் தகவல்களைச் சேகரிப்பதற்கு அவ்வாள் அனுமதியளிக்கத் தவறின், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அல்லது ஒரு குடிவரவு அலுவலர் அவ்வாளுக்கு உட்பிரவேச அனுமதியளிப்பதற்கு மறுக்கலாம்.

(4) ஓராம் உட்பிரிவிலுள்ள தேவைப்பாடு, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிங்க அடையாளங்காண் தகவல்களை வழங்குவதிலிருந்து அவ்வாளுக்கு விலக்களிக்கப்பட்டிருப்பின், ஏற்புடையதாகாது.

(5) இப்பிரிவின்கீழ் அடையாளங்காண் தகவல்களைச் சேகரிப்பதற்கான நடைமுறை அமைச்சரினால் விதித்துரைக்கப் பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

இலங்கையை விட்டுநீங்கும் இலங்கைப் பிரசை யொருவருட் பட்ட ஆட்கள், அடையாளங் காண் நோக்கத்துக்காக தகவல்கள் பெறப்படு வதற்கு அனுமதியளித் தல்

**68.** (1) இலங்கைப் பிரசையொருவருட்பட இலங்கையை விட்டுநீங்குகின்ற ஆளொருவர், அடையாளங்காண் நோக்கத் துக்காக அவரிடமிருந்து அடையாளங்காண் தகவல்கள் பெறப் படுவதற்கு அனுமதியளித்தல் வேண்டும்.

(2) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அல்லது குடிவரவு அலுவலரொருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் பெறப்பட்ட அடை யாளங்காண் தகவல்களைப் பகுப்பாய்வுசெய்யலாமென்பதுடன் அவ்வாள் இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு அனுமதிக் கப்படவேண்டுமா அல்லது இல்லையாவென்பதைத் தீர்மானிக்க லாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் அடையாளங் காண் தகவல்களை வழங்குவதிலிருந்து விலக்களிக்கப்பட்டி ருப்பின், (1) ஆம் உட்பிரிவிலுள்ள தேவைப்பாடு ஏற்புடைய தாவதில்லை.

(4) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் அடையாளங் காண் தகவல்கள் பெறப்படுவதனை அனுமதிப்பதற்குத் தவறினால், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அல்லது ஒரு குடிவரவு அலுவலர், அத்தகைய ஆளுக்குப் புறப்பாட்டு அனுமதியை வழங்க மறுக்கலாம்.

(5) இப்பிரிவின்கீழ் அடையாளங்காண் தகவல்களைப் பெறுவதற்கான நடைமுறை அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்ட வாறாகவிருத்தல் வேண்டும்.

**இலங்கையை வந்தடையவுள்ள அல்லது இலங்கையிலிருந்து புறப்படுவதற்குள்ள காவுநர்களின் பயணிகளினதும் சிப்பந்திகளினதும் தகவல்களை வழங்குதல்**

**69.** (1) இலங்கையை வந்தடையவுள்ள அல்லது இலங்கையிலிருந்து புறப்படுவதற்குள்ள ஒவ்வொரு காவுநரினதும் கப்பற்றலைவர், பணிமுதல்வர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமர்த்துநர், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் நியாயமான முன்னறிவித்தல் கொடுக்கப்படுவதன்மேல் காவுநர் இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்டவொரு கடற்றுறையை அல்லது விமான நிலையத்தை வந்தடையும் அல்லது அதிலிருந்து புறப்படும் நேரத்தில் காவுநரிலுள்ள அல்லது காவுநரிலிருக்கவேண்டிய சிப்பந்திகளும் பயணிகளும்பற்றி விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் பின்வரும் தகவல்களுள் ஒன்றை அல்லது இரண்டையும் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்:-

(அ) முற்கூட்டிய பயணித் தகவல்கள் அல்லது ஊடாட்ட முற்கூட்டிய பயணித் தகவல்கள்; அல்லது

(ஆ) பயணிப் பெயர்ப் பதிவேட்டுத் தகவல்கள்.

(2) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, ஒரு காவுநரின் கப்பற்றலைவருக்கு, பணிமுதல்வருக்கு, சொந்தக்காரருக்கு, முகவருக்கு அல்லது வாடகைக்கமர்த்துநருக்கு எழுத்தில் எந்நேரத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவித்தலை இல்லாதொழிக்கலாம்.

(3) இலங்கைக்கும் இலங்கையிலிருந்துமான பயணம் ஒவ்வொன்றுக்காகவும், ஒரு காவுநர், தரவுகளை அனுப்புவதற்குத் தவறினால் அல்லது பொய்யான தரவுகளை அனுப்பிருந்தால், காவுநர், ஆறு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான தண்டக்கொடுப்பனவுக்கு ஆளாதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளிலிருந்து எழுகின்ற கடப்பாடுகளை மிகப்பாரதூரமானவகையில் மீறுகின்ற காவுநர்களுக்காக, போக்குவரத்து வழிவகைகளைச்

செயலிழக்கச்செய்தல், கைப்பற்றுதல் மற்றும் பறிமுதல்செய்தல் போன்ற வேறு தடைவிதிப்புகளைக் கடைப்பிடிப்பதிலிருந்து அல்லது தக்கவைத்துக்கொள்வதிலிருந்து அல்லது தொழிற்பாட்டு உரிமத்தின் தற்காலிக இடைநிறுத்துகைக்காக அல்லது மீளப்பெறு கைக்காக இயைபான அதிகாரிகளுக்கு விதந்துரைப்பதிலிருந்து (3) ஆம் உட்பிரிவானது கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியைத் தடுத்தலாகாது.

(5) தண்டங்களை விதிக்கும் நோக்குடன் எக்காவுநர்களுக் கெதிராக வழக்குநடவடிக்கைகள் கொணரப்படுகின்றனவோ அக்காவுநர்கள், எதிர்வாதத்துக்கான மற்றும் மேன்முறை யீட்டுக்கான பயனுள்ள உரிமைகளைக் கொண்டிருத்தல் வேண் டும்.

முற்கூட்டிய பயணித் தகவல்கள், ஊடாட்ட முற்கூட்டிய பயணித் தகவல்கள் மற்றும் பயணிப் பெயர்ப் பதிவேட்டுத் தகவல்கள் என்பன

**70.** (1) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, தரவுகளின் பாதுகாப்புத் தொடர்பான அத்தகைய எழுத்திலான சட்டங்க ளுக்கிணங்க 171 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக முற்கூட்டிய பயணித் தகவல் முறைமை, ஊடாட்ட முற்கூட்டிய பயணித் தகவல் முறைமை மற்றும் பயணிப் பெயர்ப் பதிவேட்டுத் தகவல் முறைமை ஒன்றைப் பேணுதல் வேண்டும்.

(2) அமைச்சர், ஒழுங்குவிதிகள்மூலம், தகவல் பாதுகாப்புக்கு ஏற்புடைமையாகும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்துக்கிணங்க பின்வருவனவற்றை விதித்துரைத்தல் வேண்டும்:-

(அ) முற்கூட்டிய பயணித் தகவல்கள், ஊடாட்ட முற்கூட்டிய பயணித் தகவல்கள் மற்றும் பயணிப் பெயர்ப் பதிவேட்டுத் தககவல்கள் என்பவற்றில் உள்ளடக் கப்படவேண்டிய தரவுகளின் வகுதிகள்; அத்துடன்

(ஆ) முற்கூட்டிய பயணித் தகவல்கள், ஊடாட்ட முற்கூட்டிய பயணித் தகவல்கள் மற்றும் பயணிப் பெயர்ப் பதிவேட்

டுத் தககவல்கள் என்பன கட்டுப்பாட்டாளர் தலைமை யதிபதியினால் தக்கவைத்துக்கொள்ளப்படமுடியுமான காலப்பகுதி.

வந்தடை வதன்மேல் விசாரணையும் மருத்துவப் பரிசோதனையும்

**71.** (1) (அ) பாகம் IV லும் இப்பாகமும் ஏற்புடையன வாகவுள்ள ஆளொருவர், இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வாயிலில் தரையிறங்குவதற்கு உட்கருதினால், ஒரு குடிவரவு அலுவலரினால் விசாரணை செய்யப்படுதல் வேண்டும் அல்லது ஒரு விதித்துரைக்கப்பட்ட மருத்துவ அலுவலரினால் மருத்துவரீதியில் பரிசோதனை செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) விற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய ஒவ்வொரு பரிசோதனையும் அத்தகைய ஆள் அங்கீகரிக்கப் பட்டவொரு வாயிலை வந்தடைந்த நேரத்தில் அல்லது அதன் பின்னர் கூடியளவு விரைவாக நடாத்தப்படுதல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின்கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் பரிசோத னையின் நோக்கத்துக்காக, ஆளொருவர் கப்பலிலிருந்து இறங்கி, குறித்துரைக்கப்பட்ட ஏதேனுமிடத்தில் தன்னை முன்னிறுத்தும்படி ஒரு குடிவரவு அலுவலரினால் அல்லது விதித்துரைக்கப்பட்ட மருத்துவ அலுவலரினால் தேவைப்படுத்தப்படலாம்.

(ஈ) பந்தி (அ) விற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு ஒரு குடிவரவு அலுவலரின் அல்லது விதித்துரைக்கப்பட்ட மருத்துவ அலுவல ரின் ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகும் நோக்கத்துக்காக கப்பலிலிருந்து இறங்கி இலங்கையிலுள்ள குறித்துரைக் கப்பட்டவோர் இடத்தினுட் பிரவேசிக்கும் ஆளொருவர், அத்தகைய உட்பிரவேசம் காரணமாக மட்டும் இச்சட்டத்தின் ஏற்பாடு களின்கீழ் ஏதேனும் தவறைப் புரிந்துள்ளாரெனக் கருதப்படு தலாகாது.

(2) இலங்கையிலுள்ள ஏதேனுமிடத்தை வந்தடைகின்ற ஒரு வானூர்தியின் பணிமுதல்வர் அல்லது ஏதேனும் கலத்தின் கப்பற்றலைவர், பாகம் IV அல்லது இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள எவரேனுமாளை, அத்தகைய ஆள் இப்பிரிவின்கீழ் பரிசோதனை செய்யப்படும்வரை அல்லது பரிசோதனைக்காகத் தரையிறக்கப்

படும்வரை அத்தகைய வானூர்தியில் அல்லது கலத்தில் தடுத்து வைத்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப் பட்டவொரு கடற்றுறையை வந்தடைகின்ற ஆட்களைப் பரிசோதனை செய்வதற்கான நடவடிக்கை முறை

**72.** (1) அங்கீகரிக்கப்பட்டவொரு கடற்றுறையில் இலங்கையை வந்தடைகின்ற ஆளொவ்வொருவரும், அவர் இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு உட்கருதினாலுஞ்சரி அல்லது இல்லையா யினுஞ்சரி, குடிவரவு அலுவலரொருவர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் பரிசோதனைக்காக அத்தகைய அலுவலர்முன்னர் தோன்றுதல் வேண்டும்.

(2) குடிவரவு அலுவலர், அவசியமென அவர் கருதக்கூடிய வாறான அத்தகைய பரிசோதனையின் பின்னர், இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது கட்டளையின் ஏற்பாடுகளின்கீழ் இலங்கையினுட் பிரவேசிப்பதற்குத் தடைசெய்யப்பட்டவரென அவர் கருதுகின்றவரும் இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு உட்கருது கின்றவருமான அத்தகைய ஆளுக்கு அவரது கண்டுபிடிப்புப்பற்றி அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாள் இன்னமும் கலத்தின்மீதிருப்பின், இலங்கையில் கப்பலிலிருந்து இறங்குதலும் ஆகாது அல்லது அவர் பரிசோதனை நோக்கங்களுக்காகக் கப்பலிலிருந்து இறங்கியிருப்பின், கலத்துக்கு உடனடியாகத் திரும்பிச்சென்று அதன்மீது தரித்திருத்தலும் வேண்டும்.

(3) கலத்தின் கப்பற்றலைவர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமத்துநர், அதேமுறையில் குடிவரவு அலுவலரினால் அவரது கண்டுபிடிப்புப்பற்றி எழுத்தில் உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் கப்பற்றலைவர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமர்த்துநர் அவ்வாளை இலங்கையில் கப்பலிலிருந்து இறங்குவதற்கு அனுமதித்தலுமாகாது அல்லது அவ்வாள் பரிசோதனை நோக்கத்துக்காகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி, கப்பலிலிருந்து இறங்கி யிருப்பின், அவரை மீண்டும் கப்பலேற்றுவதற்கும் அத்துடன் அவ்வாளை அதே கலத்தின்மூலம் அல்லது அத்தகைய வேறு கலத்தின்மூலம், அக்குடிவரவு அலுவலர் பணிக்கக்கூடியவாறாக,

அவர் கப்பலேறிய இடத்துக்கு, அவரது பிறப்பு அல்லது பிரசாவுரிமை நாட்டுக்கு அல்லது அத்தகைய வேறு சேரிடத்துக்கு அப்புறப்படுத்துவதற்கும் தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) (அ) ஓராம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக ஒரு குடிவரவு அலுவலரின் முன்னர் தோன்றுவதற்கு மறுக்கின்ற அல்லது அசட்டைசெய்கின்ற அல்லது அவ்வலுவலரின் அதிகார வளிப்பின்றி அல்லது அதிகாரவளிப்புக்கிணங்கவன்றி வேறு வகையாகப் பரிசோதனை இடத்தை விட்டுநீங்குகின்ற;

(ஆ) இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு எவரேனுமாள் தடைசெய்யப்பட்டுள்ளாரெனக் குடிவரவு அலுவலரொருவரினால் அறிவிக்கப்பட்ட பின்னர், விடயத்துக்கேற்ப, ஒன்றில் இலங்கையில் கப்பலிலிருந்து இறங்குகின்ற அல்லது அவரது கலத்துக்கு உடனடியாகத் திரும்பிச்செல்வதற்கு மறுக்கின்ற அல்லது அசட்டைசெய்கின்ற; அல்லது

(இ) ஒரு கலத்தின் கப்பற்றலைவராக, சொந்தக்காரராக, முகவராக அல்லது வாடகைக்கமர்த்துநராகவிருந்து எவரேனுமாளை இலங்கையில் கப்பலிலிருந்து இறங்குவதற்கு அனுமதிக்கின்ற அல்லது எவரேனுமாளை மீண்டும் கப்பலேற்றுவதற்கு மறுக்கின்ற அல்லது (3) ஆம் உட்பிரிவுக்கிணங்க இலங்கையிலிருந்து எவரேனுமாளை அப்புறப்படுத்துவதற்கு அசட்டைசெய்கின்ற,

அவ்வாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன்மீது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவை மீறி எவரேனுமாள் ஒன்றில் இலங்கையில் கப்பலிலிருந்து இறங்குமிடத்து அல்லது அவரது கலத்திற்குத் திரும்பிச்செல்வதற்கு அல்லது குடிவரவு அலுவலரொருவரினால் பணிக்கப்படக்கூடியவாறாக அத்தகைய வேறு கலத்தினுள் ஏறுவதற்கு மறுக்கின்றவிடத்து அல்லது அசட்டை செய்கின்ற விடத்து குடிவரவு அலுவலர் அல்லது எவரேனும் பொலிசு அலுவலர், அவரது கலத்திற்குத் திரும்பிச்செல்லும்படி அல்லது அத்தகைய வேறு கலத்தினுள் ஏறும்படி அவ்வாளைத் தேவைப்படுத்தலாமென்பதுடன் விடயத்துக்கேற்ப, திரும்பிச் செல்வதற்கு அல்லது ஏறுவதற்கு அவ்வாளைக் கட்டாயப் படுத்துவதற்கானதும் நியாயமானமுறையில் அவசியமாகக் கூடியவாறானதுமான வலோத்காரத்தின் நியாயமான பாவனையுட்பட்ட அத்தகைய நடவடிக்கைகைகளையும் எடுக்க லாம்;

அத்துடன் இயைபான கலத்தின் கப்பற்றலைவர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமர்த்துநர், விடயத்துக்கேற்ப, அவ்வாளை மீளக்கப்பலேற்றுவதற்கும் அல்லது கப்பலேற்றுவற்கும், அவரை இலங்கையிலிருந்து அப்புறப்படுத்து வதற்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(6) கலமொன்றின் கப்பற்றலைவர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமர்த்துநர் (3) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவு களின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு நியாயமான முறையில் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வலோத் காரத்தைப் பயன்படுத்தலாம்.

அங்கீகரிக்கப்பட்டவொரு விமான நிலையத்தை வந்தடைகின்ற ஆட்களைப் பரிசோதனை செய்வதற்கான நடவடிக்கை முறை

**73.** (1) வான்மூலம் இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விமானநிலையத்தில் இறங்கும் ஆளொவ்வொருவரும், அவர் இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு உட்கருதினாலுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி, குடிவரவு அலுவலரொருவர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் பரிசோதனைக்காக அவ்வலுவலர் முன்னர் தோன்றுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், குடிவரவு அலுவலரொருவரின் ஏதேனும் பணிப்புக்கிணங்கியொழுகும் நோக்கத்துக்காக இலங்கையில் வானூர்தியிலிருந்து இறங்கி குறித்துரைக்கப்பட்டவோா இடத்தினுட் பிரவேசிக்கின்ற ஒருவர், அத்தகைய உட்பிரவேசம் காரணமாக மட்டும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றின்கீழும் தவறொன்றைப் புரிபவராகக் கருதப்படுதலாகாது.

(2) குடிவரவு அலுவலர், அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய பரிசோதனையின்பின்னர், இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு உட்கருதுகின்றவரும் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது கட்டளையின் ஏற்பாடுகளின்கீழ் இலங்கையினுட் பிரவேசிப்பதற்குத் தடைசெய்யப்பட்டுள்ளவரென அவர் கருதுகின்றவருமான எவரேனுமாளுக்கு அவரது கண்டுபிடிப்புப் பற்றி அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாள், அவ்வலுவலரினால் அங்கீகரிக்கப்பட்ட இடமொன்றுக்குத்தவிர, விமானநிலையத்தின் சுற்றாடலை விட்டுநீங்குதலுமாகாது; அத்துடன் அவர் அவ்வலுவலரின் அறிவுறுத்தல்களுக்கிணங்க முதலாவதாகக் கிடைக்கக்கூடிய வழிவகைகள்மூலம் இலங்கையை விட்டுநீங்குதலும் இலங்கையிலிருந்து புறப்படுதலும் வேண்டும்.

(3) அவ்வாள் எந்த வானூர்தியில் வந்தடைந்தாரோ அந்த வானூர்தியின் பணிமுதல்வர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமர்த்துநர், குடிவரவு அலுவலரினால் தேவைப்படுத்தப்படின், அவ்வாளை அதே அல்லது அத்தகைய வேறு வானூர்திமூலம், அவர் வானூர்தியில் ஏறிய இடத்துக்கு, அவரது பிறப்பு அல்லது பிரசாவுரிமை நாட்டுக்கு அல்லது அக்குடிவரவு

அலுவலர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு சேரிடத்துக்கு இலங்கையிலிருந்து அவ்வாளை அப்புறப் படுத்துதல் வேண்டும்.

(4) (அ) ஓராம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட வாறாக ஒரு குடிவரவு அலுவலரின்முன்னர் தோன்றுவதற்கு மறுக்கின்ற அல்லது அசட்டை செய்கின்ற அல்லது அவ்வலுவலரின் அதிகார வளிப்பின்றி அல்லது அதிகாரவளிப்புக்கிணங்க வன்றி வேறுவகையாகப் பரிசோதனை இடத்தை விட்டுநீங்குகின்ற;

(ஆ) எவரேனுமாள் இலங்கையினுட் பிரவேசிப்பதி லிருந்து தடைசெய்யப்பட்டுள்ளாரெனக் குடிவரவு அலுவலரொருவரினால் அறிவிக்கப்பட்ட பின்னர், அவ்வலுவலரின் அனுமதியின்றி விமான நிலையமொன்றின் சுற்றாடலை விட்டுநீங்குகின்ற, அல்லது அவ்வலுவலரினால் அங்கீகரிக்கப்பட்ட வோர் இடத்துக்குச் செல்வதற்கு அல்லது அதில் தரித்திருப்பதற்கு மறுக்கின்ற அல்லது அசட்டை செய்கின்ற;

(இ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட குடிவரவு அலுவலரொருவரின் அறிவுறுத்தல்களுக்கிணங்க இலங்கையை விட்டுநீங்குவதற்கு மறுக்கின்ற அல்லது தவறுகின்ற; அல்லது

(ஈ) மறுக்கின்ற அல்லது தவறுகின்ற; அல்லது எவரேனுமாள் எந்த வானூர்தியில் இலங்கையை வந்தடைந்தாரோ அந்த வானூர்தியின் பணி முதல்வர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமர்த்துநராகவிருந்து (3) ஆம் உட்பிரி விற்கிணங்க அவ்வாளை இலங்கையிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு மறுக்கின்ற அல்லது அசட்டைசெய்கின்ற,

அவ்வாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பன்னிரெண்டு மாதங்களை

விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவை மீறி எவரேனுமாள் அங்கீகரிக்கப்பட்டவொரு விமான நிலையத்தின் சுற்றாடலை விட்டுநீங்குமிடத்து அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட குடிவரவு அலுவல ரொருவரின் அறிவுறுத்தல்களுக்கிணங்க இலங்கையை விட்டு நீங்குவதற்கும் இலங்கையிலிருந்து புறப்படுவதற்கும் மறுக்கு மிடத்து, அக்குடிவரவு அலுவலர் அல்லது எவரேனும் பொலிசு அலுவலர், விடயத்துக்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட விமான நிலையத்தின் சுற்றாடலுக்குத் திரும்பிவருவதற்கு அல்லது அத்தகைய அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகுவதற்கு அவ்வாளைக் கட்டாயப்படுத்துவதற்கு நியாயமானமுறையில் அவசியமாகவிருக்கக்கூடியவாறாக, வலோத்காரத்தைப் பயன்படுத்துதலுட்பட்ட அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம். வானூர்தியின் பணிமுதல்வர், சொந்தக்காரர், முகவர், அல்லது வாடகைக்கமர்த்துநர், விடயத்துக்கேற்ப, அத்தகைய ஆளை மீளவானூர்தியிலேற்றுவதற்கு அல்லது வானூர்தியிலேற்றுவதற்கு மற்றும் அவரை இலங்கையிலிருந்து அப்புறப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(6) வானூர்தியின் பணிமுதல்வர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமர்த்துநர், (3) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு நியாயமானமுறையில் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வலோத்காரத்தைப் பயன்படுத்தலாம்.

*இலங்கையை வந்தடையவுள்ள வானூர்தியின் பணி முதல்வரினால் அல்லது கலத்தின் கப்பற்றலைவரினால் பயணத்துக்குமுன்னர் பயணிகளின் பயண ஆவணங்களும் விசாக்களும் சோதனையிடப்படுவதற்கான ஏற்பாடு*

**74.** (1) இலங்கைக்கு வெளியேயுள்ள ஓரிடத்திலிருந்து இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் விமான நிலையத்தை அல்லது அங்கீகரிக்கப்பட்ட கடற்றுறையை வந்தடைய உட்கருதுகின்ற ஒவ்வொரு வானூர்தியினதும் பணிமுதல்வர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக் கமர்த்துநர், அல்லது ஒவ்வொரு கலத்தினதும் கப்பற்றலைவர், சொந்தக்காரர் அல்லது முகவர், விடயத்துக்கேற்ப, அவ்வானூர் தியில் அல்லது கலத்தில் ஏறுகின்ற ஒவ்வொரு பயணியும் இலங்கைக்குப் பயணிப்பதற்குத் தேவைப்பட்ட —

(அ) செல்லுபடியானவொரு கடவுச்சீட்டை அல்லது ஒரு பயண ஆவணத்தை வைத்திருக்கின்றார்; அத்துடன்

(ஆ) ஒரு விசாவைக் கொண்டுள்ளார்,

என்பதனைச் சோதனைசெய்து உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) இலங்கைக்குப் பயணிக்கும் எவரேனும் பயணி (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகவில்லையெனக் காணப்படுமிடத்து, அத்தகைய பயணி, வானூர்தியில் அல்லது கலத்தில் ஏறுவது மறுக்கப்படுதல் வேண்டும்.

பரிசோதனை பூர்த்திசெய்யப் படும்வரை ஆட்கள் கலத்தில் ஏறுதலாகாது அல்லது அதனை விட்டு நீங்குதலாகாது

**75.** (1) ஒரு குடிவரவு அலுவலரினால் வழங்கப்பட்ட அதிகாரவளிப்பின்கீழன்றியும் அதனோடு இணங்கவன்றியும் பின்வருவோர் தவிர்ந்த ஆளெவரும், அதாவது –

(அ) கலத்தின் துறைகட்டுதலுக்கான வழிகாட்டுகையைக் கொடுப்பதற்காகப் பொறுப்பாக வாயிலிலிருக்கும் ஆள்;

(ஆ) கடமையின்மீது கலத்தில் ஏறுகின்ற எவரேனும் அரசாங்க அலுவலர்;

(இ) கலத்தின் சொந்தக்காரர், வாடகைக்கமர்த்துநர் அல்லது முகவர்; அல்லது

(ஈ) கலமானது எந்நாட்டுக்குரியதோ அந்நாட்டின் காவற்றூது அலுவலரொருவர் அல்லது தராதர அங்கீகாரம்பெற்ற பிரதிநிதியொருவர்,

இலங்கையை வந்தடைகின்றவொரு கலத்தை விட்டுநீங்குதலோ அல்லது அதில் ஏறுதலோ ஆகாது அல்லது அத்தகைய எவரேனுமாளைக் கொண்டுசெல்கின்ற ஒரு கலத்தின் சிப்பந்திகள் தவிர்ந்த எவரேனுமாள், கலமானது குடிவரவு அலுவலரொருவரினால் பரிசோதனைசெய்யப்பட்டு குடிவரவு சமிக்ஞை கீழிறக்கப்படும்வரை, கலத்தை இருநூறு மீற்றர் தூரத்தினுள் அணுகுதலோ, அல்லது இலங்கையிலிருந்து புறப்படுகின்ற கலமொன்று புறப்படுவதற்கு நேர்முன்னர் குடிவரவு அலுவலரொருவரினால் அது பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் அதில் ஏறுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் (1) ஆம் உட்பிரிவை மீறிக் கலனொன்றை விட்டுநீங்குகின்ற அத்தகைய ஒவ்வோ ராளும், ஒரு குடிவரவு அலுவலரினால் அவ்வாறு தேவைப்படுத் தப்படின், உடனடியாகக் கலத்துக்குத் திரும்பிச்செல்லுதலும் வேண்டுமென்பதுடன் அதில் தரித்திருத்தலும் வேண்டும்; அத்துடன் கலத்தின் கப்பற்றலைவர் அவ்வாளை மீளக்கப்ப லேற்றுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

குடிவரவு அலுவலரின் அனுமதியின்றி கலன்களிலிருந்து இறங்குவதன் மீதான அல்லது கலன்களில் ஏறுவதன் மீதான தடை

**76.** (1) எழுபத்தைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப் பட்ட ஆளொருவர் தவிர்ந்த, எவரேனுமாள் கலத்திலிருந்து இறங்குவதனை அல்லது அதில் ஏறுவதனை, அவ்விறங்குகை அல்லது ஏறுகை ஒரு குடிவரவு அலுவலரினால் அதிகாரமளிக்கப் படும்வரை தடுப்பது, இலங்கையை வந்தடைகின்ற ஒவ்வொரு கலத்தினதும் கப்பற்றலைவரினதும் சொந்தக்காரரினதும் அல்லது வாடகைக்கமர்த்துநரினதும் கடமையாதல் வேண்டும்; அத்துடன் அந்நோக்கத்துக்காக, நியாயமானமுறையில் அவசியமாகக்கூடியவாறான வழிவகைகள் பயன்படுத்தப் படலாம்.

(2) எவரேனுமாள் அதற்கெனக் குடிவரவு அலுவலரொருவரினால் அதிகாரமளிக்கப்படுமுன்னர் ஏதேனும் கலத்திலிருந்து இறங்குமிடத்து அல்லது அதில் ஏறுமிடத்து, அவ்வாளும் கலத்தின் கப்பற்றலைவரும் சொந்தக்காரரும் அல்லது வாடகைக்கமர்த்துநரும் இப்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிகின்றனர்.

(3) கப்பற்றலைவர், சொந்தக்காரர் அல்லது வாடகைக் கமர்த்துநர், அவ்வாள் கலத்திலிருந்து இறங்குவதனை அல்லது கலத்தில் ஏறுவதனை அனுமதிக்கவில்லை அல்லது வசதிப் படுத்துவதற்கு எதனையும் செய்யவில்லையென்பது இப்பிரிவின் கீழான ஏதேனும் குற்றவழக்கில் ஓர் எதிர்வாதமாதலாகாது.

(4) ஒரு குடிவரவு அலுவலரினால் கலத்திலிருந்து இறங்குதல் அதிகாரமளிக்கப்படுமுன்னர் எந்தக் கலத்திலிருந்து எவரேனுமாள் இறங்கியுள்ளாரோ அந்தக் கலத்தின் கப்பற்றலைவர்,

அவ்வாளை மீளக்கலத்திலேற்றுவதற்குத் தேவைப்படுத்தப் படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாளை மீளக்கலத்திலேற்று வதற்கு மறுக்கின்ற எவரேனும் கப்பற்றலைவர் தவறொன்றைப் புரிகின்றார்.

(5) இப்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

*பரிசோதனையின்முன்னர் பொருட்களை அகற்றுவதற்கான தடை*

**77.** (1) ஒரு குடிவரவு அலுவலரின் அதிகாரத்துடன் தவிர, ஏதேனும் கலனானது 75 ஆம் பிரிவின்கீழ் ஒரு குடிவரவு அலுவலரினால் பரிசோதனைசெய்யப்படும்வரை, அக்கலத்திலிருந்து பொருள், ஆவணம் அல்லது வஸ்து எதுவும் அகற்றப்படுதலோ அல்லது அதிலிருந்து எடுக்கப்படுதலோ அல்லது அதன்மீது இடப்படுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*ஒரு கலத்தினுள் அல்லது வானூர்தியினுள் பிரவேசிப்பதற்கும் ஏறுவதற்குமான தத்துவம்*

**78.** எவரேனும் குடிவரவு அலுவலர், ஒரு பொலிசு அத்தியட்சகரினால் அதிகாரமளிக்கப்பட்ட உப பொலிசுப் பரிசோதகர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள எவரேனும் பொலிசு அலுவலர் அல்லது விதித்துரைக்கப்பட்ட எவரேனும் மருத்துவ அலுவலர், விடயத்துக்கேற்ப, ஏதேனும் கலத்தினுள் அல்லது வானூர்தியினுள் பிரவேசிக்கலாம் அல்லது ஏறலாம் என்பதுடன் இலங்கையை வந்தடைகின்ற அல்லது இலங்கையை விட்டுநீங்குகின்ற எவரேனுமாளைத் தடுத்து வைத்துப் பரிசோதனைசெய்யலாம் ; அத்துடன் அத்தகைய ஆளினால் ஏதேனும் ஆவணம் காண்பிக்கப்படுவதனையும் தேவைப்படுத்தலாம்.

*பரிசோதனைக் காகவும் சோதனைக் காகவும் ஆட்களைத் தடுத்து வைத்தல்*

**79.** (1) ஏதேனும் பரிசோதனையின் அல்லது சோதனை யின் நோக்கங்களுக்காக, ஒரு குடிவரவு அலுவலர் அத்தகைய பரிசோதனையை அல்லது சோதனையைப் பூர்த்திசெய்வதற்கு நியாயமான முறையில் அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்காக இயைபான அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலில் அமைந்துள்ள இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின்கீழ் அல்லது ஒழுங்குவிதியின்கீழ் ஆளொருவர் இலங்கையினுட் பிரவேசிப் பதற்கு உரித்துடையவராகவுள்ளவரா என்பதனை தீர்மானிப்ப தற்கான ஏதேனும் இடத்தில் இறங்குவதற்கு அல்லது பிரவேசிப்பதற்கு ஆளொருவரை பணிக்கலாம்:

ஆயின், குடிவரவு அலுவலர் இருபத்து நான்கு மணித்தி யாலம் எனும் காலப்பகுதியினுள் அத்தகைய பரிசோதனை அல்லது சோதனையை முடிவுறுத்துவதற்கு முயற்சியெடுத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின் அல்லது ஒழுங்குவிதி யின்கீழ் ஆளொருவர் இலங்கையினுள் உட்பிரவேசிப்பதற்கு உரித்துடையவரா என்பதனையும் தீர்மானித்தல் வேண்டும்.

*உட்பிரவேச மற்றும் புறப்பாட்டுச் செய்முறைப் படுத்தலில் குடிவரவு அலுவலர்களின் தத்துவம்*

**80.** ஒவ்வொரு குடிவரவு அலுவலரும் இச்சட்டத்தின்கீழ் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பயணிகளின் ஏற்றலையும் இறக்குதலையும் கட்டுப் படுத்துவதற்கும்;

(ஆ) குடிவரவு இடப்பரப்புகளில் அல்லது வலயங்களில் பயணிகளைக் கட்டுப்படுத்துவதற்கும்;

(இ) வந்தடைவதன்மேல் ஆட்களைப் பரிசோதனை செய்வதற்கும் மற்றும் உட்பிரவேசத்துக்கான மறுப்பு முடிபுகளைச் செய்வதற்கும்;

(ஈ) உட்பிரவேச மற்றும் புறப்பாட்டு முடிபுகளைச் செய்வதற்கெனப் பயணிகளை வினவுவதற்கும் மற்றும் விசாரணைசெய்வதற்கும்;

(உ) உட்பிரவேச மற்றும் புறப்பாட்டு முடிபுகளைச் செய்வதற்கெனக் கேள்விகள் கேட்பதற்கும் மற்றும் மேலதிக ஆவணங்களைக் கோருவதற்கும்;

(ஊ) மருத்துவப் பரிசோதனைகளுக்காகப் பயணிகளை ஆற்றுப்படுத்துவதற்கும்;

(எ) வேறு சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைகளுக்குப் பயணிகளை ஆற்றுப்படுத்துவதற்கும்;

(ஏ) உட்பிரவேச அனுமதியொன்றை உடனடியாக அளிக்கமுடியாதவிடத்து மற்றும் மேலதிகத் தகவல்கள் தேவைப்படுமிடத்து பயணிகளை வைத்திருப்பதற்கும்;

(ஐ) மோசடியான, பொய்யாக்கப்பட்ட அல்லது போலியான பயண ஆவணங்களைக் கைப்பற்றுவதற்கும்;

(ஒ) பயண ஆவணத்தை உரிமையாக வைத்திருப்பவரை ஆள்மாறாட்டம் செய்கின்ற ஆளொருவரின் பயண ஆவணங்களைக் கைப்பற்றுவதற்கும்;

(ஓ) உட்பிரவேசம் மறுக்கப்படுகின்ற ஆளொருவரை அப்புறப்படுத்துவதற்கும்; அல்லது

(ஔ) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட வேறேதேனும் பணியை நிறைவேற்றுவதற்கும்.

பயணிகளை வினவுவதற்கான தத்துவம்

**81.** (1) இலங்கையை வந்தடைகின்ற அல்லது இலங்கையிலிருந்து புறப்படுவதற்குள்ள எவரேனுமாள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக —

(அ) அவரது ஆளடையாளத்தை, நாட்டினத்தை அல்லது தான்புரிதொழிலை நிலைநாட்டுவதற்கு நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் இட்டுச்செல்கின்றவையும் அல்லது இச்சட்டத்தில் அடங்கியுள்ள மட்டுப்

பாடுகளுள் எவற்றுடனும் சம்பந்தப்பட்டவையும், ஒரு குடிவரவு அலுவலரினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரினால் அவரிடம் கேட்கப்பட்டவையுமான எல்லாக் கேள்விகளுக்கும் விசாரணைகளுக்கும் முழுமையாகவும் உண்மையாகவும் மறுமொழியிறுத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய எவரேனும் அலுவலருக்கு அவரது உடைமையிலுள்ள எல்லா ஆவணங்களையும், பொருட்களையும் அல்லது வஸ்துக்களையும் கோரிக்கையின்மீது வெளிப்படுத்துதலும் காண்பித்தலும் வேண்டும்.

(2) அத்தகைய எல்லா மறுமொழிகளும், ஆவணங்களும், பொருட்களும் அல்லது வஸ்துக்களும், அவற்றை அளிக்கின்ற, வெளிப்படுத்துகின்ற அல்லது காண்பிக்கின்ற ஆளுக்கெதிராக இச்சட்டத்தின்கீழான எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் சான்றில் ஏல்தகவுடையனவாதல் வேண்டும்.

(3) அத்தகைய எவையேனும் மறுமொழிகள் எந்த வேறு வழக்குநடவடிக்கைகளில் வேறுவகையாக ஏல்தகவுடையனவாக இருந்திருக்கக்கூடுமோ அந்த வேறெவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் அத்தகைய எவையேனும் மறுமொழிகளை ஏல்தகவற்றனவாக்குவதாக இப்பிரிவிலுள்ளதெதுவும் பொருளமைத்துக்கொள்ளப்படுதலாகாது.

(4) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனுமாளிடம் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு அல்லது விசாரிப்புக்கு மறுமொழியிறுப்பதற்கு மறுக்கின்ற;

(ஆ) அத்தகைய ஏதேனும் கேள்விக்கு அல்லது விசாரிப்புக்கு ஏதேனும் பொய்யான அல்லது பிழைவழியுய்க்கின்ற மறுமொழியை அறிந்து கொண்டு கொடுக்கின்ற;

(இ) அவரது உடைமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளைக் காண்பிக்கும்படி (1) ஆம் உட்பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு செய்வதற்குத் தவறுகின்ற; அல்லது

(ஈ) ஏதேனும் பொய்யான அல்லது பிழைவழியுய்க் கின்ற ஆவணத்தை அறிந்துகொண்டு காண்பிக் கின்ற,

எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள் -

(அ) அவ்வுட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின் கீழான தவறொன்றின் விடயத்தில், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்; அல்லது

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழான தவறொன்றின் விடயத்தில், குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மீது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

வந்தடைகின்ற அல்லது புறப்படுகின்ற பயணிகளை வேறு முகவராண்மை களுக்கு ஆற்றுப்படுத்துதல்

**82.** குடிவரவு அலுவலரொருவர், உட்பிரவேசிக்கின்ற அல்லது புறப்படுகின்ற எவரேனுமாளை, கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியின் பணிப்பின்மீது அங்கீகரிக்கப்பட்ட நுழை வாயிலொன்றுடன் இணைந்த ஏதேனும் சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைக்கு, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அத்தகைய இயைபான முகவராண்மைகளின் கோரிக்கையின்பேரில் ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

**83.** (1) (அ) விடயத்துக்கேற்ப, கலனானது அல்லது வானூர்தியானது அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலை வந்தடையுமுன்னர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வாயிலிலிருந்து புறப்படுமுன்னர் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலை வந்தடைகின்ற அல்லது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வாயிலை விட்டுநீங்குகின்ற அல்லது விட்டுநீங்கும் தறுவாயிலுள்ள ஒவ்வொரு கலத்தினதும் கப்பற்றலைவர் சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக் கமர்த்துநர், எவரேனும் கட்டணமில்லாக் கரவுப்பயணி கப்பலில் அல்லது வானூர்தியில் உள்ளமை பற்றிக் குடிவரவு அலுவலரொருவருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்; அல்லது

கட்டணமில்லாக் கரவுப்பயணி

(ஆ) கப்பல் அல்லது வானூர்தி வந்தடைந்த பின்னர் அல்லது அதன் புறப்பாட்டுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்டவொரு வாயிலிலிருக்கையில் கட்டணமில்லாக் கரவுப்பயணி ஒருவரைக் கண்டுபிடித்துள்ள ஒவ்வொரு கலத்தினதும் கப்பற்றலைவர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமர்த்துநர் அல்லது வானூர்தியின் பணிமுதல்வர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக் கமர்த்துநர், குடிவரவு அலுவலரொருவருக்கு உடனடியாக அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) (அ) கட்டணமில்லாக் கரவுப்பயணி இலங்கைப் பிரசையொருவராக இருந்தாலொழிய, குடிவரவு அலுவலர், அக்கட்டணமில்லாக் கரவுப்பயணியை இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு அனுமதித்தலாகாது. கட்டணமில்லாக் கரவுப்பயணி வந்தடைந்த கலத்தின் கப்பற்றலைவர் அல்லது வானூர்தியின் பணிமுதல்வர் அல்லது அதற்குப் பொறுப்

பாகவுள்ள வேறெவரேனுமாள், இலங்கைப் பிரசையொருவரல்லாத கட்டணமில்லாக் கரவுப் பயணி ஒருவரை இலங்கையில் கப்பலிலிருந்து அல்லது வானூர்தியிலிருந்து இறங்குவதற்கு அனுமதித்தலாகாது என்பதுடன் கட்டணமில்லாக் கரவுப்பயணியைக் கப்பலில் அல்லது வானூர்தியில் வைத்திருத்தலும் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு கலத்தினதும் கப்பற்றலைவர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக் கமர்த்துநர் அல்லது வானூர்தியின் பணிமுதல்வர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமர்த்துநர், அக்குடிவரவு அலுவலர் பணிக்கக்கூடியவாறு, இலங்கைப் பிரசையொருவரல்லாத ஒவ்வொரு கட்டணமில்லாக் கரவுப்பயணியையும், அதே அல்லது அத்தகைய வேறு கலத்தின்மூலம் அல்லது வானூர்தியின்மூலம், அவர் கப்பலேறிய இடத்துக்கு, அவரது பிறப்பு அல்லது பிரசாவுரிமை நாட்டுக்கு அல்லது அத்தகைய வேறு சேரிடத்துக்கு இலங்கையிலிருந்து அப்புறப்படுத்துதல் வேண்டும்.

(3) குடிவரவு அலுவலரொருவர், ஒரு கட்டணமில்லாக் கரவுப்பயணி இலங்கைப் பிரசையொருவராகவிருப்பின், அக் கட்டணமில்லாக் கரவுப்பயணியை இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு அனுமதித்தல் வேண்டும்.

(4) இலங்கைப் பிரசையொருவராகவுள்ள கட்டணமில்லாக் கரவுப்பயணி ஒருவர் (3) ஆம் உட்பிரிவின்கீழ் இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள், இச்சட்டத்தின்கீழான அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின்கீழான அல்லது கட்டளையின்கீழான சட்டமுறையற்ற புறப்பாடு அல்லது உட்பிரவேசம் தொடர்பான ஏற்பாடுகளுக்கமைய, இலங்கையினுட் பிரவேசித்தல் வேண்டும்.

இலங்கையை வந்தடைகின்ற, விட்டுநீங்குகின்ற அல்லது விட்டுநீங்கும் தறுவாயிலுள்ள கலத்தின் கப்பற்றலைவரினால் பயணிகள் மற்றும் சிப்பந்திகள் பற்றிய தகவல்கள்

**84.** (1) இலங்கைக்கு வெளியேயுள்ளவோர் இடத்திலிருந்து கடல்வழியாக இலங்கையை வந்தடைகின்ற ஆட்களுக்கான ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலை வந்தடைகின்ற, அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ளவோர் இடத்துக்குக் கடல்வழியாக இலங்கையை விட்டுநீங்குகின்ற ஆட்களுக்கான ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வாயிலை விட்டுநீங்குகின்ற அல்லது விட்டுநீங்கும் தறுவாயிலுள்ள ஒவ்வொரு கலத்தினதும் கப்பற்றலைவர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக் கமர்த்துநர்,-

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள்ளும், அத்தகைய படிவத்திலும் முறையிலும், சிப்பந்திகள் பற்றிய அத்தகைய விபரங்களை அடக்கியும், விடயத்துக்கேற்ப, கலனானது அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலை வந்தடையும் நேரத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வாயிலிலிருந்து புறப்படும் நேரத்தில் கலத்தின்மீது இருக்கின்ற அல்லது இருக்கும் எல்லாச் சிப்பந்திகளும்பற்றிய பூரணமான நிரலொன்றைக் குடிவரவு அலுவலரொருவருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்;

(ஆ) அக்குடிவரவு அலுவலரினால் அவ்வாறு தேவைப்படுத்தப்படின், அக்குடிவரவு அலுவலரினால் ஒன்றில் பொதுவாக அல்லது குறிப்பாகப் பணிக்கப்பட்டவாறு, சிப்பந்திகளின் ஒவ்வோர் உறுப்பினரையும் சோதனைக்காகவும் வினவுவதற்காகவும் அக்குடிவரவு அலுவலருக்கு முன்னிறுத்துதல் வேண்டும்;

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள்ளும் அத்தகைய படிவத்திலும் முறையிலும் சிப்பந்திகளின் ஒவ்வோர் உறுப்பினரினதும் ஆளடையாளம் பற்றிய அத்தகைய சான்றை அக்குடிவரவு அலுவலருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்;

(ஈ) கலத்தின்மீது வேறு ஆட்கள் இருக்கின்றமையை அல்லது இல்லாதிருக்கின்றமையை நிலைநாட்டு வதற்கு அவசியமாகக்கூடியவாறாக அவரது கலத்தின் அத்தகைய தேடுதலுக்கு உட்படுதல் வேண்டும்;

(உ) அவரது கலத்துக்குரிய பத்திரங்களைக் காண்பித்தல் வேண்டும்; அத்துடன்

(ஊ) விடயத்துக்கேற்ப, கலனானது அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலை வந்தடையுமுன்னர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலிலிருந்து புறப்படுமுன்னர் எவரேனும் கட்டணமில்லாக் கரவுப்பயணி அல்லது அதிகாரமளிக்கப்படாத எவரேனும் ஆள் அல்லது வேறேதேனும் அரசின் அல்லது நாட்டின் தகுதி வாய்ந்த அதிகாரிகளினால் எவரேனுமாள் அந்த வேறு அரசிலிருந்து அல்லது நாட்டிலிருந்து அப்புறப் படுத்தப்பட்டதன்மீது ஏதேனும் அரசுக்கு அல்லது நாட்டுக்குச் சென்றுகொண்டிருக்கின்ற அவ்வாள் கலத்தின்மீது இருக்கின்றமையை அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) பயணிகளைக் கொண்டுசெல்கின்ற கலன்களின் விடயத்தில், கப்பற்றலைவர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமர்த்துநர், மேலதிகமாக —

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள்ளும், அத்தகைய படிவத்திலும் முறையிலும், அத்தகைய விபரங்களை அடக்கியும், விடயத்துக்கேற்ப, கலனானது அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலை வந்தடைகின்ற நேரத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வாயிலிலிருந்து புறப்படுகின்ற நேரத்தில் அதன்மீதுள்ள அல்லது அதன்மீது இருக்கும் எல்லாப் பயணிகளும் பற்றிய பூரணமான நிரலொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்;

(ஆ) இலங்கையில் கப்பலிலிருந்து இறங்குகின்ற அல்லது இலங்கையிலிருந்து கப்பலேறுகின்ற ஒவ்வொரு பயணி தொடர்பாகவும், விதித்துரைக்கப்படக்கூடியவாறான

அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய காலத்தினுள்ளும் அத்தகைய விபரங்களைக் கொடுத்துதவுதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஒரு குடிவரவு அலுவலரினால் அவ்வாறு தேவைப் படுத்தப்படின், ஒன்றில் பொதுவாக அல்லது குறிப்பாக, பணிக்கப்பட்டவாறாக அக்குடிவரவு அலுவலரினால் சோதனைக்காகவும் வினவுவதற் காகவும் ஒவ்வொரு பயணியையும் முன்னிறுத்துதல் வேண்டும்.

(3) குடிவரவு அலுவலரொருவர், இச்சட்டத்தின்கீழ் சோதனையிடுவதன்மேல் சிப்பந்திகளின் எண்ணிக்கை பற்றிக் கலத்தின் கப்பற்றலைவருக்கு, சொந்தக்காரருக்கு, முகவருக்கு அல்லது வாடகைக்கமர்த்துநருக்குச் சட்டத்தினால் தேவைப் படுத்தப்பட்டவாறாகச் சான்றிதழொன்றை வழங்கலாம்.

(4) உட்பிரிவு (1) அல்லது (2) என்பவற்றை மீறுகின்ற ஒரு கலத்தின் கப்பற்றலைவர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமர்த்துநர் மற்றும் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் கலனொன்றின் ஏதேனும் தேடுதலைத் தடங்கல்செய்கின்ற அல்லது அதற்கு முட்டுக்கட்டையிடுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது அத்தகைய ஒவ்வோராள் தொடர்பிலும் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமானவொரு குற்றப்பணத் துக்கு ஆளாதலும் வேண்டும்.

(5) ஒராம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் எந்த ஆள் இருக்கின்றமை பற்றி அறிக்கையிடப்படவில்லையோ அந்த எவரேனுமாள் கலத்தின்மீது காணப்படின், கலத்தின் கப்பற் றலைவர், சொந்தக்காரர், முகவர் மற்றும் வாடகைக்கமர்த்துநர் ஆகிய ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது அத்தகைய ஒவ்வோராளும் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்குளூ ஆளாதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழான எவையேனும் வழக்குநடவடிக்கைகளில், (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் கொடுத்துதவப்பட்ட அடையாள அட்டைகளின்மீதுள்ள விபரங்களுக்கு விவரணத்தில் நேரொத்ததாகவுள்ள சிப்பந்திகளான உறுப்பினர்களினது மொத்த எண்ணிக்கையினரை இலங்கையில் வந்தடைந்ததன்மீது கலனானது கொண்டுசென்றது என்ற பொருள்பட, குறிப்பிட்ட ஏதேனும் கலத்தில் ஏறிய அல்லது அதனைப் பரிசோதனைசெய்த ஒரு குடிவரவு அலுவலரின் எழுத்திலான சான்றிதழ், அக்கலனானது வந்தடைந்ததன்மீது சிப்பந்திகளான உறுப்பினர்களினது அவ்வெண்ணிக்கையைக் கொண்டுசென்றது என்பதற்கு முடிவான எண்பிப்பாதல் வேண்டும்.

இலங்கையை வந்தடைகின்ற, இலங்கையை விட்டுநீங்குகின்ற அல்லது விட்டுநீங்கும் தறுவாயிலுள்ள வானூர்தியின் பணி முதல்வரினால் பயணி மற்றும் சிப்பந்திகள் பற்றிய தகவல் வழங்கப்படுதல்

**85.** (1) இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் இடத்திலிருந்து இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலை வந்தடைகின்ற அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஓரிடத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வாயிலை விட்டு நீங்குகின்ற அல்லது விட்டுநீங்கும் தறுவாயிலுள்ள ஒவ்வொரு வானூர்தியினதும் பணிமுதல்வர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமர்த்துநர்,-

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய விபரங்களைக் கொண்டதாகவும் விடயத்துக்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலை வானூர்தி வந்தடையும் நேரத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வாயிலிலிருந்து அது புறப்படும் நேரத்தில் அதன்மீது இருக்கின்ற அல்லது இருக்கும் எல்லாப் பயணிகளும் பற்றிய பூரணமான நிரலொன்றை ஒரு குடிவரவு அலுவலருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்;

(ஆ) இலங்கையில் தரையிறங்குகின்ற அல்லது இலங்கையிலிருந்து புறப்படுகின்ற ஒவ்வொரு பயணி தொடர்பாகவும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய காலத்தினுள்ளும் அத்தகைய விபரங்களை அவ்வலுவலருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்;

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள்ளும், அத்தகைய படிவத்திலும், முறையிலும், சிப்பந்திகள் பற்றிய விவரங்களைக் கொண்டதாகவும் விடயத்துக்கேற்ப, வானூர்தி அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலை வந்தடையும் நேரத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வாயிலிலிருந்து புறப்படும் நேரத்தில் அவரது வானூர்தியில் இருக்கின்ற அல்லது இருக்கும் எல்லாச் சிப்பந்திகளும் பற்றிய பூரண நிரலொன்றை அவ்வலுவலருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்;

(ஈ) ஒரு குடிவரவு அலுவலரினால் அவ்வாறு தேவைப் படுத்தப்படின், குடிவரவு அலுவலரினால், ஒன்றில் பொதுவாக அல்லது குறிப்பாகப் பணிக்கப்பட்டவாறு சோதனைக்காகவும் வினவுவதற்காகவும் அவ்வானூர்தியின் சிப்பந்திகளினது உறுப்பினர் ஒவ்வொருவரையும் பயணி ஒவ்வொருவரையும் முன்னிறுத்துதல் வேண்டும்;

(உ) வானூர்தியில் வேறு ஆட்கள் இருப்பதனை அல்லது இல்லாதிருப்பதனை நிலைநாட்டுவதற்கு அவசியமாகக்கூடியவாறாக அவரது வானூர்தியின் அத்தகைய தேடுகைக்கு உட்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஊ) வானூர்தியானது, விடயத்துக்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலை வந்தடையுமுன்னர் அல்லது அதிலிருந்து புறப்படுமுன்னர் எவரேனும் கட்டணமில்லாக் கரவுப்பயணி அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்படாத ஆள் அல்லது வேறேதேனும் அரசின் அல்லது நாட்டின் தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் அந்த வேறு அரசிலிருந்து அல்லது நாட்டிலிருந்து எவரேனுமாள் அப்புறப்படுத்துவதன்மீது அந்த வேறு அரசுக்கு அல்லது நாட்டுக்குச் சென்றுகொண்டிருக்கின்ற அவ்வாள் வானூர்தியில் இருப்பதனை அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) குடிவரவு அலுவலரொருவர், சோதனையின்மேல் சிப்பந்திகளின் எண்ணிக்கை பற்றி இச்சட்டத்தின்கீழான சான்றிதழொன்றைக் கலத்தின் கப்பற்றலைவருக்கு, சொந்தக் காரருக்கு, முகவருக்கு அல்லது வாடகைக்கமர்த்துநருக்கு வழங்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற வானூர்தியொன்றின் பணிமுதல்வர், சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக் கமர்த்துநர் மற்றும் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின்கீழ் வானூர்தியொன்றின் தேடுகையைத் தடங்கல் செய்யும் அல்லது அதற்கு முட்டுக்கட்டையிடும் எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மீது அத்தகைய ஒவ்வோராளும் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் எந்த ஆள் இருக்கின்றமை அறிக்கையிடப்பட்டிருக்கவில்லையோ அந்த ஆள் வானூர்தியொன்றில் காணப்படின், அவ்வானூர் தியின் பணிமுதல்வர், சொந்தக்காரர், முகவர் மற்றும் வாடகைக்கமர்துநர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது அத்தகைய ஒவ்வோராளும் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழான எவையேனும் வழக்குநடவடிக்கை களில், வானூர்தியானது இலங்கையை வந்தடைந்ததன்மீது, (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் கொடுத்து தவப்பட்ட நிரலிலுள்ள விவரங்களுக்கு நேரொத்ததாகவுள்ள சிப்பந்திகளின் மொத்த எண்ணிக்கையைக் கொண்டுவந்ததென்ற பொருள்பட, ஏதேனும் குறிப்பிட்ட வானூர்தியில் ஏறிய அல்லது அதனைப் பரிசோதனை செய்த குடிவரவு அலுவல ரொருவரின் எழுத்திலான சான்றிதழ், அவ்வானூர்தி

வந்தடைந்ததன்மீது சிப்பந்தி உறுப்பினர்களினது அவ்வெண்ணிக்கையைக் கொண்டு வந்ததென்பதற்கு முடிவான எண்பிப்பாதல் வேண்டும்.

சிப்பந்தி உறுப்பினர் களினது பொறுப்புவிடு விப்புமீதான மட்டுப்பாடு

**86.** *(1)* ஒரு வானூர்தியின் அல்லது கலத்தின் சிப்பந்தி உறுப்பினரொருவர் இலங்கையில் பொறுப்புவிடுவிக்கப்படும் தறுவாயிலுள்ளவிடத்து அல்லது பொறுப்புவிடுவிக்கப்படுமிடத்து அல்லது கொடுப்பனவின்மீது பொறுப்பு விடுவிக்கப்படுமிடத்து அல்லது அவரின் சேவை முடிவுறுத்தப்படுமிடத்து, பணி முதல்வர், கப்பற்றலைவர், சொந்தக்காரர், வாடகைக்கமர்த்துநர் அல்லது முகவர், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு அவ்வாறு அறிவித்தல் வேண்டும்.

*(2)* பொறுப்புவிடுவிக்கப்பட்டுள்ள அல்லது கொடுப்பனவின் மீது சேவை முடிவுறுத்தப்பட்டுள்ள சிப்பந்தி உறுப்பினரெவரும், அவர் ஒன்றில் -

(அ) இலங்கைப் பிரசையொருவராக இருந்தாலொழிய; அல்லது

(ஆ) ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறு இலங்கையினுட் பிரவேசிப்பதற்குச் செல்லுபடியான விசாவொன்றை அவர் உடைமையில் வைத்திருந்தாலொழிய,

இலங்கையில் விட்டுச்செல்லப்படுதலாகாது.

*(3)* இரண்டாம் உட்பிரிவின் ஏதேனும் மீறுகை இருந்துள்ளவிடத்து, சம்பந்தப்பட்ட ஆள் எந்தக் கலத்தில் அல்லது வானூர்தியில் தொழிலுக்கமர்த்தப்பட்டாரோ அந்தக் கலத்தின் அல்லது வானூர்தியின் பணிமுதல்வர், கப்பற்றலைவர், சொந்தக்காரர், வாடகைக்கமர்த்துநர் அல்லது முகவர், அவ்வாளின் பராமரிப்புக்காகவும், அவர் பிறந்த இடத்துக்கு, அல்லது பிரசாவுரிமை கொண்டுள்ள இடத்துக்கு, அல்லது பணிமுதல்வர், கப்பற்றலைவர் சொந்தக்காரர், வாடகைக் கமர்த்துநர் அல்லது முகவர் அவ்வாறு விரும்பினால், கட்டுப் பாட்டாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்படக்கூடிய வாறான அத்தகை வேறு இடத்துக்கு அவரை மீளஒப்படைப்ப தற்கான செலவுதொகைக்காகவும் ஆளாதல் வேண்டும்.

**87.** (1) அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலொன்றிலுள்ள குடிவரவு அலுவலர், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட கப்பற்றுறையிலுள்ளவொரு கலத்தின் கப்பற்றலைவர், சொந்தக்காரர், வாடகைக்கமர்த்துநர் அல்லது முகவரின் எழுத்திலான கோரிக்கையின்மீது கரையினுட் பிரவேசிப்பதற்கு ஏதேனும் கலத்தின் சிப்பந்தி உறுப்பினரொருவருக்குக் கரைக்குச் செல்வதற்கான அனுமதிச்சீட்டொன்றை வழங்கலாம்.

*சிப்பந்தி உறுப்பினர்களுக்கு கரைக்குச் செல்வதற்கான கரை அனுமதிச் சீட்டுக்களை வழங்குதல்.*

(2) கரைக்குச் செல்வதற்கான அனுமதிச்சீட்டொன்றின் முறையையும் படிவத்தையும் அதில் உள்ளடக்கப்படவேண்டிய தகவல்களையும் அமைச்சர் விதித்துரைக்கலாம்.

(3) கரைக்குச் செல்வதற்கான அனுமதிச்சீட்டொன்று வழங்கப்பட்ட சிப்பந்தி உறுப்பினரொருவர் கரைக்குச் செல்வதற்கான அனுமதிச்சீட்டில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புக்கு மட்டுமே செல்வதற்கு அனுமதிக்கப்படுவாரென்பதுடன் கரைக்குச்செல்வதற்கான அனுமதிச்சீட்டில் சுட்டிக்காட்டப்பட்ட குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புக்கப்பால் செல்வதற்குச் சிப்பந்திகளின் அத்தகைய உறுப்பினர் உட்கருதினால் அவர் செல்லுபடியான விசாவொன்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) சிப்பந்தி உறுப்பினரொருவருக்கு வழங்கப்பட்ட கரைக்குச் செல்வதற்கான அனுமதிச்சீட்டொன்று, கரைக்குச்செல்வதற்கான அத்தகைய அனுமதிச்சீட்டு கலத்தின் எந்தப் பணிமுதல்வரின், கப்பற்றலைவரின், சொந்தக்காரரின், வாடகைக்கமர்த்துநரின் அல்லது முகவரின் கோரிக்கையின்மீது வழங்கப்படுகின்றதோ அந்தப் பணிமுதல்வரின், கப்பற்றலைவரின், சொந்தக்காரரின், வாடகைக்கமர்த்துநரின் அல்லது முகவரின் பொறுப்பாதல் வேண்டும்.

**88.** (1) எவரேனுமாள் -

*கப்பற்றலைவரும் பணிமுதல்வரும் சொந்தக்காரரும் செலவுகளுக்காக ஆளாதல்*

(அ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறி ஏதேனும் கலத்திலிருந்து அல்லது வானூர்தியிலிருந்து இலங்கையினுட் பிரவேசித்தால்;

(ஆ) 72 ஆம், 75 ஆம் மற்றும் 76 ஆம் பிரிவுகளின்கீழ் அவர் எந்தக் கலத்தில் மீளக்கப்பலேற்றப்பட்டுள் ளாரோ அல்லது எந்தக் கலத்துக்கு அவர் திருப்பி யனுப்பப்பட்டுள்ளாரோ அந்த ஏதேனும் கலத்திலிருந்து இறங்கினால்; அல்லது

(இ) ஏதேனும் வானூர்தியிலிருந்து இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலை வந்தடைந்து, 73 ஆம் பிரிவின்கீழ் இலங்கையை விட்டுநீங்குவதற்கு அல்லது இலங்கையிலிருந்து புறப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டால்,

அதன் பணிமுதல்வர், கப்பற்றலைவர், சொந்தக்காரர், வாடகைக்கமர்த்துநர் மற்றும் முகவர், அவ்வாளை வைத்திருத்தல், தடுத்துவைத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பிலும் இலங்கையிலிருந்து அவரை அப்புறப்படுத்துதல் தொடர்பிலும் அரசாங்கத்தினால் உறப்பட்ட எல்லாச் செலவுகளுக்காகவும் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதல் வேண்டும்.

(2) கலத்தின் அல்லது வானூர்தியின் பணிமுதல்வர், கப்பற்றலைவர், சொந்தக்காரர், வாடகைக்கமர்த்துநர் அல்லது முகவரிடமிருந்து கூட்டாகவும் தனித்தனியாகவும் அரசாங்கத்துக்கு வருமதியானவொரு தனிசு என்றாற்போன்று செலவுகள் அறிவிடப்படற்பாலனவாதல் வேண்டும்.

கட்டணமில்லாப் பிரயாணத்தை அளிப்பதற்கான கடப்பாடு

**89.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது ஒழுங்குவிதிகளுக்கு முரணாக இலங்கையினுட் பிரவேசித்த எவரேனுமாள் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அப்புறப்படுத்தற் கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்தும், அவ்வாள் ஒரு கலத்தில் அல்லது ஒரு வானூர்தியில் இலங்கைக்குக் கொணரப்பட்டவிடத்தும், கலத்தின் கப்பற்றலைவர் அல்லது வானூர்தியின் பணிமுதல்வர் அத்துடன் அதே சொந்தக்காரர்களுக்குரிய அல்லது அதே வாடகைக் கமர்த்துநர்களினால் வாடகைக்கமர்த்தப்பட்ட ஏதேனும் கலத்தின் கப்பற்றலைவர் அல்லது ஒரு வானூர்தியின் பணிமுதல்வர், கட்டுப்பாட்டாளர் தலைமையதி

பதியினால் எழுத்தில் தேவைப்படுத்தப்படின், அவ்வாளை அவரது கலத்தில் அல்லது வானூர்தியில் பெற்று, அவ்வாள் எந்தத் நுழைவாயிலிலிருந்து அல்லது இடத்திலிருந்து இலங்கைக்குக் கப்பலேறியுள்ளாரோ அந்த நுழைவாயிலுக்கு அல்லது இடத்துக்கு அல்லது கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் பெயர்குறிக்கப்பட்ட வேறேதேனும் நுழைவாயிலுக்கு அல்லது இடத்துக்குக் கட்டணமில்லாப் பிரயாணத்தையும் கடற்பயணத்தின் போது அல்லது வான்பயணத்தின்போது தகுந்த இடவசதியையும் பராமரிப்பையும் அவருக்கு அளித்தல் வேண்டும்.

(2) இப்பாகம் அல்லது பாகம் IV ஏற்படையதாகவுள்ளவரும் புறக்குறிப்பொன்று மறுக்கப்பட்டுள்ளவரும் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி இலங்கையினுட் பிரவேசிக்கின்றவருமான எவரேனுமாள், அத்தகைய ஆள் எக்கலத்தின்மூலம் அல்லது எவ்வானூர்தியின்மூலம் இலங்கைக்குப் பயணித்துள்ளாரோ அக்கலத்தின் கப்பற்றலைவரினால் அல்லது வானூர்தியின் பணிமுதல்வரினால் அல்லது அத்தகைய கப்பலின் அல்லது வானூர்தியின் சொந்தக்காரரினால் அல்லது முகவரினால் அத்தகைய ஆள் எந்த ஆள்புலத்தின் நாட்டினத்தவராக உள்ளாரோ அல்லது எந்த ஆள்புலத்திலிருந்து அத்தகைய ஆள் இலங்கைக்குக் கப்பலேறியுள்ளாரோ அந்த ஆள்புலத்துக்கு இலங்கையிலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டுமெனக் குடிவரவு அலுவலரொருவர் அறிவித்தல்மூலம் பணிக்கலாம். கலத்தின் கப்பற்றலைவர் அல்லது வானூர்தியின் பணிமுதல்வர் அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஒரு கலத்தின் கப்பற்றலைவர் அல்லது ஒரு வானூர்தியின் பணிமுதல்வர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது அத்தகைய ஒவ்வோர் ஆளும் ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

*தமது பயணங்களைத் தொடர்வதற்குத் தவறுகின்ற ஆட்கள் பற்றிய அறிக்கைகள்*

**90.** (1) ஏதேனும் கலத்தின் அல்லது வானூர்தியின் எவரேனும் இடைப்பெயர்வுப் பயணி அல்லது சிப்பந்திகளின் எவரேனும் உறுப்பினர், அப்பயணி அல்லது சிப்பந்தி உறுப்பினர் இலங்கையில் தரித்துள்ளாரெனச் சூழ்நிலைகளிலிருந்து நியாயமானமுறையில் ஊகிக்கப்படக்கூடிய அச்சூழ்நிலைகளில் அக்கலத்தில் அல்லது வானூர்தியில் தனது பயணத்தைத் தொடர்வதற்குத் தவறுமிடத்து, விடயத்துக்கேற்ப, கலத்தின் கப்பற்றலைவர் அல்லது வானூர்தியின் பணிமுதல்வர் அல்லது முகவர், அப்பயணி அல்லது சிப்பந்தி உறுப்பினர் தனது பயணத்தைத் தொடர்வதற்குத் தவறியமையைக் குடிவரவு அலுவலரொருவருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற கலத்தின் கப்பற்றலைவர் அல்லது வானூர்தியின் பணி முதல்வர் அல்லது முகவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது கூட்டாகவும் தனிவேறாகவும் ஒரு இலட்சம் ரூபாவுக்கு குறையாததும் ஐந்நூறு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

*நேரடி இடைப்பெயர்வுப் பயணிகளின் மீதான கட்டுப்பாடு தொடர்பான ஏற்பாடுகள்*

**91.** (1) இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயிலொன்றை வந்தடைகின்ற ஒவ்வொரு நேரடி வான்வழி அல்லது கடல்வழி இடைப்பெயர்வுப் பயணியும், இடைப்பெயர்வுக் காலப்பகுதி எட்டு மணித்தியாலங்களை அல்லது அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக விஞ்சாதிருப்பின், இப்பாகத்தின்கீழ், பாகம் III இன்கீழ் அல்லது பாகம் IV இன்கீழ் விசாவை அல்லது புறக்குறிப்பை வைத்திருக்கவேண்டிய தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படுகின்றார்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக —

"நேரடி வான்வழி இடைப்பெயர்வுப் பயணி" என்பது, அதே வானூர்தி மூலமும் அதே விமானசேவை மூலமும் வான் பயண இலக்கத்தின் மூலமும் அடையாளங்காணப்பட்ட வேறு வித்தியாசமான வானூர்தியில், ஓர் இடைநிறுத்துகையில்லாமல் தனியொரு வான்பயண அனுமதிச்சீட்டு அல்லது பயன அனுமதிச்சீட்டின்கீழானவொரு

பயணத்தின் பாகமாக இடத்தை வந்தடைகின்றவரும் அதிலிருந்து புறப்படுகின்றவருமான (ஏற்புடைய இடத்தில் மாறும்) ஒரு பயணி என்று பொருளாகும்; அத்துடன்

"நேரடிக் கடல்வழி இடைப்பெயர்வுப் பயணி" என்பது, அதே கப்பற்றொழிற் கம்பெனி மூலமும் கலத்தின் இலக்கத்தின் மூலமும் அடையாளங்காணப்பட்ட அதே குறித்துக்காட்டி அல்லது வித்தியாசமான துறைமுகத்தில், ஓர் இடை நிறுத்துகையில்லாமல் தனியொரு கடற்பயண அனுமதிச் சீட்டு அல்லது பயண அனுமதிச்சீட்டின்கீழ் தொடர்ச்சி யானவொரு பயணத்தின் பாகமாக ஓர் இடத்தை வந்தடைகின்றவரும் அதிலிருந்து புறப்படுகின்றவருமான (ஏற்புடைய இடத்தில் மாறும்) ஒரு பயணி என்று பொருளாகும்;

(2) ஒவ்வொரு நேரடி வான்வழி அல்லது கடல்வழி இடைப்பெயர்வுப் பயணியும், விடயத்துக்கேற்ப, ஒரு பயண ஆவணத்தை, வானூர்திப் பயணச்சீட்டை மற்றும் ஒரு செல்லுபடியான விசாவை அல்லது ஓர் இடைப்பெயர்வு விசாவை, அத்தகைய விசா அல்லது இடைப்பெயர்வு விசா உட்கருதப்பட்ட இறுதிச் சேரிட நாட்டினால் அல்லது ஏதேனும் இடைப்பெயர்வு நாட்டினால் தேவைப்படுத்தப்படின், கொண்டிருத்தல் வேண்டும்.

(3) நேரடி வான்வழி அல்லது கடல்வழி இடைப்பெயர்வுப் பயணிகள், உட்பிரவேசச் செய்முறைப்படுத்துகைக்கு உட்படாமல் இடைப்பெயர்வு இடப்பரப்பை விட்டுநீங்குதலாகாது.

(4) நேரடி வான்வழி அல்லது கடல்வழி இடைப்பெயர்வுப் பயணிகள் தேவைப்படுத்தப்படும்போது குடிவரவு அலுவலர் களினால் பரிசோதனைசெய்யப்படுவதற்கு அமைந்தோராவர்.

(5) நேரடி வான்வழி அல்லது கடல்வழி இடைப்பெயர்வுப் பயணியைக் குறித்தசில சூழ்நிலைகளின்கீழ் அப்புறப்படுத்தும் படி தேவைப்படுத்தப்படின், நாட்டுக்கு அவ்வாளைக் கொண்டுவந்த வானூர்தியின் பணிமுதல்வரினால் அல்லது கலத்தின் கப்பற்றலைவரினால் பொறுப்புடைமையும் செலவுதொகைகளும் பொறுக்கப்படும்.

***92.*** (1) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, அவரது கைப்பட்ட கடிதத்தின்மூலம், இச்சட்டத்தின்கீழான தவறொன்று எந்தக் கலம் சம்பந்தமாகப் புரியப்பட்டுள்ளதென அல்லது புரியப்படும் தறுவாயிலுள்ளதென நியாயமானமுறையில் நம்பப்படுகின்றதோ அந்த ஏதேனும் கலத்தைத் தடுத்துவைக்கும்படி வணிகக் கப்றொழில் பணிப்பாளருக்கும் இச்சட்டத்தின்கீழான தவறொன்று எந்த வானூர்தி சம்பந்தமாகப் புரியப்பட்டுள்ளதென அல்லது புரியப்படும் தறுவாயிலுள்ளதென நியாயமானமுறையில் நம்பப்படுகின்றதோ அந்த ஏதேனும் வானூர்தியைத் தடுத்து வைக்கும்படி குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் அதிகாரமளிக்கலாமென்பதுடன் கலன் அல்லது வானூர்தி, ஒன்றில் அது காணப்படுகின்ற இடத்தில் அல்லது கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அதை எவ்விடத் துக்குக் கொண்டுவரும்படி கட்டளையிடலாமோ அவ்விடத்தில் அதனைப் பின்னர் தடுத்துவைக்கலாம்.

*கலத்தை அல்லது வானூர்தியைத் தடுத்துவைப் பதற்கான தத்துவம்*

(2) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, கலன் அல்லது வானூர்தி தடுத்துவைக்கப்பட்டமைபற்றி அக்கலத்தின் அல்லது வானூர்தியின் பணிமுதல்வர், கப்பற்றலைவர், சொந்தக்காரர், வாடகைக்கமர்த்துநர் அல்லது முகவருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(3) கலத்தின் அல்லது வானூர்தியின் தடுத்துவைப்பு மற்றும் வேறு சட்டமுறையான கையாளுகையின் நோக்கங்களுக்காக, வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் அல்லது குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் தலைமையதிபதி, சிப்பந்திகளை ஒன்றுதிரட்டுவதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டுமென்பதுடன் கலத்தில் அல்லது வானூர்தியில் ஒரு பொலிசுக் காவலை இடுவது அவசியமென அவர் கருத்தினால் அவ்வாறு செய்யலாம்.

(4) தடுத்துவைத்தலானது காப்பான கட்டுக்காப்புக்காக மட்டுமேயாதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு அல்லது தவறுகை தொடர்பில் அதன்கீழ் உறப்பட்ட ஏதேனும் குற்றப்பணம், செலவுதொகைகள், செலவுகள் அல்லது விதிப்பனவுகளின் கொடுப்பனவுக்காகக் கலத்தின்

அல்லது வானூர்தியின் பணிமுதல்வர், கப்பற்றலைவர், சொந்தக்காரர், வாடகைக்கமர்த்துநர் அல்லது முகவர் என் போரினால் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு இரண்டு போதிய பிணைகாரர்களுடனான முறியொன்று கொடுக்கப்படின், இல்லாதொழிதலும் வேண்டும்.

(5) அத்தகைய ஏதேனும் குற்றப்பணம், செலவுதொகைகள், செலவுகள் அல்லது விதிப்பனவுகளின் கொடுப்பனவில் தவணை தவறப்படின், வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் அல்லது குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் தலைமையதிபதி, கலத்தை அல்லது வானூர்தியைக் கைப்பற்றலாமென்பதுடன் அக்கலன் அல்லது வானூர்தி, சட்டத்துறைத் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விண்ணபத்தின்மேல் தகுதிவாய்ந்த நியாயாதிக் கத்தைக்கொண்டவொரு நீதிமன்றத்தின் கட்டளைமூலம் அரசுக்கு இழப்பிக்கப்பட்டதாக வெளிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(6) அவ்வாறு இழப்பிக்கப்பட்ட ஏதேனும் கலன் அல்லது வானூர்தி, வில்லங்கங்கள் எவற்றிலிருந்தும் விடுப்பட்டதாக விற்பனைசெய்யப்படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் ஒரு கலத்தின் அல்லது ஒரு வானூர்தியின் விற்பனை வரும்படிகள், உரிமைக்கோரிக்கைகளின் முன்னுரிமை தொடர்பான ஏதேனும் சட்டம் எவ்வாறிருப்பினும், முதலில் இச்சட்டத்தின்கீழ் உறப்பட்ட ஏதேனும் குற்றப்பணம், செலவுதொகைகள், செலவுகள் அல்லது விதிப்பனவுகளின் கொடுப்பனவுக்காகவும் விற்பனையிலும் அதற்கு இட்டுச்செல்கின்ற வழக்கு நடவடிக்கைகளிலும் அவை தொடர்பிலும் பயன் படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் மீதியானது கலத்தின் அல்லது வானூர்தியின் சொந்தக்காரருக்கு அல்லது அதன் வரும்படிகளுக்குச் சட்டமுறையாக உரித்துடைய வேறு ஆளுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(8) (அ) இச்சட்டத்தின்கீழ் கலனொன்றின் சொந்தக்காரரினால் உறப்பட்ட ஒரு பொறுப்புத் தொடர்பிலான ஏதேனும் உரிமைக்கோரிக்கைக்கு 1983 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கடலாண்மை நியாயாதிக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு நீடிப்பதாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின்கீழ் ஒரு வானூர்தியின் சொந்தக்காரரினால் உறப்பட்ட ஒரு பொறுப்புத் தொடர்பிலான ஏதேனும் உரிமைக்கோரிக்கைக்கு 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 101 ஆம் பிரிவு நீடிப்பதாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

*இருநூறு தொன்களுக்குக் குறைவான கலன்களைக் கைப்பற்றுவதற்கும், தடுத்து வைப்பதற்கும், இழப்பிப்பதற்குமான தத்துவம்*

**93.** (1) இருநூறு தொன்களுக்குக் குறைவான ஏதேனும் கலன் அல்லது இச்சட்டத்தின்கீழான அல்லது ஒழுங்குவிதிகளின்கீழான ஏதேனும் தவறு புரியப்படுவதில் பயன்படுத்தப்பட்டுள்ளது அல்லது பயன்படுத்தப்படும் தறுவாயிலுள்ளது எனச் சந்தேகிப்பதற்கு அது தொடர்பில் நியாயமான காரணமுள்ள ஏதேனும் கலன் பின்வருவோரினால் கைப்பற்றப்பட்டு ஒன்றில் கரையின்மீதான அல்லது இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளிலான ஏதேனுமிடத்தில் தடுத்துவைக்கப்படலாம்:-

(அ) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் அல்லது இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் அவரது கைப்பட்ட கடிதத்தின்மூலம் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால்; அல்லது

(ஆ) பதவிவரிசையைப் பொருட்படுத்தாது எவரேனும் பொலிசு அலுவலரினால், அல்லது கோப்பரல் அல்லது முதன்மைக் கடலோடி என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள படைகளின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினரினால், அல்லது கரையோரக் காவல் திணைக்களத்தின் எவரேனும் கரையோரக் காவல் அலுவலரினால்,

அத்துடன் அத்தகைய எல்லாக் கைப்பற்றுகைகளும் கட்டுப்பாட்டாளர் தலைமையதிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(2) கைப்பற்றுகின்ற அலுவலர், கைப்பற்றுகை மற்றும் அதன் ஏதுக்கள்பற்றி அவ்வாறு கைப்பற்றப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்ட கலத்தின் சொந்தக்காரருக்கு, வாடகைக்கமர்த்துநருக்கு அல்லது முகவருக்கு, ஒன்றில், அறியப்பட்டிருப்பின்

அவரது வேலைத்தலத்தில் அல்லது வாழிடத்தில் நேரடியாக எழுத்திலான அறிவித்தலை வழங்குவதன்மூலம் அல்லது அம்முகவரிக்கு அஞ்சலில் அனுப்புவதன்மூலம் உடனடியாக அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான அறிவித்தலானது, கைப் பற்றுகை அல்லது தடுத்துவைப்பு, விடயத்துக்கேற்ப, தவறாளரின் அல்லது சொந்தக்காரரின் அல்லது அவரது முகவரின் சமுகத்தில் அல்லது அவரது அறிவுடன் செய்யப்படுமிடத்து, கொடுக்கப் படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் கைப்பற்றுகைக்கு அல்லது தடுத்துவைப்புக்கு உட்பட்ட ஏதேனும் கலன் இழப்பிக்கப் படுவதற்கு உட்பட்டதாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் இழப்பிக்கப்படுவதற்கு உட்பட்ட ஏதேனும் கலத்தின் இழப்பிப்புக்கான அல்லது விடுவிப்புக்கான கட்டளை யொன்று, அதுதொடர்பான குற்றவழக்கு எந்த நீதிமன்றத் தின்முன்னர் நடைபெற்றுள்ளதோ அந்த நீதிமன்றத்தினால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(6) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் செய்யப்பட்டவொரு விண்ணப்பத்தின்மேல் இச்சட்டத்தின்கீழான அல்லது ஒழுங்கு விதிகளின்கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளதென்றும் கலனானது தவறு புரியப்படுவதில் பயன்படுத்தப்பட்டதென்றும் நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பிக்கப்படுமிடத்து, ஆளெவரும் அத்தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கவில்லை அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கவில்லையென்பது எவ்வாறி ருப்பினும், கலத்தின் இழப்பிப்புக்காக நீதிமன்றமானது கட்டளை யொன்றை ஆக்குதல் வேண்டும்.

## பாகம் VI

## இலங்கைப் பிரசைகளல்லாத ஆட்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்

பாகம் VI இன் ஏற்புடைமை

**94.** ஆளொவ்வொருவரும் -

(அ) அவர் இலங்கைப் பிரசையாகவிருந்தாலொழிய; அல்லது

(ஆ) அவர் அப்போதைக்கு வலுவிலுள்ள பாகம் I றின் கீழான ஏதேனும் கட்டளையின் பயனைக் கொண்டு, இப்பாகத்தின் ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப் பட்டிருந்தாலொழிய,

அவருக்கு இப்பாகம் ஏற்புடையதாதல் வேண்டும்.

தன்னிச்சையான புறப்பாடு

**95.** (1) இலங்கைப் பிரசையொருவரல்லாதவரும் அவருக்கு வழங்கப்பட்ட விசாவினால் அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியை விஞ்சியுள்ளவருமான எவரேனுமாள் உடனடியான தன்னிச்சை யான புற்பாட்டுக்காகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியின் முன்னர் அல்லது ஒரு குடிவரவு அலுவலரின்முன்னர் தன்னிச்சையாகத் தோன்றலாம்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்கள் இச்சட்டத்தின்கீழானவொரு தண்டம் ஏதேனுமிருப்பின் அதனை, அல்லது ஒழுங்குவிதிகள் என்றவகையாகக் காலத்துக்குக்காலம் அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்டவாறான எவையேனும் தண்டங்களைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய ஆளினால் தண்டம் செலுத்தப்பட்டதன்மேல், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட காலப்பகுதியொன்று முடிவுறுமுன்னர் இலங்கையிலிருந்து புறப்படும்படி கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அவருக்குக் கட்டளையிடலாம்.

(4) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய ஆள் தண்டத்தைச் செலுத்துவதற்குத் தவறுமிடத்து, கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, அத்தகைய ஆளை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்தல் வேண்டுமென்பதுடன் தண்டம் செலுத்தப்படும் தேதிவரை இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு அவருக்கெதிராப் பயணத்தடையொன்றை விதித்தலும் வேண் டும்.

(5) இப்பிரிவின்கீழ் தன்னிச்சையாகப் புறப்படும் ஆளொருவர் 124 ஆம் பிரிவின்கீழான தவறொன்றுக்கு ஆளாதலாகாது.

கட்டளையின் மூலம் ஆட்களின்மீது மட்டுப்பாடுகளை விதிப்பதற்கான தத்துவம்

**96.** (1) அமைச்சர், பொதுமக்கள் நலன்கருதி உசிதமானதென அவர் கருதினால், இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள ஆட்கள் இலங்கையில் தங்கியிருக்கும்போது, அவர்களின் நடமாட்டங்கள் அல்லது செயற்பாடுகளின்மீதான மட்டுப்பாடுகளைக் கட்டளை மூலம் விதிக்கலாம் என்பதுடன் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் அக்கட்டளையில் ஏற்பாடுசெய்யவும்படலாம்:-

(அ) அத்தகைய ஆட்கள் எச்சூழ்நிலைகளிலும் எந்நோக்கத்துக்காகவும் குடிவரவு அலுவலர்களுக்கு விபரத்திரட்டுக்களைக் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படலாமோ அச்சூழ்நிலைகளும் அந்நோக்கமும், அத்தகைய விபரத்திரட்டுக்களின் படிவமும் அதன்கண் பதியப்படவேண்டிய விபரங்களும்;

(ஆ) கட்டளையின்கீழ் தயாரிக்கப்பட்ட விபரத்திரட்டுக்களில் குறித்துரைக்கப்பட்ட விபரங்களின் செம்மையை எம்முறையிலும் பாதிக்கின்ற எவையேனும் சூழ்நிலைகள் இடம்பெற்றமை தொடர்பாக அத்தகைய ஆட்களினால் வழங்கப்படவேண்டிய தகவல்கள்;(இ)கட்டளைமூலம் ஆக்கப்படக்கூடியவாறு, வதிவிடம், வதிவிட மாற்றம், பயணித்தல் என்பன தொடர்பான அல்லது வேறுவகையான அத்தகைய ஏற்பாடுகள் அத்தகைய ஆட்களினால் இணங்கியொழுகப்படுதல்;

(ஈ) அமைச்சர், பொதுமக்கள் நலன்கருதி அவசியமெனக் கருதக்கூடியவாறு அத்தகைய ஆட்களின் செயற்பாடுகள் அல்லது இணையாளிகள் பற்றி அத்தகைய கடப்பாடுகளை, தேவைப்பாடுகளை, நிபந்தனைகளை அல்லது மட்டுப்பாடுகளை விதித்தல்;

(உ) குடிவரவு அலுவலர்களினால் வைத்திருக்கப்பட வேண்டிய இடாப்புக்களின் படிவமும் அவற்றின்கண் பதியப்படவேண்டிய விபரங்களும்;

(ஊ) அத்தகைய ஆட்கள் தொடர்பாகக் குடிவரவு அலு வலர்களும் பொலிசு அலுவலர்களும் கைதுசெய்தல், தடுத்துவைத்தல், வளவுகளை அல்லது ஆளைத் தேடுதல் என்ற தத்துவங்களை எச்சூழ்நிலைகளில் பிரயோகிக்கலாமோ அச்சூழ்நிலைகளும், கட்டளைக்கு முழுப்பயன் கொடுக்கும் நோக்குடன் ஏற்பாடுசெய்வது உசிதமான தெனத் தோன்றுகின்ற வேறெவையேனும் துணைநிலையான கருமங்களும்; அத்துடன்

(எ) இவ்வுட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கருமங்களின தும் விடயங்களினதும் இடைநேர்விளைவான அல்லது அவற்றுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களும்.

(2) இப்பிரிவின்கீழான கட்டளையொன்று, ஒன்றில் எவரேனு மாள் அல்லது ஆட்கள் தொகுதி தொடர்பில் ஒரு விசேட கட்டளை யொன்றாக இருக்கலாம் அல்லது ஏதேனும் வகுப்பினரான அல்லது விவரணத்தினரான ஆட்களுக்கு ஏற்புடையற்பாலதாக வுள்ள ஒரு பொதுக் கட்டளையாக இருக்கலாம்.

குடிவரவு அலுவலர் களினால் வைத்திருக்கப் படவேண்டிய இடாப்புக்கள்

**97.** (1) குடிவரவு அலுவலர் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின் நோக்கத்துக்காக இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள ஆட்களின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். அத்தகைய அலுவலர், அந்த இடாப்பில், அத்தகைய அலுவலருக்கு விபரத்திரட் டொன்றைக் கொடுத்துதவுவதற்கு 96 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வோராள் தொடர்பிலும், அத்தகைய இடாப்பில் பதியப்படுவதற்குத் தேவைப் படுத்தப்படுகின்றவாறான அத்தகைய ஆள் தொடர்பான அத்தகைய விபரங்களை இடாப்பில் பதிதல் வேண்டும்.

(2) மேற்கூறப்பட்ட குடிவரவு அலுவலர், அத்தகைய அலுவலருக்கு முன்னர் கொடுத்துதவப்பட்ட விபரங்களின் செம்மையை ஏதேனும் முறையில் பாதிக்கின்ற எவையேனும் சூழ்நிலைகள் இடம்பெற்றமைபற்றி இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள எவரேனுமாளினால் அவருக்கு அறிவிக்கப்பட்டதன்மேல், இடாப்பின் செம்மையைப் பேணுவதற்கு அவசியமாகக் கூடியவாறாக, அத்தகைய ஆள் தொடர்பாக இடாப்பிலுள்ள பதிவீடுகளில் அத்தகைய திருத்தங்களைச் செய்தல் வேண்டும்.

**98.** (1) இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள ஆளொருவர் -

இலங்கைப் பிரசைக ளல்லாத ஆட்கள் இலங்கை யிலிருந்து அப்புறப் படுத்தப் படுவதனைப் பணிப்பதற்கு அமைச்ச ருக்குள்ள தத்துவம்

(அ) இச்சட்டத்தின் பாகம் III, IV அல்லது V என்பவற்றின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அத்தகைய ஏதேனும் பாகத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறி இலங்கையினுட் பிரவேசித்தமை அல்லது இலங்கையில் தரித்திருந்தமை; அல்லது

(ஆ) அவருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் புறக்குறிப்பின்மூலம் அல்லது வழங்கப்பட்ட விசாவின்மூலம் அவர்மீது விதிக்கப்பட்ட நியதிகள், நிபந்தனைகள் அல்லது மட்டுப்பாடுகளுள் எவற்றுக்கும் இணங்கியொழுகத் தவறியமை; அல்லது

(இ) பாகம் VI றின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை யின்மூலம் அவர்மீது விதிக்கப்பட்ட நியதிகள், நிபந்தனைகள் அல்லது மட்டுப்பாடுகளுள் எவற்றுக்கும் இணங்கியொழுகத் தவறியமை,

காரணமாக இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப் பளிக்கப்படுமிடத்து, அமைச்சர், ஓர் அப்புறப்படுத்தற் கட்டளையின்மூலம், அவ்வாறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளைக் கைதுசெய்து, தடுத்துவைத்து, ஒரு வானூர்தியில் அல்லது கலத்தில் ஏற்றும்படி ஒரு விதித்துரைக்கப்பட்ட அலுவலரைப் பணிக்கலாம் என்பதுடன் அவ்வானூர்தியின் பணிமுதல்வர் அல்லது அக்கலத்தின் கப்பற்றலைவர் அத்தகைய ஆளை இலங்கையிலிருந்து அப்புறப்படுத்துதல் வேண்டுமென அக்கட்டளைமூலம் அல்லது ஏதேனும் அடுத்துப்பின்னரான கட்டளைமூலம் மேலும் பணிக்கலாம்.

(2) இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள ஆளொருவர் -

(அ) இச்சட்டத்தின் பாகம் III, IV அல்லது V இன் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அத்தகைய ஏதேனும் பாகத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது 96 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின்மூலம் அத்தகைய ஆளுக்கு விதிக்கப்பட்ட

ஏதேனும் மட்டுப்பாட்டை மீறி இலங்கையினுட் பிரவேசிக்கின்றார் அல்லது தரித்திருக்கின்றார்; அல்லது

(ஆ) அவரது விசா அல்லது புறக்குறிப்பு இல்லாதாக்கப் பட்டுள்ளது, அல்லது

(இ) விசாவில் அல்லது புறக்குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி வரம்புகடந்துள்ளது,

என அமைச்சர் திருப்திப்படுமிடத்து, அமைச்சர் கட்டளைமூலம், அத்தகைய ஆளையும், அவசியமானவிடத்து வழிக்காப்பாளரையும் கைதுசெய்து, தடுத்துவைத்து, ஒரு வானூர்தியில் அல்லது கலத்தில் ஏற்றும்படி விதித்துரைக்கப்பட்ட அலுவலரொருவரைப் பணிக்கலாமென்பதுடன் அவ்வானூர்தியின் பணிமுதல்வர் அல்லது அக்கலத்தின் கப்பற்றலைவர் அத்தகைய ஆளை இலங்கையிலிருந்து அப்புறப்படுத்துதல் வேண்டுமென அக்கட்டளைமூலம் அல்லது ஏதேனும் அடுத்துப்பின்னரான கட்டளைமூலம் மேலும் பணிக்கலாம்.

(3) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, அவரது சொந்தப் பிரேரணையின்மீது அல்லது அமைச்சரின் பணிப்பின்மீது (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் பற்றி விசாரணைசெய்யலாம் என்பதுடன் அவைபற்றி அமைச்சருக்கு விதப்புரைகளையும் செய்யலாம்.

(4) இப்பிரிவின்கீழ் அமைச்சரினால் கட்டளையொன்று ஆக்கப்படலாம் என்பதுடன் அத்தகைய கட்டளைமூலம் அளிக்கப்பட்ட தத்துவங்கள், எவரேனும் ஆள் தொடர்பாக, அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் சட்டத்தின்கீழ் நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட மறியற் றண்டனைத்தீர்ப்பொன்றை அனுபவித்துக்கொண்டிருக்கின்றார் என்பது எவ்வாறிருப்பினும், பிரயோகிக்கப்படலாம்.

(5) எவரேனும் சமாதான அலுவலர், இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வலோத்காரத்தையும் பயன்படுத்தலாம்.

(6) இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரைகள் 126 மற்றும் 140 க்கமைய இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை இறுதியானதாதல் வேண்டுமென்பதுடன் இலங்கையிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் எதிர்க்கப்படுதலுமாகாது.

(7) (அ) இப்பிரிவின்கீழான ஏதேனும் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஆளொருவரை இலங்கையிலிருந்து அப்புறப்படுத்தும்படி வானூர்தியொன்றின் பணிமுதல்வர் அல்லது கலனொன்றின் கப்பற்றலைவர் பணிக்கப்பட்டுள்ள விடத்தும், அப்பணிமுதல்வர் அல்லது கப்பற்றலைவர் அவ்வாறு செய்யத் தவறுமிடத்தும், அவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

(ஆ) சொல்லப்பட்ட தவறுக்காக வானூர்தியின் பணிமுதல் வருக்கு அல்லது கலனொன்றின் கப்பற்றலைவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை ஒரு குற்றப்பணத்தைக் கொண்டுள்ளவிடத்து அல்லது உள்ளடக்குமிடத்து அத்துடன் அக்குற்றப்பணம் முழுவதும் அல்லது அதன் பாகம், அக்குற்றப்பணம் விதிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழுநாட்களினுள் செலுத்தப்படாதுள்ளவிடத்து, அக்குற்றப்பணத்தை விதித்த நீதிமன்றம், வானூர்தியின் அல்லது கலத்தின் உடைமையைச் சட்டப்படி கைப்பற்றி விற்பனை செய்வதன்மூலம் செலுத்தப்படாதெஞ்சியுள்ள தொகை அறவிடப்படவேண்டுமெனப் பணிக்கலாம்.

(8) ஏழாம் உட்பிரிவின்கீழானவொரு தவறுக்காக ஒரு வானூர்தியின் பணிமுதல்வருக்கெதிராக அல்லது ஒரு கலத்தின் கப்பற்றலைவருக்கெதிராக நீதிமன்றமொன்றில் வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் முடிவுறும்வரை அல்லது நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஏதேனுமிருப்பின் அது செலுத்தப்படும்வரை அக்கலத்தின் அல்லது வானூர்தியின் வெளிச்செல்கைக்கான இசைவை மறுக்கும்படி இயைபான அதிகாரிகளுக்கு நீதிமன்றம் கட்டளையிடலாம்.

(9) இப்பிரிவின்கீழ் அப்புறப்படுத்தப்பட்ட ஆளொருவருக் கெதிராக, அமைச்சர், இலங்கையினுட் பிரவேசிப்பதற்கானவொரு வரையறுக்கப்பட்ட அல்லது நிரந்தரப் பயணத்தடையை விதிக்கலாம்.

இலங்கைப் பிரசைகள் தவிர்ந்த ஆட்களை இலங்கை யிலிருந்து நாடுகடத்து வதற்கு அமைச்சருக் குள்ள தத்துவம்

**99.** (1) அமைச்சர், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியின் விதப்புரையின் மீது, பின் வரும் சூழ் நிலைகளுள் ஏதேனுமொன்றில், இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள எவரேனுமாள் இலங்கையை விட்டுநீங்கி அதன்பின்னர் இலங்கைக்கு வெளியே தரித்திருப்பதனைத் தேவைப்படுத்துகின்றதும் இச்சட்டத்தில் "நாடுகடத்தற் கட்டளை" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான கட்டளையொன்றை ஆக்கலாம்:-

(அ) (i) அவ்வாள், தன்னையும் தனது தங்கிவாழு நர்களையும் பராமரிப்பதற்கு இயலாதுள்ளவரென;

(ii) அவ்வாள் தனக்கும் ஏனையோருக்கும் அபாயம் விளைவிக்கக்கூடிய சித்தசுவாதீனமற்றவரென;

(iii) அவ்வாள், விபசாரத்துக்காகக் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டுள்ளவரென, கூட்டிக்கொடுப்பவ ரென அல்லது அவ்வாள் மற்றவர்களின் விபச்சாரத்தின்மீது வாழ்கின்றாரென; அல்லது

(iv) அவ்வாள், மருத்துவக் காரணங்களுக்காக இலங்கையில் தரித்திருப்பதற்கு அனுமதிக்கப்படு தற்கு விரும்பத்தக்கவரல்லரென,

அமைச்சர் போதியதெனக் கருதக்கூடிய சான்றின்மூலம் காண்பித்துள்ளவிடத்து;

(ஆ) அவ்வாள் ஏதேனும் குற்றவியல் தவறுக்காக, குறிப்பாக அபாயகரமான அவுடதங்கள், போதையூட் டும் அவுடதங்கள் அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்கள், சிறுவர் துர்ப்பிரயோகம், மனிதரைக் கள்ளமாகக் கடத்தல், மனித வியாபாரம் அல்லது பயங்கரவாதம் என்பன தொடர்பான தவறுகளுக்காக

இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு மறியற்றண்டனைத் தீர்ப்பொன்று எத்தவறுக்காக அளிக்கப்பட்டுள்ளதோ அத்தவறொன்று தொடர்பில் கட்டற்ற மன்னிப் பொன்றைப் பெற்றிராதுள்ளவிடத்தும், அத்துடன் அவற்றோடு சம்பந்தப்பட்ட சூழ்நிலைகள் காரணமாக இலங்கையில் தரித்திருப்பதற்கு அனுமதிக்கப் படுதற்கு விரும்பத்தக்கவரல்லாத ஆளொருவராக வுள்ளாரென அமைச்சரினால் கருதப்படுமிடத்தும்;

(இ) அவ்வாள் மீளஒப்படைத்தல் தொடர்பாக இலங்கை யில் வலுவிலிருந்த அல்லது வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கருத்துக்குட்பட மீளஒப்படைக்கத் தக்கவொரு தவறுக்காக இலங்கைக்கு வெளியே தண்டனைத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்தும்; அல்லது

(ஈ) அவ்வாளுக்கெதிராக நாடுகடத்தற் கட்டளை யொன்றை ஆக்குவது பொதுமக்கள் நலன்கருதி உகந்ததாகவுள்ளதென அமைச்சர் கருதுமிடத்தும்.

(2) அமைச்சர், நாடுகடத்தற் கட்டளையொன்றின்மூலம், அவ்வாறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு அவசியமானவிடத்து வழிக்காப்பாளருடன் அனுப்பப்பட்ட ஆளைக் கைதுசெய்யும்படியும் தடுத்துவைக்கும்படியும் ஒரு வானூர்தியின்மீது அல்லது கலத்தின்மீது ஏற்றும்படியும் விதித்துரைக்கப்பட்ட அலுவலரொரு வரைப் பணிக்கலாமென்பதுடன் அவ்வானூர்தியின் பணிமுதல்வர் அல்லது அக்கலத்தின் கப்பற்றலைவர் அத்தகைய ஆளை இலங்கையிலிருந்து அப்புறப்படுத்தவேண்டுமென்று அக்கட்டளைமூலம் அல்லது ஏதேனும் அடுத்துப்பின்னரான கட்டளைமூலம் மேலும் பணிக்கலாம்.

(3) அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின்கீழான நாடுகடத்தற் கட்டளையொன்றை ஆக்குமிடத்து, கட்டுப்பாட்டாளர் தலைமை யதிபதி, அத்தகைய ஆளை நாடுகடத்துவதற்கு, ஏற்புடையற் பாலனவாகவுள்ள சட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அவசியமான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை யொன்றின்மூலம் அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்கள், எவரேனுமாள் தொடர்பாக, இச்சட்டத்தின்கீழ் அல்லது

வேறேதேனும் சட்டத்தின்கீழ் அத்தகைய ஆள் நீதிமன்ற மொன்றினால் விதிக்கப்பட்டவொரு மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக்கொண்டிருக்கின்றார் என்பது எவ்வாறிருப்பினும், பிரயோகிக்கப்படலாம்.

(5) அரசியலமைப்பின் உறுப்புரைகள் 126 மற்றும் 140 என்பவற்றுக்கமைய இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை இறுதியானதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இலங்கையிலுள்ள ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் எதிர்க்கப்படுதலுமாகாது.

(6) எந்த ஆள்தொடர்பில் நாடுகடத்தற் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த ஆளொருவர் அக்கட்டளைக்கிணங்க இலங்கையை விட்டுநீங்குதல் வேண்டுமென்பதுடன் அதன்பின்னர் அக்கட்டளை வலுவிலுள்ள காலம்வரை இலங்கைக்கு வெளியே தரித்திருத்தலும் வேண்டும்.

(7) எவரேனும் சமாதான அலுவலர், இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வலோத்காரத்தையும் பயன்படுத்தலாம்.

(8) அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின்கீழான நாடுகடத்தற் கட்டளையொன்றை ஆக்குமிடத்து, அத்தகைய ஆள் அமைச்சரினால் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் தடுத்துவைக்கப்படலாம்.

நாடு கடத்தப்பட்ட அல்லது அப்புறப் படுத்தப்பட்ட ஆட்களின் பணமும் ஆதனமும் செலவு தொகைகளையும் விதிப்பனவுகளையும் செலுத்துவதில் பயன்படுத்தப் படலாம்

**100.** (1) எவரேனுமாளின் விடயத்தில் ஒரு நாடுகடத்தற் கட்டளை அல்லது அப்புறப்படுத்தற் கட்டளை ஆக்கப்படுமிடத்து, அமைச்சர், தகுதியானதெனக் கருதினால் அவ்வாள் தொடர்பில் அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவுதொகைகளினதும் விதிப்பனவுகளினதும் முழுமையையும் அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தைச் செலுத்துவதில் அவ்வாளின் ஏதேனும் பணத்தை அல்லது ஆதனத்தைப் பயன்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் பணம், எவரேனுமாள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செலவுகளின் எந்த மொத்தத் தொகைக்கு ஆளாகவுள்ளாரோ அந்த மொத்தத் தொகைக்கு விஞ்சுதலாகவுள்ளவிடத்து, எஞ்சியுள்ள பணத்தின் ஏதேனும் மீதி அவருக்குத் திருப்பிக்கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் பணம், எவரேனுமாள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செலவுகளின் எந்த மொத்தத் தொகைக்கு ஆளாகவுள்ளாரோ அந்த மொத்தத் தொகைக்குக் குறைவாகவுள்ளவிடத்து, மீதியானது அவ்வாளினால் மீளச்செலுத்தப்படவேண்டிய தனிசொன்றாகப் பதியப்படுதல் வேண்டும். இப்பிரிவின்கீழ் அரசாங்கத்துக்கான ஏதேனும் தனிசு நிலுவையாகவிருக்கையில் அவ்வாளுக்கு எதிர்கால விசாவெதுவும் அளிக்கப்படுதலாகாது.

பாதுகாப்பு வழிக்காப்பாளர்களுக்கான ஒழுங்கேற்பாடு செய்தல்

**101.** (1) அவசியமானவிடத்து, கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, இப்பாகத்தின்கீழ் ஆளொருவரை அப்புறப் படுத்துவதற்காக அல்லது நாடுகடத்துவதற்காக ஒரு வானூர்தியின் சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக் கமர்த்துநருடன் பாதுகாப்பு வழிக்காப்பாளர் ஒருவராக இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலரொருவரை அல்லது பொலிசு உப பரிசோதகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவரைக் குறித்தளிப்பதற்கான ஒழுங்கேற்பாடு களைச் செய்யலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில், இயன்றளவு விரைவாக, ஆனால் பறத்தலின் அட்டவணைப்படுத்தப்பட்ட புறப்பாட்டு நேரத்துக்கு முன்னர் இருபத்திநான்கு மணித்தி யாலங்களுக்குப் பிந்தாமல், அவர் பின்வரும் தகவல்களை வழங்குதல் வேண்டும்:-

(அ) அப்புறப்படுத்தல் அல்லது நாடுகடத்தற் கட்டளையின் பிரதியொன்று; அத்துடன்

(ஆ) குடியியல் வான்செலவு அதிகாரசபையின் கலந்தா லோசனையுடன் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி யினாலான ஆபத்து மதிப்பீடொன்று மற்றும்

பறத்தலின் பாதுகாப்புக்கான ஆபத்தை மதிப்பீடு செய்வதற்கு வானூர்தித் தொழிற்படுத்துநருக்கு உதவக்கூடிய வேறெவையேனும் சம்பந்தப்பட்ட தகவல்கள்; அத்துடன்

(இ) எவரேனும் வழிக்காப்பாளர்களின் பெயர்களும் நாட்டிணங்களும்.

*(2)* கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, நாடுகடத்துவதற்காக அல்லது அப்புறப்படுத்துவதற்காக ஓராளை முன்வைக்கும் போது, ஏதேனும் இடைப்பெயர்வு அல்லது சேரிட அரசினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லா அலுவலகமுறையான ஆவணப் படுத்துகையும் வானூர்தித் தொழிற்படுத்துநருக்கு வழங்கப்படு வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*(3)* கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, ஆளொருவரை அப்புறப்படுத்துவதற்கான அல்லது நாடுகடத்துவதற்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்யும்போது,-

(i) கொடுக்கப்பட்டவொரு பறத்தலில் இடம்பெயர்க்கப் படக்கூடிய அத்தகைய ஆட்களின் எண்ணிக்கை சம்பந்தமாக வானூர்தித் தொழிற்படுத்துநரின் கொள்கையைக் கவனத்துட்கொள்ளலாம்; அத்துடன்

(ii) செயல்முறைக்குகந்தபோதெல்லாம் நேரடியான நிறுத்துகையற்ற பறத்தல்களைப் பயன்படுத்தலாம்.

*(4)* பறத்தலின் காப்பும் பாதுகாப்பும் தொடர்பான நியாயமான கரிசனைகள் உள்ளபோது குறிப்பிட்டவொரு பறத்தலின்மீது நாடுகடத்தப்படுகின்ற அல்லது அப்புறப்படுத் தப்படுகின்ற ஆளொருவரை இடம்பெயர்க்க மறுப்பதற்கு வானூர்தியொன்றின் சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமாத்துநர் அல்லது வானூர்தியின் பணிமுதல்வர் முடிபுசெய்தால், அம்முடிபு கட்டுப்பாட்டாளர் தலைமையதி பதிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு வானூர்தியொன்றின் சொந்தக்காரர், முகவர் அல்லது வாடகைக்கமர்த்துநரிடமிருந்து அல்லது வானூர்தியின் பணிமுதல்வரிடமிருந்து தகவல் பெறப்பட்டதன்மேல், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி –

(i) அப்புறப்படுத்தப்படுகின்ற அல்லது நாடுகடத்தப்படுகின்ற ஆளொருவரை வழிக்காப்பாளருடன் அனுப்புவதனை வசதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம்;

(ii) இடைநிலை அரசொன்றிலான இடைப்பெயர்வு நிறுத்துகைகளுட்பட பிரயாண விபரங்களை வழங்கலாம்; அத்துடன்

(iii) அதிகாரிகளினாலும் இடைப்பெயர்வு அமைவிடத்தில் சம்பந்தப்பட்ட வானூர்தித் தொழிற்படுத்துநரினாலும் வந்தடைவதற்கு முன்கூட்டி பொருத்தமான மாற்று ஒழுங்கேற்பாடுகள் உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய, நாடுகடத்தப்படுபவரின் அல்லது அப்புறப்படுத்தப்படுகின்ற ஆளின் இறுதிச் சேரிடம்வரை வழிக்காப்பாளர் அவருடன் தரித்திருப்பதனை உறுதிப்படுத்தலாம்.

## பாகம் VII

### பயண ஆவணங்கள்

இப்பாகத்தின் ஏற்புடைமை

**102.** இப்பாகத்தின் ஏற்பாடுகள், ஒவ்வோராளுக்கும், அத்தகைய ஆள் பாகம் I றின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மூலம் இப்பாகத்தின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கப்பட்டாலொழிய, ஏற்புடையனவாதல் வேண்டும்.

இலங்கைப் பயண ஆவணங்கள் இலங்கை அரசாங்கத்தின் ஆதனமாதல் வேண்டும்.

**103.** (1) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட இலங்கைப் பயண ஆவணமொன்று இலங்கை அரசாங்கத்தின் ஆதனமாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் இலங்கை அரசாங்கத்துக்கு அளிக்கப்பட்ட உரிமையானது, ஓர் இலங்கைப் பயண ஆவணத்தை வைத்திருப்பவரினால் அல்லது வேறெவரேனும் ஆளினால் அது விற்பனைசெய்யப்படுவதன்மூலம், அல்லது அது தொடர்பில் அதனை வைத்திருப்பவரினால் அல்லது வேறெவரேனும் ஆளினால் கொடுக்கப்பட்ட, செய்யப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் பிணைப்பொறுப்பு, அடைமானம், வைப்பு அல்லது வில்லங்கத்தின் மூலம், முறியடிக்கப்படுதலோ அல்லது பாதிக்கப்படுதலோ ஆகாது.

(3) ஆளெவரும், ஓர் இலங்கைப் பயண ஆவணத்தை, பிணைப்பொறுப்பு, அடைமானம், வைப்பு அல்லது வில்லங்கம் ஒன்றாகக் கொடுத்தலோ, செய்தலோ அல்லது ஏற்றுக்கொள்ளுதலோ ஆகாது என்பதுடன் அப்பயனை வேறுவகையாகக் கொண்டிருக்கும் ஓர் உடன்படிக்கையின் ஏதேனும் நியதி வறிதாதலும் வேண்டும்.

*இலங்கைப் பயண ஆவணங்களை வழங்கும் அதிகாரி*

**104.** (1) ஒவ்வோர் இலங்கைப் பயண ஆவணமும் இலங்கை அரசாங்கத்திற்காகவும் அதன் சார்பிலும் கட்டுப் பாட்டாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, இவ்வதிகாரத்தை, ஒரு மேலதிகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு, கட்டுப்பாட் டாளர்களுக்கு, பிரதிக் கட்டுப்பாட்டாளர்களுக்கு, உதவிக் கட்டுப்பாட்டாளர்களுக்கு மற்றும் வெளிநாட்டிலுள்ள இலங்கைக் கடல்கடந்தவொரு காவற்றூதரகத்தைச் சேர்ந்த இராஜதந்திர அல்லது பணிக்குழு அலுவலரொருவருக்குக் கையளிக்கலாம்.

*இலங்கைப் பயண ஆவணத்துக்கான விண்ணப்பம்*

**105.** இலங்கைப் பயண ஆவணமொன்றுக்கான ஒரு விண்ணப்பம் -

(அ) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு அல்லது இலங்கைக் கடல்கடந்த பணிக்குழுவொன்றைச் சேர்ந்தவொரு தூதரக அலுவலருக்கு, விதித்துரைக்கப் பட்ட படிவத்திலும் முறையிலும் செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அடையாளங்காண் தகவல்களுட்பட, விண்ணப்ப காரரின் விதித்துரைக்கப்பட்ட விபரங்களுடனும், குறிப்பிட்ட ஏதேனும் விடயத்தில் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் அல்லது வேறெவரேனும் கையளிக்கப்பட்ட அதிகாரியினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்களுட னும், தகவல்களுடனும், ஆவணங்களுடனும் சேர்த் தனுப்பப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) விதித்துரைக்கப்பட்ட கட்டணம் ஏதேனுமிருப்பின் அதனுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

*இலங்கைப் பிரசையொருவர் ஓர் இலங்கைப் பயண ஆவணத்துக்கு உரித்துடையவராதல்*

**106.** இலங்கைப் பிரசையொருவர், கட்டுப்பாட்டளர் தலைமையதிபதிக்கான விண்ணப்பத்தின்மீது, இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் ஓர் இலங்கைப் பயண ஆவணம் வழங்கப்படுவதற்கு உரித்துடையவராக வுள்ளார்.

*கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, ஆளொருவரின் பிரசாவுரிமையும் ஆளடையாளமும் பற்றித் திருப்திப்படுதல்*

**107.** (1) ஆளொருவருக்கு இலங்கைப் பயண ஆவண மொன்றை வழங்குமுன்னர், கட்டுப்பாட்டாளர் தலைமை யதிபதி —

(அ) அவ்வாள் இலங்கைப் பிரசையொருவராக உள்ளா ரென்றும்; அத்துடன்

(ஆ) அவ்வாளின் ஆளடையாளம் பற்றியும்,

திருப்திப்படுதல் வேண்டும்.

(2) பிரசாவுரிமையையும் ஆளடையாளத்தையும் நிலைநாட்டு வதற்கான விடயங்களைக் கொடுத்துதவுதல் தொடர்பாக இச்சட்டத்திலும் ஏதேனும் ஒழுங்குவிதியிலும் குறித்துரைக்கப் பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கு விண்ணப்பகாரர் இணங்கியொழுகுதல் வேண்டும்.

*அவசரகாலச் சான்றிதழ்களையும் ஆளடையாளச் சான்றிதழ்களையும் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி வழங்குதல்*

**108.** (1) இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும், அல்லது அதற்கென ஆக்கப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்ட வேறேதேனும் நாட்டுக்கும் பயணிப்பதற்குக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது இலங்கை அவசரகாலச் சான்றிதழொன்று வழங்கப்படுவதற்கு இலங்கைப் பிரசையொருவர் உரித்துடையவராகவுள்ளார்.

(2) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, ஆளொருவருக்கு இலங்கை அவசரகாலச் சான்றிதழொன்றை வழங்குமுன்னர், அவ்வாள் இலங்கைப் பிரசையொருவராகவுள்ளாரென்றும் அவரின் ஆளடையாளம் பற்றியும் திருப்திப்படுதல் வேண்டும்.

(3) இலங்கைப் பிரசையொருவர் அல்லாதவரும், இலங்கையில் இயைபான தூதரகம் அல்லது காவற்றூது அலுவலகம் கிடைக்கக்கூடியதாகவிராதமை காரணமாக நியாய மானவொரு காலப்பகுதியினுள் தேசியக் கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு எக்காரணத்துக்காகவேனும் இயலாதவராகவுள்ளவருமான எவரேனுமாள், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிப்பதன்மீது, அவர் நாட்டினத்தவராகவுள்ள நாட்டுக்குத் திரும்பிச்செல்லும் நோக்கத்துக்காக மட்டுமே கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் ஆளடையாளச் சான்றிதழொன்று அவருக்கு வழங்கப்படலாம்.

(4) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆளொருவருக்கு இலங்கை ஆளடையாளச் சான்றிதழை வழங்குமுன்னர் அவ்வாளின் ஆளடையாளம் பற்றித் திருப்திப்படுதல் வேண்டும்.

*இராஜதந்திர அல்லது அலுவலக முறையான கடவுச்சீட்டுக்களை வழங்குதலும் அவற்றின் செல்லுபடிக் காலப்பகுதியும்*

**109.** (1) ஓர் இராஜதந்திர அல்லது அலுவலகமுறையான கடவுச்சீட்டு, அமைச்சரினால் ஆக்கப்பட்ட அத்தகைய பணிப்புக்கிணங்க அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவோர் ஆளுக்கு அல்லது வகுதியினரான ஆட்களுக்கு மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.

(2) ஓர் இராஜதந்திர அல்லது அலுவலகமுறையான கடவுச்சீட்டின் செல்லுபடியாந்தன்மையினது கால எல்லை அமைச்சரினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கென அமைச்சரினால் ஆக்கப்பட்ட பணிப்புகளின்மூலம் அமைச்சரினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைந்தாக்கப்படுதலும் வேண்டும்.

(3) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஓர் இராஜதந்திர அல்லது அலுவலகமுறையான கடவுச்சீட்டுக்கு உரித்துடைய ஆளொருவருக்கு, அவ்வாள் ஓர் இராஜதந்திர அல்லது அலுவலகமுறையான கடவுச்சீட்டு தவிர்ந்த வேறோர் இலங்கைப் பயண ஆவணத்தை வைத்திருக்கையில் ஓர் இராஜதந்திர அல்லது அலுவலகமுறையான கடவுச்சீட்டை வழங்கலாம்.

(4) இராஜதந்திர அல்லது அலுவலகமுறையான கடவுச்சீட்டொன்றை வழங்குவதற்கான முறையும் நடவடிக்கைமுறையும் தொடர்பாகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு அமைச்சர் பணிப்புகளை வழங்கலாம்.

இலங்கைக் கடவுச்சீட்டின் செல்லுபடிக் காலப்பகுதி

**110.** ஓர் இலங்கைக் கடவுச்சீட்டின் செல்லுபடிக் காலப் பகுதி அமைச்சரினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

அடையாளங் காண் தகவல்களைப் பெறுதல்

**111.** (1) ஓர் இலங்கைப் பயண ஆவணத்துக்காக விண்ணப்பிக்கின்ற ஆளொருவர், அத்தகைய ஆளிடமிருந்து அடையாளங் காண் தகவல்கள் சேரிக்கப்படுவதனை அனுமதித்தல் வேண்டும்.

(2) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின் கீழ் சேகரிக்கப்பட்ட அடையாளங்காண் தகவல்களைப் பகுப்பாய்வு செய்யலாமென்பதுடன் அத்தகைய ஆளுக்கு இலங்கைப் பயண ஆவணம் வழங்கப்படவேண்டுமா அல்லது இல்லையாவென்பதையும் முடிபுசெய்யலாம்.

(3) அடையாளங்காண் தகவல்கள் சேகரிக்கப்படுவதனை அனுமதிப்பதற்கு அவ்வாள் தவறினால், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அத்தகைய ஆளுக்கு இலங்கைப் பயண ஆவணமொன்றை வழங்க மறுக்கலாம்.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அதற்கென ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க அத்தகைய தகவல்களை வழங்குவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்ற ஆளொருவருக்கு ஏற்புடையனவாதலாகாது.

(5) அடையாளங்காண் தகவல்களைச் சேகரிக்கக்கூடிய ஆட்கள் அமைச்சரினால் விதித்துரைக்கப்படலாம்.

(6) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆளொருவரின் அடையாளங் காண் தகவல்களைப் பகுப்பாய்வுசெய்தபின்னர், அவ்வடை யாளங்காண் தகவல்கள் வேறெவரேனுமாள் தொடர்பான தெனக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி 153 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் மேற்கொண்டு நடவடிக்கையெடுக்கலாம்.

*இலங்கைப் பயண ஆவணங்களைப் புறக்குறிப் பிடுதல்*

**112.** (1) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி எந்நேரத்திலும் ஏதேனும் இலங்கைப் பயண ஆவணத்தைப் புறக்குறிப்பிடலாம்.

(2) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி எந்நேரத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் புறக்குறிப்பை இல்லாதாக்கலாம்.

*இலங்கைப் பயண ஆவணங்களின் நிபந்தனைகள்*

**113.** கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி –

(அ) பயண ஆவணத்தை இல்லாதாக்கலாம் அல்லது இடைநிறுத்தலாம்; அல்லது

(ஆ) அதன் செல்லுபடிக்காலப்பகுதியை மட்டுப்படுத்தலாம்,

என்பது ஒவ்வோர் இலங்கைப் பயண ஆவணத்தினதும் நிபந்தனையொன்றாதல் வேண்டும்.

கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் பயண ஆவணங்கள் இல்லாதாக்கப்படுதல் அல்லது இடைநிறுத்தப்படுதல்

**114.** (1) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி பின்வரும் சந்தர்ப்பங்களில் எவரேனுமாளுக்கு வழங்கப்பட்ட இலங்கைப் பயண ஆவணமொன்றை இல்லாதாக்குதல் வேண்டும்:-

(அ) இராஜதந்திர அல்லது அலுவலகமுறையான கடவுச்சீட்டுக்கள் தவிர்ந்த வேறொரு செல்லுபடியான இலங்கைப் பயண ஆவணத்துக்காக அவ்வாள் விண்ணப்பிக்கும் நேரத்தில், அல்லது அவ்வாவணம் அவருக்கு வழங்கப்படும் நேரத்தில் இலங்கைப் பயண ஆவணம் இன்னமும் செல்லுபடியானதாகவிருப்பின்;

(ஆ) இலங்கைப் பயண ஆவணம் தொலைந்துபோயுள்ளது அல்லது களவாடப்பட்டுள்ளது என அறிக்கையிடப்பட்டிருப்பின், அல்லது கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில், அதனைப் பாவனைக்குப் பொருத்தமற்றதாக்கும்வகையில் அது அவ்வாறு சேதமடைந்திருப்பின் அல்லது உருக்குலைந்திருப்பின்;

(இ) இலங்கைப் பயண ஆவணத்தை வைத்திருப்பவர் இறந்ததாக அறிக்கையிடப்பட்டிருப்பின்;

(ஈ) இலங்கைப் பயண ஆவணத்தை வைத்திருப்பவர் ஓர் இலங்கைப் பிரசையாக இல்லாதொழியின்;

(உ) இலங்கைப் பயண ஆவணத்தை இல்லாதாக்குவதற்கு நீதிமன்றம் கட்டளையிட்டிருப்பின்; அல்லது

(ஊ) இலங்கைப் பயண ஆவணத்தில் பதியப்பட்ட விவரங்கள் பிழையானவையென நம்புவதற்கு நியாயமான காரணமிருப்பின்.

(2) அரசாங்கத்துடன் ஒரு முறியை அல்லது உடன்படிக்கையைக் கையொப்பமிட்டுள்ள ஆளொருவர், முறையான முறியின் அல்லது உடன்படிக்கையின் ஏற்பாடுகளின்கீழான கடப்பாடுகளை நிறைவேற்றாமல் நாட்டை விட்டுநீங்குவதற்குத் தயாராகின்றாரெனக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்குத்

தகவல்கள் சமர்ப்பிக்கப்படுமிடத்து, கட்டுப்பாட்டாளர் தலைமை யதிபதி வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்படும்வரையும் இயைபான பயண ஆவணத்தை இடைநிறுத்துவதற்குக் கட்டளையாக்குவதாவென இயைபான நீதிமன்றம் முடிபுசெய்யும் வரையும் அவ்வாளின் பயண ஆவணத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தலாம்.

தொலைந்து போன, களவாடப்பட்ட அல்லது சந்தேகத்துக் கிடமான பயண ஆவணங்கள் பற்றிய தகவலைக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி பகிரலாம்.

**115.** (1) ஆளொருவர் -

(அ) அவரது இலங்கைப் பயண ஆவணத்தை இலங்கை யினுள் தொலைத்திருக்குமிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய தொலைந்துபோனமையை மிகக்கிட்டிய பொலிசு நிலையத்துக்கு உடனடியாக அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன் அதன்பின்னர் உடனடியாக அப்பொருள்பட்ட வெளிப்படுத்துகையொன்றைக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித் தலும் வேண்டும்; அல்லது

(ஆ) அவரது இலங்கைப் பயண ஆவணத்தை இலங்கைக்கு வெளியே தொலைத்திருக்குமிடத்து, அந்நாட்டின் இயைபான அதிகாரிகளுக்கு அத்தகைய தொலைந்து போனமைபற்றி அத்தகைய ஆள் உடனடியாக அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் உடனடியாக இலங்கைக் பயண ஆவணம் தொலைந்து போனமைபற்றி அந்நாட்டுக்குத் தராதர அங்கீகாரமளிக்கப்பட்ட இலங்கைத் காவற்தூதர கத்துக்கு அல்லது இராஜதந்திரப் பணிக்குழுவுக்கு அறிவித்தலும் தற்காலிக இலங்கைப் பயண ஆவணத்துக்காக விண்ணப்பித்தலும் வேண்டும்.

(2) ஓர் இலங்கைப் பயண ஆவணம் தொலைந்துபோனமை தொடர்பான ஏதேனும் தகவலை இலங்கைக் காவற்றூதரக மொன்று அல்லது இராஜதந்திரப் பணிக்குழுவொன்று பெறு மிடத்து, அத்தகைய காவற்றூதரகம் அல்லது இராஜதந்திரப் பணிக்குழு அதன்பின்னர் உடனடியாக அது பற்றிக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) ஓர் இலங்கைப் பயண ஆவணம் தொலைந்துபோனமை தொடர்பான ஏதேனும் தகவலைக் கட்டுப்பாட்டாளர் தலைமை யதிபதி பெறுமிடத்து, கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அத்தகைய பயண ஆவணத்தை உடனடியாகச் செயலிழக்கச் செய்தல் வேண்டும்.

(4) அவ்வாளுக்கு வழங்கப்பட்டிராத ஓர் இலங்கைப் பயண ஆவணத்தைக் கண்டெடுக்கும் எவரேனுமாள் அத்தகைய பயண ஆவணத்தை உடனடியாகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதி பதிக்கு அல்லது மிகக்கிட்டிய பொலிசு நிலையத்துக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(5) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, தொலைந்துபோன, களவாடப்பட்ட அல்லது சந்தேகத்துக்கிடமான இலங்கைப் பயண ஆவணங்கள் பற்றிய தகவலை, வேறு உள்நாட்டுச் சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைகளுடன் அல்லது தரவுப் பாதுகாப்புத் தொடர்பான எழுத்திலான சட்டங்களுக்கிணங்க அத்தகைய தகவலின் பாவனை மற்றும் பாதுகாப்புத் தொடர்பாகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ள ஏதேனும் சர்வதேசச் சட்ட வலுவுறுத்தல் முகவராண்மையுடன் பகிரலாம்.

(6) ஓராம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

(7) இப்பிரிவின் நோக்கங்களுக்காகத் "தொலைந்துபோன இலங்கைப் பயண ஆவணம்" என்பது, களவாடப்பட்ட இலங்கைப் பயண ஆவணங்களை உள்ளடக்குதல் வேண்டும்.

இலங்கைப் பயண ஆவணமொன்றை வழங்க மறுப்பதற்கான காரணங்கள்

**116.** (1) கட்டுபாட்டாளர் தலைமையதிபதி, ஆளொருவருக்கு ஏலவே இலங்கைப் பயண ஆவணமொன்று வழங்கப்பட்டு அவ்வாவணம் இன்னமும் செல்லுபடியுடையதாகவிருப்பின் மற்றும் அந்த இலங்கைப் பயண ஆவணம், 109 ஆம் பிரிவின்கீழ் இராஜதந்திர மற்றும் அலுவலகமுறையான கடவுச்சீட்டுகளை வழங்குவதிற்றவிர இல்லாதாக்குகைக்காக முன்வைக்கப்பட்டிராதிருப்பின், அவ்வாளுக்கு இலங்கைப் பயண ஆவணமொன்றை வழங்க மறுக்கலாம்.

(2) ஆளொருவர் தேவைப்பட்ட தகவல்களையும் இயைபான ஆவணங்களையும் வழங்காவிடின் கட்டுப்பாட்டாளர் தலைமை யதிபதி அத்தகைய ஆளுக்கு ஓர் இலங்கைப் பயண ஆவணத்தை வழங்க மறுக்கலாம்.

(3) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி இப்பிரிவின்கீழ் பயண ஆவணமொன்றை வழங்க மறுத்தால், அத்தகைய மறுப்புக்கான காரணங்கள் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி யினால் விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

ஒரு பயண ஆவணம் இல்லாதாக்கப் படுமிடத்து அல்லது இடை நிறுத்தப்படு மிடத்து பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை

**117.** ஒரு பயண ஆவணம் இல்லாதாக்கப்படுமிடத்து அல்லது இடைநிறுத்தப்படுமிடத்து பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை அமைச்சரினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

சந்தேகத்துக் கிடமான இலங்கைப் பயண ஆவணத்தை ஒப்படைப்ப தற்கான அல்லது சந்தேகத்துக் கிடமான பயண ஆவணத்தைக் கைப்பற்றுவ தற்கான கோரிக்கை

**118.** சந்தேகத்துக்கிடமானவோர் இலங்கை பயண ஆவணத்தை ஒப்படைப்பதற்கான அல்லது சந்தேகத்துக்கிட மான பயண ஆவணத்தைக் கைப்பற்றுவதற்கான கோரிக்கை யொன்று செய்யப்படுமிடத்து, பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை அமைச்சரினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

இலங்கைப் பயண ஆவணமொன்று எப்போது செல்லுபடியில்லா தொழியுமென்பது

**119.** இலங்கைப் பயண ஆவணமொன்று –

(அ) அப்பயண ஆவணத்தில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று; அல்லது

(ஆ) இப்பாகத்தின்கீழ் இல்லாதாக்கப்படும்போது,

இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அப்போது, செல்லுபடி யில்லாதொழியும்.

இலங்கைப் பிரசையொரு வராக இல்லாதொழியும் ஆளொரு வரினால் இலங்கைப் பயண ஆவணத்தின் இல்லதாக்கு கைக்காக அது ஒப்படைக்கப் படுதல்

**120.** (1) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழியும் எவரேனுமாள் செல்லுபடியான இலங்கைப் பயண ஆவணத்தை வைத்திருப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழியும் எவரேனுமாள் அத்தகைய நிகழ்வு பற்றி உடனடியாகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டு மென்பதுடன் இலங்கை பிரசையொருவராக இல்லாதொழிவதி லிருந்து ஆறுமாதங்களினுள் மேற்கொண்ட பாவனையெதுவு மின்றி அவருக்கு வழங்கப்பட்ட செல்லுபடியான இலங்கைப் பயண ஆவணத்தைக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு அல்லது கடல்கடந்த ஏதேனும் இலங்கை இராஜதந்திரப் பணிக்குழுவுக்கு, அந்த இலங்கைப் பயண ஆவணத்தை இல்லாதாக்குவதற்காக ஒப்படைத்தலும் அதனைத் திருப்பிக்கொடுத்தலும் வேண்டும். செல்லுபடியான இலங்கைப் பயண ஆவணத்தை இல்லாதாக்குகைக்காக ஒப்படைக்கத் தவறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

(3) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழிந்தபின்னர் செல்லுபடியான இலங்கைப் பயண ஆவணத்தைப் பயன்படுத்துகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழிகின்றவரும் அவரது இலங்கைப் பயண ஆவணத்தைத் தொலைத்துள்ள வருமான எவரேனுமாள் அதன்பின்னர் உடனடியாக அத்தகைய தொலைந்துபோனமையை மிகக்கிட்டிய பொலிசு நிலையத்துக்கும் அதன்பின்னர் கட்டுப்பாட்டாளர் தலைமையதி பதிக்கும் அத்தகைய ஆள் இலங்கைக்கு வெளியே அவரது இலங்கைப் பயண ஆவணத்தைத் தொலைத்துள்ளவிடத்து கடல்கடந்த இலங்கை இராஜதந்திரப் பணிக்குழுவுக்கும் அறிவித்தல் வேண்டும்.

இலங்கைப் பயண ஆவண மொன்றை நேர்மையீன மாகப் பெற்றுக் கொள்ளுதல்

**121.** (1) ஆளொருவர், அறிந்துகொண்டும் வேண்டு மென்றும் நேர்மையற்ற மற்றும் ஏமாற்றும் முறையில் இலங்கைப் பயண ஆவணமொன்றைப் பெற்றுக்கொண்டால், அத்தகைய ஆள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண் டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காகப் "பெற்றுக்கொள்ளுதல்" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) வேறோராளுக்காகப் பெற்றுக்கொள்ளுதல்; அத்துடன்

(ஆ) வேறோராள் பெற்றுக்கொள்ளுதலை விளைவிக்கின்ற எதனையும் செய்வதற்கு மூன்றாந் திறத்தவரொருவரைத் தூண்டுதல்.

(3) ஓராளின் நடத்தை தொடர்பாக "நேர்மையீனமாக" என்பது, (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையின் 22 ஆம் பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வெளிநாட்டுப் பயண ஆவணங்கள் தொடர்பான தவறுகள்

**122.**(1) (அ) ஆளொருவர் இலங்கையில் பொய்யான வெளிநாட்டுப் பயண ஆவணத்தைத் தயாரித்தால், அல்லது இலங்கையிலுள்ள வேறோராளுக்குப் பொய்யான வெளிநாட்டுப் பயண ஆவணத்தைக் கொடுத்துதவினால்; அத்துடன்

(ஆ) மற்றைய ஆள் பொய்யான வெளிநாட்டுப் பயண ஆவணத்தை மெய்யானதாக

அவ்வாறு பயன்படுத்துவதன் அல்லது ஏற்றுக்கொள்வதன் காரணமாக அவ்வாள் நேர்மையீனமாக —

(i) தனக்காகவாயினுஞ்சரி அல்லது வேறெவரேனுமொருவருக்காகவாயினுஞ் சரி, ஈட்டுகையொன்றைப் பெற்றுக் கொண்டால்;

(ii) மற்றைய ஆளுக்கு அல்லது வேறெவரேனுமொருவருக்கு நட்டமொன்றை விளைவித்தால்; அல்லது

(iii) ஒரு பொதுக் கடமையின் பிரயோகத்தின்மீது செல்வாக்குச் செலுத்தினால்,

அத்தகைய ஆள் தவறொன்றைப் புரிகின்றார்.

(2) (அ) ஒரு வெளிநாட்டுப் பயண ஆவணம் இல்லாதாக்கப்பட்டுள்ளதென அறிந்துகொண்டு அத்துடன் அந்த வெளிநாட்டுப் பயண ஆவணம் இல்லாதாக்கப்பட்டுள்ளதென அத்தகைய நியாயமான முறையில் அறிந்திருக்கவேண்டியவராகவிருந்த அத்தகைய வெளிநாட்டுப் பயண ஆவணத்தை ஆளெருவர் பயணம் அல்லது அடையாளங் காணல் சம்பந்தமாக இலங்கையில் பயன்படுத்தினால்; அல்லது

(ஆ) ஒரு வெளிநாட்டுப் பயண ஆவணம் அவ்வாளுக்கு வழங்கப்படவில்லையென அறிந்து கொண்டு அத்துடன் அந்த வெளிநாட்டு பயண ஆவணம் அவருக்கு வழங்கப்படவில்லையென அத்தகைய ஆள் நியாயமானமுறையில் அறிந்திருக்க வேண்டியவராகவிருந்த பயணம் அல்லது அடையாளங்காணல் சம்பந்தமாக அவ்வெளிநாட்டுப் பயண ஆவணத்தை அத்தகைய ஆள் இலங்கையில் பயன்படுத்தினால்,

அத்தகைய ஆள் தவறொன்றைப் புரிகின்றார்.

(3) ஆளொருவர், இலங்கையிலுள்ள வேறோராளுக்கு, முதற்குறிப்பிடப்பிடப்பட்ட ஆளுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயண ஆவணமொன்றைச் சட்டமுறையான சாக்கின்றிக் கொடுத்துதவினால் மற்றும் அந்த ஆவணமானது பயணம் அல்லது அடையாளங்காணல் சம்பந்தமாக மற்றைய ஆளினால் பயன்படுத்தப்படுகின்றதா அல்லது பயன்படுத்தப்படுமா என்பது பற்றி முதற்குறிப்பிடப்பட்ட ஆள் அசட்டையாக விருத்தால், முதற்குறிப்பிடப்பட்ட ஆள் தவறொன்றைப் புரிகின்றார்.

(4) சட்டமுறையான அதிகாரமின்றியும் நியாயமான சாக்கின்றியும் ஆளொருவர் ஒரு வெளிநாட்டுப் பயண ஆவணத்தை இலங்கையில் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் கொண்டிருந்தால் அல்லது வைத்திருந்தால், மற்றும் அவ்வெளிநாட்டுப் பயண ஆவணம் தனக்கு வழங்கப்படவில்லையென அவ்வாள் அறிந்திருப்பின், அவ்வாள் தவறொன்றைப் புரிகின்றார்.

(5) ஆளொருவர் ஆவணமொன்றை உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் கொண்டிருந்தால் மற்றும் அவ்வாவணம் ஒரு பொய்யான வெளிநாட்டுப் பயண ஆவணம் என அறிந்திருப்பின் அல்லது நியாயமானமுறையில் அறிந்திருக்க வேண்டியவராக இருந்திருப்பின் அவ்வாள் தவறொன்றைப் புரிகின்றார்.

(6) ஆளொருவர் -

(அ) (i) இலங்கையில் வழங்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது வேறெங்கேனும் வழங்கப்பட்டதாயினுஞ்சரி, ஏதேனும் வெளிநாட்டுப் பயண ஆவணத்தை அல்லது அதன்மீதான ஏதேனும் விசாவை அல்லது புறக்குறிப்பைப் பொய்யாகப் புனைந்தால், மாற்றினால் அல்லது அதனுடன் கையிட்டால்;

(ii) உட்பந்தி (i) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் வெளிநாட்டுப் பயண ஆவணத்தில் புறக்குறிப் பிடப்பட்ட ஏதேனும் சான்றிதழைப் பொய்யாகப் புனைந்தால், மாற்றினால் அல்லது அதனுடன் கையிட்டால்; அல்லது

(iii) சட்டமுறையற்ற அதிகாரமின்றி, பொய்யாகப் புனையப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது கையிடப் பட்ட ஒரு வெளிநாட்டுப் பயண ஆவணத்தை அல்லது பொய்யாகப் புனையப்பட்ட, மாற்றப் பட்ட அல்லது கையிடப்பட்டவொரு விசாவை, புறக்குறிப்பை அல்லது சான்றிதழைக் கொண்ட வெளிநாட்டுப் பயண ஆவணமொன்றைப் பயன்படுத்தினால் அல்லது தனதுடைமையில் வைத்திருந்தால்; அல்லது

(ஆ) (i) அவ்வெளிநாட்டுப் பயண ஆவணம் பொய் யாகப்புனையப்பட்டுள்ளதென, மாற்றப்பட் டுள்ளதென அல்லது கையிடப்பட்டுள்ளதென; அல்லது

(ii) அவ்வெளிநாட்டுப் பயண ஆவணம் பொய் யாகப்புனையப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது கையிடப்பட்ட விசா, புறக்குறிப்பு அல்லது ஒன்றைக் கொண்டுள்ளதென; அல்லது

அறிந்திருந்தால் அல்லது நியாயமானமுறையில், அறிந்திருக்கவேண்டியவராக இருந்திருந்தால்,

அத்தகைய ஆள் தவறொன்றைப் புரிகின்றார்.

(7) இப்பிரிவின்கீழான ஏதேனும் தவறைப் புரிவதில் எவரேனுமாள் உதவினால் அல்லது உடந்தையளித்தால், அத்தகைய ஆள் தவறொன்றைப் புரிகின்றார்.

(8) இப்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது

இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(9) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "வெளிநாட்டுப் பயண ஆவணம்" என்பது, இலங்கையில் அல்லது வேறெங்கேனும் ஒரு வெளிநாட்டு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் கடவுச்சீட்டு அல்லது வேறேதேனும் பயண ஆவணம் என்று பொருளாகும்.

**123.** பின்வரும் எல்லா அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்:- ஒழுங்குவிதிகள்

(அ) விதித்துரைக்கப்படவேண்டுமென இப்பாகத்தில் குறிப்பிடப்பட்ட எல்லாக் கருமங்களும்;

(ஆ) இலங்கைப் பயண ஆவணங்களை வழங்குவதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தைச் செய்தல், அத்தகைய விண்ணப்பங்களின் படிவம், மற்றும் அவற்றின்கண் பதியப்படவேண்டிய விபரங்கள்;

(இ) பொதுமக்கள் நலன்கருதி அமைச்சர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுட்பட, அத்தகைய இலங்கைப் பயண ஆவணங்களுக்கு இணைக்கப்படவேண்டிய நியதிநிபந்தனைகள்;

(ஈ) அத்தகைய இலங்கைப் பயண ஆவணங்களின் படிவமும் அவற்றின்கண் பதியப்படவேண்டிய விபரங்களும்;

(உ) அத்தகைய இலங்கைப் பயண ஆவணங்களின் வழங்குகை அல்லது புதுப்பித்தல் தொடர்பிலான கட்டணங்கள்;

(ஊ) இச்சட்டத்தின்கீழான நோக்கங்களுக்காக அடையாளங் காண் தகவல்களின் பாவனையினது செயல்முறை; அத்துடன்

(ஏ) இப்பாகத்திற் குறிப்பீடுசெய்யப்பட்ட கருமங்களினதும் விடயங்களினதும் இடைநேர்விளைவானவையும் அல்லது அவற்றுடன் சம்பந்தப்பட்டவையுமான எல்லாக் கருமங்களும்.

## பாகம் VIII

## தவறுகள்

### அத்தியாயம் I

### பொதுவான தவறுகள்

*சட்டமுறையற்ற உட்பிரவேசம் அல்லது இலங்கையில் தரித்திருத்தல்.*

**124.** (1) (அ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டை மீறி இலங்கையினுட் பிரவேசித்து இலங்கையில் தரித்திருக்கும் இலங்கைப் பிரசையொருவரல்லாத எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினாலான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு இணங்க இலங்கையினுட் பிரவேசிக்கின்றவரும், ஆனால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அவர் எக்காலப்பகுதிக்காக இலங்கையில் தரித்திருப்பதற்கு அதிகாரமளிக்கப்படு

கின்றாரோ அக்காலப்பகுதி முடிவுற்ற பின்னர் இலங்கையில் தரித்திருக்கின்ற வரும், இலங்கைப் பிரசையொருவரல் லாதவருமான எவரேனுமாள் தவறொன் றைப் புரிகின்றாரென்பதுடன் ஐம்ப தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது மூன்று மாதங் களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) (அ) (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன் றைப் புரிய எத்தனிக்கின்ற, அல்லது அதனைப் புரிவதற்கு உதவுகின்ற அல்லது உடந்தையளிக்கின்ற; அல்லது

(ஆ) (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன் றைப் புரிவதற்கு ஆயத்தநிலையிலுள்ள ஏதேனும் செயலைச் செய்கின்ற,

எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினாலான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன் றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத வொரு காலத்துக்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*குடிவரவு நடைமுறையின்றி உட்பிரவேசம் அல்லது புறப்பாடு*

**125.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி இலங்கையினுட் பிரவேசிக்கின்ற அல்லது இலங்கையிலிருந்து புறப்படுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினாலான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை

விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற அல்லது அதனைப் புரிவதற்கு உதவுகின்ற அல்லது உடந்தையளிக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினாலான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆட்களைக் கொண்டு வருதல், கொண்டு வருவதனைப் பெற்றுக் கொடுத்தல், மறைத்து வைத்தல், அவர்களுக்குப் புகலிடமளித்தல் அல்லது அவர்களைத் தொழிலுக் கமர்த்துதல் என்ற தவறுகள்

**126.** (1) (அ) வேறு எவரேனுமாள் இலங்கையினுட் பிரவேசித்தல் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின் அல்லது ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுவதாகவுள்ளது அல்லது மீறுவதாகவிருக்கும் என அறிந்துகொண்டு அந்த வேறு ஆளை எத்தகையனவுமான எந்த வழிவகைகள் மூலமும் இலங்கையினுட் கொண்டுவருகின்ற அல்லது கொண்டுவருவதனைப் பெற்றுக்கொடுக்கின்ற;

(ஆ) வேறு எவரேனுமாள் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின் அல்லது ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டை மீறி இலங்கையினுட் பிரவேசித்துள்ளார் அல்லது இலங்கையில் தரித்துள்ளார் என அறிந்துகொண்டு, அத்தகைய வேறு ஆளை எத்தகையனவுமான ஏதேனுமிடத்தில் மறைத்துவைக்கின்ற அல்லது

அவருக்குப் புகலிடமளிக்கின்ற, அல்லது எத்தகையனவுமான வழிவகைகள் மூலமும் அத்தகைய வேறு ஆளை இடம்பெயர்க்கின்ற அல்லது இடம் பெயர்க்கச் செய்கின்ற; அல்லது

(இ) வேறு எவரேனுமாள் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின் அல்லது ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டை மீறி இலங்கையினுட் பிரவேசித்துள்ளார் அல்லது இலங்கையில் தரித்துள்ளார் என அறிந்துகொண்டு, அத்தகைய வேறு ஆளைத் தொழிலுக்கமர்த்துகின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) (அ) (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிய எத்தனிக்கின்ற அல்லது அதனைப் புரிவதற்கு உதவுகின்ற அல்லது உடந்தையளிக்கின்ற; அல்லது

(ஆ) (1) ஆம் உட்பிரிவின் பந்தி (அ) அல்லது பந்தி (ஆ) வின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு ஆயத்தநிலையிலுள்ள ஏதேனும் செயலைச் செய்கின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளை விஞ்சாதது

மானவொரு காலத்துக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பொதுவான தவறுகள் தொடர்பான ஆவண முறையான தவறுகள்

**127.** (1) (அ) சட்டமுறையான அதிகாரமின்றி விசா வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஏதேனும் பயண ஆவணத்தை அல்லது அதன் ஒரு பாகத்தை, அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது அதன் ஒரு பாகத்தை அச்சிடுகின்ற, பிரதியெடுக்கின்ற, புனைகின்ற அல்லது தயாரிக்கின்ற;

(ஆ) இலங்கை அரசாங்கத்துடன் அல்லது வேறேதேனும் அரசாங்கத்துடன் தொடர்புபட்டவாறான ஏதேனும் விசாவை அல்லது அதன் பாகத்தைச் சட்டமுறையான அதிகாரமின்றி அச்சிடுகின்ற, பிரதியெடுக்கின்ற, புனைகின்ற அல்லது தயாரிக்கின்ற;

(இ) இலங்கையில் வழங்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது வேறெங்கேனும் வழங்கப்பட்டதாயினுஞ்சரி, ஏதேனும் பயண ஆவணத்தை அல்லது அதன் பாகத்தை, அல்லது அதன்மீதான ஏதேனும் விசாவை அல்லது புறக்குறிப்பைப் பொய்யாகப் புனைகின்ற, மாற்றுகின்ற அல்லது அதனுடன் கையிடுகின்ற;

(ஈ) பந்திகள் (அ), (ஆ) அல்லது (இ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் ஆவணத்தில் புறக்குறிப்பிடப்பட்ட ஏதேனும் சான்றிதழைப் பொய்யாகப் புனைகின்ற, மாற்றுகின்ற அல்லது அதனுடன் கையிடுகின்ற;

(உ) சட்டமுறையான அதிகாரமின்றி, பொய்யாகப் புனையப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது கையிடப்பட்ட பயண ஆவண மொன்றை அல்லது அதன் பாகத்தை அல்லது பொய்யாகப் புனையப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது கையிடப்பட்ட ஒரு விசாவை அல்லது புறக்குறிப்பைக் கொண்டுள்ள பயண ஆவணமொன்றைப் பயன்படுத்துகின்ற அல்லது அவரது உடைமையில் வைத்திருக்கின்ற;

(ஊ) சட்டமுறையான அதிகாரமின்றி, பொய் யாகப் புனையப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது கையிடப்பட்ட சான்றிதழைக் கொண்டுள்ள, பொய்யாகப் புனையப் பட்ட, மாற்றப்பட்ட அல்லது கையிடப் பட்ட பயண ஆவணத்தை அல்லது அதன் பாகத்தைப் பயன்படுத்துகின்ற அல்லது அவரது உடைமையில் வைத்தி ருக்கின்ற;

(எ) சட்டமுறையான அதிகாரமின்றி, அல்லது சட்டமுறையான சாக்கின்றி, வேறாட் களின் பயண ஆவணங்களை அவரது உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது எம்முறையிலும் அவற்கைக் கையாளு கின்ற;

(ஏ) அமைச்சர் அல்லது கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின் அல்லது ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் சட்டமுறையாகச் செயலாற்றுகின்ற எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது வேறாள், அல்லது

ஏதேனும் வானூர்திக் கம்பெனியின் அலுவலர் அல்லது எவரேனும் அதிகார மளிக்கப்பட்ட முகவர் என்போருக்குப் பதிலிறுக்கையில் அல்லது அவர்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் கருமத்தில், ஏதேனும் பொய்யான விபரத்திரட்டை, பொய்யான கூற்றை அல்லது பொய்யான பிரதிநிதித்துவத்தைச் செய்கின்ற அல்லது செய்விக்கின்ற;

(ஐ) சட்டமுறையான அதிகாரமின்றி, ஏதேனும் வானூர்திப் பயணச்சீட்டை, சிப்பந்திகள் பொறுப்புவிடுவிப்புச் சான்றிதழை, கப்பலேறல் அனுமதிப்பத்தி ரத்தை அல்லது இதையொத்த தன்மை யினதான ஏதேனும் ஆவணத்தை அச்சிடு கின்ற, பிரதியெடுக்கின்ற, தயாரிக்கின்ற, அல்லது அவரது உடைமையில் வைத்தி ருக்கின்ற, அளிக்கின்ற அல்லது எம்முறையிலும் பயன்படுத்துகின்ற;

(ஒ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அல்லது கட்டளையின்கீழ் எவரேனுமாள் தனது தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதில் அல்லது புரிவதில் அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது அவரைத் தடைசெய்கின்ற;

(ஓ) சட்டமுறையான அதிகாரமின்றி, அவருக்கு வழங்கப்பட்டதும் அப்போதைக்கு வலு விலுள்ளதுமான ஒன்றுக்கு மேற்பட்ட பயண ஆவணங்களை அவரது உடைமை யில் வைத்திருக்கின்ற;

(ஔ) அவருக்கு வழங்கப்பட்டதும், அப்போ தைக்கு வலுவிலுள்ளதுமான ஒரு செல்லு படியான பயண ஆவணத்தை உடைமை

யில் வைத்திருக்கையில், இச்சட்டத்தின் 109 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அலுவலக முறையான அல்லது இராஜதந்திர கடவுச்சீட்டு அல்லாத வேறொரு பயண ஆவணத்தின் வழங்குகைக்காக விண்ணப்பிக்கின்ற;

(க) இலங்கைப் பிரசையொருவராகவிராமல், சட்டமுறையான அதிகாரமின்றி அல்லது சட்டமுறையான சாக்கின்றி செல்லுபடியான இலங்கைப் பயண ஆவணமொன்றை அவரது உடைமையில் வைத்திருக்கின்ற;

(ங) 118 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட இலங்கைப் பயண ஆவணம் ஒப்படைக்கப்படும்போது வேறொரு பயண ஆவணத்தின் வழங்குகைக்காக விண்ணப்பிக்கின்ற;

(ச) தனக்காக அல்லது வேறெவரேனுமாளுக்காக ஒரு விசாவை அல்லது வேறேதேனும் பயண ஆவணத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துக்காக, பொய்யாகப் புனையப்பட்ட அல்லது பொய்யான எவையேனும் ஆவணங்களை அல்லது பொய்யான தகவல்களைச் சமர்ப்பிக்கின்ற;

(ஞ) இலங்கைப் பயண ஆவணமொன்றை விற்பனைசெய்கின்ற;

(ட) ஓர் இலங்கைப் பயண ஆவணத்தை வேண்டுமென்று சேதப்படுத்துகின்ற அல்லது அழிக்கின்ற;

(ண) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு வேறோராளைத் தூண்டுகின்ற; அல்லது

(து) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை வேறுவகையாக மீறுகின்ற அல்லது அதற்கிணங்கியொழுகத் தவறுகின்ற,

எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினாலான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற, அல்லது அதனைப் புரிவதற்கு ஆயத்த நிலையான ஏதேனும் செயலைச் செய்கின்ற, அல்லது அதனைப் புரிவதற்கு உதவுகின்ற அல்லது உடந்தையளிக்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாகவிருந்து (1) ஆம் உட்பிரிவின் கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார் என்றாற்போன்று அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே பயண ஆவணத்தை வைத்திருப்பதற்கான, கொண்டு செல்வதற்கான, அனுப்பிவைப்பதற்கான அல்லது அனுப்புவதற்கான அதிகாரவளிப்பு

**128.** (1) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி-

(அ) வெளிநாட்டு ஊழியம், வெளிநாட்டுப் பயணங்கள் அல்லது வெளிநாட்டுச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான சட்டமுறையான செயற்பாடொன்றில் ஈடுபடுகின்ற ஆளொருவருக்கு அல்லது ஆட்கள் குழுவொன்றுக்கு இலங்கையினுள் ஏதேனும் இலங்கைப் பயண ஆவணத்தை வைத்திருப்பதற்கு அல்லது கொண்டுசெல்வதற்கு அதிகாரமளிக்கலாம்;

(ஆ) செல்லுபடியான இலங்கைப் பயண ஆவணமொன்றை வைத்திருப்பவராகவிருக்கின்றவரும் இலங்கைக்கு வெளியே வதிகின்றவருமான ஆளொருவருக்கு அஞ்சலினூடாக அல்லது வேறோராளினூடாக இலங்கையில் வதிகின்ற ஆளொருவருக்கு அத்தகைய பயண ஆவணத்தை அனுப்பிவைப்பதற்கு அல்லது அனுப்புவதற்கு அதிகாரமளிக்கலாம்;

(இ) செல்லுபடியான இலங்கைப் பயண ஆவணமொன்றை வைத்திருப்பவராகவிருக்கின்றவரும் இலங்கையில் வதிகின்றவருமான ஆளொருவருக்கு அஞ்சலினூடாக அல்லது வேறோராளினூடாக இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்கு அத்தகைய பயண ஆவணத்தை அனுப்பிவைப்பதற்கு அல்லது அனுப்புவதற்கு அதிகாரமளிக்கலாம்; அல்லது

(ஈ) வெளிநாட்டினத்தவர்களுக்காக இலங்கையில் பயணங்களை அல்லது சுற்றுலாக்களை ஒழுங்கு படுத்துதல் தொடர்பாகச் சட்டமுறையான செயற்பா டொன்றில் ஈடுபடுகின்ற ஆளொருவருக்கு அல்லது ஆட்கள் குழுவொன்றுக்கு இலங்கையினுள் ஏதேனும் வெளிநாட்டுப் பயண ஆவணத்தை வைத்திருப்பதற்கு அல்லது கொண்டுசெல்வதற்கு அதிகாரமளிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆள், கட்டுப் பாட்டாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகார மின்றி அத்தகைய இலங்கைப் பயண ஆவணத்தை வைத்திருத்தலோ அல்லது கொண்டுசெல்லுதலோ அல்லது அனுப்பிவைத்தலோ அல்லது அனுப்புதலோ ஆகாது.

(2) எவரேனுமாள், ஏதேனும் செல்லுபடியான கடவுச்சீட்டை அல்லது பயண ஆவணத்தை வழங்கியுள்ள வெளிநாட்டு அரசாங்கத்தின் சட்டமுறையான அதிகாரமின்றி–

(அ) ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டொன்றை அல்லது பயண ஆவணமொன்றை வைத்திருப்பவ ராகவிருந்து

இலங்கைக்கு வெளியே வதிகையில், அஞ்சலினூடாகவோ அல்லது வேறோர் ஆளினூடாகவோ அத்தகைய பயண ஆவணத்தை இலங்கையில் வதிகின்ற ஆளொருவருக்கு அனுப்பிவைத்தலோ அல்லது அனுப்புதலோ ஆகாது; அல்லது

(ஆ) ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டொன்றை அல்லது பயண ஆவணமொன்றை வைத்திருப்பவராகவிருந்து இலங்கையில் வதிகையில், அஞ்சலினூடாகவோ அல்லது வேறோர் ஆளினூடாகவோ அத்தகைய பயண ஆவணத்தை இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்கு அனுப்பிவைத்தலோ அல்லது அனுப்புதலோ ஆகாது.

(3) உட்பிரிவு (1) அல்லது (2) என்பவற்றின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றா ரென்பதுடன் நீதிவானொருவரினாலான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதன்மூலம் ஈட்டப்பட்ட ஆதனத்தின் உடைமை

**129.** (1) ஏதேனும் பணத்தின் அல்லது ஆதனத்தின் முழுமையும் அல்லது அதன் ஏதேனும் பாகம் இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிந்ததன்விளைவாக நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பெற்றுக்கொள்ளப்பட்டதென அல்லது பெறப்பட்டதென அறிந்துகொண்டு அத்தகைய பணத்தை அல்லது ஆதனத்தை உடைமையில் வைத்திருக்கும் எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிகின்ற ஆளொருவர் குற்றப்பகர்வின்மீது மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபதாண்டுகளை

விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(3) ஆளொருவருக்கு இப்பிரிவின்கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, நீதிமன்றம், அத்தவறுக்காக விதிக்கப்பட்ட தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, எந்த ஆதனம் தொடர்பில் தவறானது புரியப்பட்டதோ அந்த ஆதனம் அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(4) இப்பிரிவின் நோக்கத்துக்காக, தவறானது எவ்வாதனம் தொடர்பில் புரியப்படுகின்றதோ அவ்வாதனம், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பணத்தை அல்லது ஆதனத்தை, இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிதல் சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் வாகனத்தை, கலத்தை, நாணயத்தை அல்லது வேறேதேனும் பொருளை அல்லது வஸ்துவை உள்ளடக்கலாம்.

பகிரங்க அலுவலர்களினாலான அல்லது வேறெவரேனும் ஆளினாலான தவறுகள்

**130.** (1) (அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி ஏதேனும் பொய்யான ஆவணத்தை அறிந்துகொண்டு தயாரிக்கின்ற அல்லது வழங்குகின்ற;

(ஆ) ஓர் இலங்கைப் பயண ஆவணத்திலான புறக்குறிப்பு இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்றதென அறிந்துகொண்டு அப்புறக்குறிப்பைச் செய்கின்ற;

(இ) இச்சட்டத்தினால் ஒரு பகிரங்க அலுவலருட்பட்ட எவரேனுமாளுக்குப் பொறுப்பிக்கப்பட்ட ஏதேனும் கடமையை அல்லது பணியைப் புரிதல் அல்லது நிறைவேற்றுதல் சம்பந்தமாக அறிந்துகொண்டு ஒரு பொய்யான கூற்றை அளிக்கின்ற அல்லது வழங்குகின்ற;

(ஈ) இச்சட்டத்தினால் ஒரு பகிரங்க அலுவலருட்பட்ட எவரேனுமாளுக்குப் பொறுப்பிக்கப்பட்ட ஏதேனும் கடமையை அல்லது பணியை அறிந்துகொண்டு புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்குத் தவறுகின்ற;

(உ) இச்சட்டத்தின்கீழ் ஒரு பகிரங்க அலுவலரினால் தேவைப்படுத்தப்பட்ட ஒரு செயலை ஒன்றில் செய்வதற்கு அல்லது செய்யாதுவிடுவதற்கு ஓர் இலஞ்சத்தை ஏற்றுக்கொள்ள அல்லது ஏற்றுக்கொள்ள உடன்படுகின்ற அல்லது பரிந்துகேட்கின்ற;

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் வேறுவகையாக மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற;

(எ) பந்திகள் (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயலைப் புரிவதற்கு வேறெவரேனுமாளை உதவுகின்ற அல்லது அவருக்கு உடந்தையளிக்கின்ற; அல்லது

(ஏ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு அறிந்துகொண்டு வேறோராளைத் தூண்டுகின்ற,

ஒரு பகிரங்க அலுவலருட்பட்ட அவ்வாள் தவறொன்றைப் புரிகின்றார்:

ஆயின், அத்தகைய ஆளெவரும், அத்தகைய தவறு தான் அறியாமல் புரியப்பட்டதென்றும் அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்

கவனத்தையும் தான் பிரயோகித்தாரென்றும் அவர் எண்பித்தால் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுத லாகாது.

(2) மேல்நீதிமன்றத்தினாலான குற்றப்பகர்வின்மேல் (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவர் இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

பகிரங்க அலுவலர்களாக ஆள்மாறாட்டஞ் செய்தல்

**131.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு பகிரங்க அலுவலராக ஆள்மாறாட்டஞ்செய்கின்ற அல்லது ஒரு செயலினால் அல்லது செய்யாமையினால் அத்தகைய ஆள் ஒரு பகிரங்க அலுவலராகவுள்ளாரென வேறெவரேனும் ஆளை நம்பவைப்பதற்கு இட்டுச்செல்கின்ற எவரேனுமாள் தவறொன் றைப் புரிகின்றாரென்பதுடன் மேல்நீதிமன்றத்தினாலான குற்றப்பகர்வின்மேல் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையி லொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆட்கள் குழுவினாலான தவறுகள்.

**132.** இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஓர் ஆட்கள் குழுவினால் புரியப்படுமிடத்து, அப்போது, அவ்வாட்கள் குழு-

(அ) கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவாகவிருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அலுவலரும்;

(ஆ) ஒரு குழுமமாகவிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அல்லது

(இ) ஒரு குழுமம் தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், அதன் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாகவுள்ள அக்குழுவின் ஒவ்வோர் அலுவலரும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய ஆளெவரும், அத்தகைய தவறு தான் அறியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அவர் உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தாரென எண்பித்தால், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

*எந்த மீறுகைகளுக்காகக் குறிப்பிட்ட ஏற்பாடுகள் எவையும் செய்யப்படவில்லையோ அம்மீறுகைகளுக்கான தண்டங்கள்*

**133.** இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது கட்டளையின் ஏதேனும் ஏற்பாட்டை எவரேனுமாள் மீறுகின்றவிடத்தும் அத்தகைய மீறுகை தொடர்பில் சட்டத்தின்கீழ் தண்டமெதுவும் குறித்துரைக்கப்படாதவிடத்தும் அத்தகைய ஆள், நீதிவானொருவரினாலான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*தவறுகள் பிடியாணையின்றிக் கைதுசெய்யத்தக்கனவாக விருத்தலும், நியாயாதிக்கமும், குற்றவழக்கும்*

**134.** (1) இச்சட்டத்தின்கீழான எல்லாத் தவறுகளும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்கும் நோக்கத்துக்காக, அச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறுகளாகவிருத்தல் வேண்டும்.

(2) குற்றப்பகர்வின்மீது மேல்நீதிமன்றத்தினால் விளங்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுவதற்கு இச்சட்டத்தினால் வெளிப்படையாக உரித்தாக்கப்பட்ட தவறுகள் தவிர்ந்த எல்லாத் தவறுகளும்,

நீதிவானொருவரினால் சுருக்கமுறையில் விளங்கப்படற்பாலன வாதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தினால் விதித்துரைக் கப்பட்ட ஏதேனும் தண்டனையை அத்தகைய நீதிவான் விதிப்பது, அத்தகைய தண்டனை அவரது நியாயாதிக்கத்தின் சாதாரணத் தத்துவங்களின் எல்லையை விஞ்சுகின்றதென்பது எவ்வாறிருப்பினும், சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக் கெதுவும், விடயத்துக்கேற்ப, கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி யினால் அல்லது உதவி அத்தியட்சகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள ஒரு பொலிசு அலுவலரினால் அல்லது கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியின் அல்லது உதவிப் பொலிசு அத்தியட்சகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள ஒரு பொலிசு அலுவலரின் எழுத்திலான வலுவளிப்புடன் வேறெவரேனும் குடிவரவு அலுவலரினால் அல்லது பொலிசு அலுவலரினால் தவிர, தொடுக்கப்படுதலாகாது.

**135.** (1) வேறேதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், 136, 137, 138 அல்லது 139 ஆகிய பிரிவுகளின்கீழான ஒவ்வொரு தவறும் பிணையில் விடுபடற்பாலதல்லாத தாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகையவொரு தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர் பிணையில் விடுபடுதலுமாகாது. பிணையளித்தல்

(2) பிரிவுகள் 136, 137, 138 அல்லது 139 என்பவற்றின் கீழான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர் விதிவிலக்கான சூழ்நிலைகள்பற்றிய எண்பிப்பின்மீது மேல் நீதிமன்றத்தினால் பிணையில் விடப்படலாம்.

(3) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காகப் பிணை யளித்தல் தொடர்பில் வெளிப்படையான ஏற்பாடெதுவும் செய்யப்படாதவிடத்து, நீதிவான் நீதிமன்றத்தினால் பிணையளிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் II

### மனிதரைக் கள்ளமாகக் கடத்தல்

மனிதரைக் கள்ளமாக இலங்கையினுட் கடத்தல்

**136.** (1) நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் நிதிசார் அல்லது பொருள்வகையான நன்மையை, அல்லது வேறேதேனும் பிரதிபயனைப் பெற்றுக்கொள்வதற்கென-

(அ) இலங்கைப் பிரசையல்லாத ஆளொருவர் சட்ட விரோதமாக இலங்கையினுட் பிரவேசிப்பதனைப் பெற்றுக்கொடுக்கின்ற;

(ஆ) வேறெவரேனுமாள் இலங்கையினுட் பிரவேசிப்பது இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது மீறுகையாகவுள்ளதென அறிந்துகொண்டு எவையேனும் வழிவகைகளின் மூலம் அந்த வேறாளை இலங்கையினுட் கொண்டு வருகின்ற அல்லது இலங்கையினுள் அவர் வருவதனைப் பெற்றுக்கொடுக்கின்ற;

(இ) வேறெவரேனுமாள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி இலங்கையினுட் பிரவேசித்துள்ளார் அல்லது இலங்கையில் தரித்துள்ளாரென அறிந்துகொண்டு அத்தகைய வேறாளை ஏதேனுமிடத்தில் மறைத்து வைக்கின்ற அல்லது அவருக்குப் புகலிடமளிக்கின்ற, அல்லது அந்த எவரேனும் ஆளை எவையேனும் வழிவகைகள்மூலம் இடம்பெயர்க்கின்ற அல்லது அந்த எவரேனும் ஆளை இடம்பெயர்க்கச் செய்கின்ற; அல்லது

(ஈ) வேறெவரேனுமாள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி இலங்கையினுட் பிரவேசித்துள்ளார் அல்லது இலங்கையில் தரித்துள்ளாரெனவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அத்தகைய மீறுகைக்காகச் சட்டத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படவில்லை யெனவும் அறிந்துகொண்டு, அத்தகைய வேறாளைத் தொழிலுக்கமர்த்துகின்ற,

எவரேனுமாள் மனிதரைக் கள்ளமாகக் கடத்தல் என்ற தவறைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்தாண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை யான மறியற்றண்டனைக்கும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற அல்லது புரிவதற்கு உதவுகின்ற அல்லது உடந்தையளிக்கின்ற, அல்லது

(ஆ) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவ தற்கு ஆயத்தநிலையான ஏதேனும் செயலைச் செய்கின்ற,

எவரேனுமாள் மனிதரைக் கள்ளமாகக் கடத்தல் என்ற தவறைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையி லொருவகையான மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் மனிதரைக் கள்ளமாகக் கடத்துவோரைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை யளிப்பதற்கும் கள்ளமாகக் கடத்தப்பட்ட அல்லது கடத்தப்படு கின்ற ஆட்களைத் தண்டிப்பதற்கல்லவெனவும் ஐயத்தைத் தவிர்ப்பதற்காக இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையிலிருந்து மனிதரைக் கள்ளமாகக் கடத்தல்

**137.** (1) நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் நிதிசார் அல்லது பொருள்வகையான நன்மையை அல்லது வேறே தேனும் பிரதிபயனைப் பெற்றுக்கொள்வதற்கென-

(அ) ஒரு வெளிநாட்டின் சட்டங்களை மீறி அந்நாட்டினுட் பிரவேசிப்பதற்கென, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மீறுதலாக இலங்கையை விட்டுநீங்குவதற்கு வேறோராளை ஒழுங்குசெய்கின்ற;

(ஆ) இலங்கையின் சட்டங்களுக்கிசைந்தொழுக இலங்கையை விட்டுநீங்கி வேறேதேனும் நாட்டின் சட்டங்களுக் கிசைந்தொழுக அந்நாட்டினுட் பிரவேசிப்பதற்கு வேறோராளை ஒழுங்குசெய்து அதன்பின்னர் ஒரு மூன்றாம் நாட்டின் சட்டங்களை மீறி அம்மூன்றாம் நாட்டினுட் சட்டவிரோதமாகப் பிரவேசிப்பதற்கு அத்தகைய வேறு ஆளை ஒழுங்குசெய்கின்ற;

(இ) ஒரு வெளிநாட்டின் சட்டங்களை மீறி அந்நாட்டினுட் பிரவேசிப்பதற்கென இலங்கையின் சட்டங்களுக்கிசைந் தொழுக இலங்கையை விட்டு நீங்குவதற்கு வேறோராளை ஒழுங்குசெய்கின்ற; அல்லது

(ஈ) ஒரு வெளிநாட்டின் சட்டங்களுக்கிசைந்தொழுக அந்நாட்டினுட் பிரவேசிப்பதற்கென, இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி இலங்கையை விட்டுநீங்குவதற்கு வேறோராளை ஒழுங்குசெய்கின்ற,

எவரேனுமாள் மனிதரைக் கள்ளமாகக் கடத்தல் என்ற தவறைப் புரிகின்றார்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, "ஒழுங்கு செய்கின்ற" என்ற சொல்லமைப்பு பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) வேறொரு நாட்டுக்கு இலங்கையை விட்டுநீங்குவதற்கு ஆட்களைத் தூண்டும் உட்கருத்துடன் பொய்யான வாக்குறுதிகளைச் செய்து அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்களைப் பரப்பி, நேரடியாக அல்லது நேரடியாக வல்லாமல் நிதிசார் அல்லது பொருள்வகையான நன்மையைப் பெற்றுக்கொள்வதற்கென ஆட்களை ஆட்சேர்த்தல்;

பந்தி (அ) வின் நோக்கங்களுக்காக, பொய்யான வாக்குறுதிகள் அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்கள் என்பது, தொழில், கல்வி அல்லது கூடுதல் சிறந்த வாழ்க்கைத் தராதரங்கள் தொடர்பான வாக்குறுதி களை அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்களை உள்ளடக்கும்;

(ஆ) பணவகையான நன்மைகள் தேறிப் பெறப்பட்டன வாயினுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி, அத்தகைய ஏதேனும் நன்மையை ஆட்களிடமிருந்து பரிந்துகேட்டல்;

(இ) ஆட்களை எவையேனும் வழிவகைகள்மூலம் இடம்பெயர்ப்பதற்கு அப்பயன்பட்ட உரிமத்தை அல்லது அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல், வான்வழியாக, கடல்வழியாக அல்லது வேறெவை யேனும் வழிவகைகள்மூலம் அவ்வாறு இடம் பெயர்த்தல்; அல்லது

(ஈ) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது ஒரு வெளிநாட்டி லாயினுஞ்சரி ஆட்களை ஏற்றுக்கொள்ளுதலும் அவர்களுக்குப் புகலிடமளித்தலும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான ஒரு தவறைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற அல்லது அதனைப் புரிவதற்கு ஆயத்த நிலையான ஏதேனும் செயலைச் செய்கின்ற, அல்லது அதனைப் புரிவதற்கு உதவுகின்ற அல்லது உடந்தையளிக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

(4) ஓராம் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன் றைப் புரிகின்ற ஆளொருவர், நீதிவான் நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்தாண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்ட னைக்கும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின் ஏற்பாடுகள் மனிதரைக் கள்ளமாகக் கடத்து வோரைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனையளிப்ப தற்கும் கள்ளமாகக் கடத்தப்பட்ட அல்லது கடத்தப்படுகின்ற ஆட்களைத் தண்டிப்பதற்கல்லவெனவும் ஐயத்தைத் தவிர்ப்ப தற்காக இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

**138.** (1) இச்சட்டத்தின் 136 ஆம் மற்றும் 137 ஆம் பிரிவுகளின்கீழ் மனிதரைக் கள்ளமாகக் கடத்தல் என்ற தவறைப் புரிந்துள்ள ஆளொருவர், 136 ஆம் அல்லது 137 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிகையில் அவர் பின்வருமாறு செய்யின், இப்பாகத்தின்கீழ் தீங்குபெருக்கும் மனிதரைக் கள்ளமாகக் கடத்தல் தவறொன்றைப் புரிகின்றார்:- தீங்குபெருக்கும் மனிதரைக் கள்ளமாகக் கடத்தல் தவறுகள்

(அ) அத்தகைய ஆள் கள்ளமாகக் கடத்தப்பட்ட அல்லது கள்ளமாகக் கடத்தப்படுகின்ற ஆட்களின் உயிர்களுக்கு அல்லது பாதுகாப்புக்கு அபாயம் ஏற்படுத்தியிருப்பின் அல்லது அபாயம் ஏற்படுத்தியிருக்கக்கூடிய சாத்தியத்தைக் கொண்டிருப்பின்;

(ஆ) அத்தகைய ஆள் வேறாட்களைக் கொடூரமான மற்றும் இழிவான நிலைமைகளின்கீழ் கள்ளமாகக் கடத்தி யிருப்பின்;

(இ) அத்தகைய ஆள் கள்ளமாகக் கடத்தப்பட்ட அல்லது கள்ளமாகக் கடத்தப்படுகின்ற ஆட்களிடமிருந்து சட்டமுறையற்ற பிரதிபயனைப் பரிந்துகேட்டிருப்பின் அல்லது கள்ளமாகக் கடத்தப்பட்ட அல்லது கள்ளமாகக் கடத்தப்படுகின்ற ஆட்களிடமிருந்து பிரதிபயனைக் கோரியிருப்பின்;

(ஈ) அத்தகைய ஆள் கள்ளமாகக் கடத்தப்பட்ட அல்லது கள்ளமாகக் கடத்தப்படுகின்ற ஆட்களை எம்முறை யிலேனும் துர்ப்பிரயோகம் செய்திருப்பின்;

(உ) அத்தகைய ஆள் (18 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 360 இ என்னும் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிந்திருப்பின்; அல்லது

(ஊ) அத்தகைய ஆள் வேறேதேனும் சட்டத்தின்கீழ் ஒரு பாரதூரமான தவறொன்றாகவமைகின்ற வேறே தேனும் செயலைப் புரிந்திருப்பின்.

இப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, ஒரு பாரதூரமான தவறு என்பது, வேறேதேனும் சட்டத்தின்கீழ் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு, பிணையில் விடுபடற்பால தல்லாத, இணக்கத்தக்கதல்லாத மற்றும் குற்றப்பகர்வு தொடுக்கப் படக்கூடிய தவறொன்றாக வுள்ளவொரு தவறு என்று பொரு ளாகும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளி யாகவுள்ள ஆளொருவர், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்தாண்டுகளுக்குக் குறையாததும் இருபதாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை யான மறியற்றண்டனைக்கும் ஒரு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தவறு ஒரு சிறுவர் தொடர்பில் புரியப்படுமிடத்து, எட்டாண்டுகளுக்குக் குறையாததும் இருபதாண்டுகளை விஞ்சாததுமானவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்ட னைக்கும் இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*மனிதரைக் கள்ளமாகக் கடத்தல் தொடர்பான ஆவண முறையான தவறுகள்*

**139.** (1) (அ) இலங்கை அரசாங்கம் அல்லது வேறே தேனும் வெளிநாட்டு அரசாங்கம் தொடர் பாகச் சட்டமுறையான அதிகாரமின்றி, ஏதேனும் பயண ஆவணத்தை அல்லது அதன் பாகத்தை அல்லது அத்தகைய ஏதேனும் அரசாங்கத்தினால் விசா வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படு கின்ற ஏதேனும் ஆவணத்தை அல்லது அதன் ஒரு பாகத்தை அச்சிடுகின்ற, பிரதியெடுக்கின்ற, புனைகின்ற அல்லது தயாரிக்கின்ற;

(ஆ) இலங்கையில் அல்லது வேறெங்கேனும் வழங்கப்பட்டதாயினுஞ்சரி, ஏதேனும் பயண ஆவணத்தை, அல்லது அதன் மீதான ஏதேனும் விசாவை அல்லது

புறக்குறிப்பைப் பொய்யாகப்புனைகின்ற, மாற்றுகின்ற அல்லது அதனோடு கையிடுகின்ற;

(இ) பந்திகள் (அ) அல்லது (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஆவணத்தில் புறக்குறிப்பிடப்பட்ட ஏதேனும் சான்றிதழைப் பொய்யாகப்புனைகின்ற, மாற்றுகின்ற அல்லது அதனோடு கையிடுகின்ற;

(ஈ) சட்டமுறையான அதிகாரமின்றி, பொய்யாகப் புனையப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது அதனோடு கையிடப்பட்ட பயண ஆவணத்தை அல்லது பொய்யாகப் புனையப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது அதனோடு கையிடப்பட்ட விசாவை அல்லது புறக்குறிப்பைக் கொண்டுள்ள பயண ஆவணமொன்றைப் பயன்படுத்துகின்ற அல்லது தனதுடைமையில் வைத்திருக்கின்ற;

(உ) சட்டமுறையான அதிகாரமின்றி, ஏதேனும் பொய்யாகப் புனையப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது அதனோடு கையிடப்பட்ட சான்றிதழைக் கொண்டுள்ள பொய்யாகப்புனையப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது அதனோடு கையிடப்பட்ட பயண ஆவணத்தைப் பயன்படுத்துகின்ற அல்லது தனதுடைமையில் வைத்திருக்கின்ற;

(ஊ) சட்டமுறையான அதிகாரமின்றி, அல்லது சட்டமுறையான சாக்கின்றி, வேறாட்களின் பயண ஆவணங்களைத் தனதுடைமையில் வைத்திருக்கின்ற அல்லது அவற்றை எம்முறையிலேனும் கையாளுகின்ற;

(எ) அமைச்சருக்கு அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின் அல்லது ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் சட்டமுறையாகச் செயலாற்றுகின்ற கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு, எவரேனும் வானூர்திக்கம்பெனி அலுவலருக்கு அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட பயண முகவருக்குப் பதிலிறுப்பதில் அல்லது அவர்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் கருமத்தில் ஏதேனும் பொய்யான விபரத்திரட்டை, பொய்யான கூற்றை அல்லது பொய்யான பிரதிநிதித்துவத்தைச் செய்கின்ற அல்லது செய்விக்கின்ற;

(ஏ) சட்டமுறையான அதிகாரமின்றி, ஏதேனும் வானூர்திப் பயண அனுமதிச் சீட்டை, சிப்பந்திகள் பொறுப்புவிடுவிப்புச் சான்றிதழை, கப்பலேறல் அனுமதிச் சீட்டை அல்லது ஒத்த தன்மையினதான ஏதேனும் ஆவணத்தை அச்சிடுகின்ற, பிரதியெடுக்கின்ற, தயாரிக்கின்ற அல்லது தனதுடைமையில் வைத்திருக்கின்ற, அளிக்கின்ற அல்லது எம்முறையிலேனும் பயன்படுத்துகின்ற;

(ஐ) இலங்கையில் அல்லது ஒரு வெளிநாட்டில் சட்டமுறையற்ற உட்பிரவேசத்தை, புறப்பாட்டை, அல்லது வதிவை வசதிப்படுத்தும் நோக்கங்களுக்காக மோசடியான ஆவணமொன்றைப் பெறுகின்ற;

(ஒ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அல்லது கட்டளையின்கீழ் எவரேனுமாள்

தனது தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதில் அல்லது புரிவதில் அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது அவரைத் தடைசெய்கின்ற;

(ஓ) செல்லுபடியானவொரு பயண ஆவணத்தை அல்லது செல்லுபடியானவொரு கடவுச்சீட்டை வைத்திருப்பவராகவிருந்து இலங்கைக்கு வெளியே வதிகையில், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி, அல்லது விடயத்துக்கேற்ப, ஒரு வெளிநாட்டரசாங்கத்தின் சட்டமுறையான அதிகாரமின்றி அல்லது சட்டமுறையான சாக்கின்றி, அஞ்சலினூடாக அல்லது வேறோர் ஆளினூடாக, அத்தகைய பயண ஆவணத்தை அல்லது கடவுச்சீட்டை இலங்கையில் வதிகின்ற ஆளொருவருக்கு அனுப்பிவைக்கின்ற அல்லது அனுப்புகின்ற;

(ஔ) இலங்கையில் வதிகையில் இலங்கைக்கு வெளியே ஏதேனும் நாட்டில் வதிகின்ற ஆளொருவருக்குப் பயண ஆவணமொன்றை, அஞ்சலினூடாக அல்லது வேறோர் ஆளினூடாக கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி, அல்லது விடயத்துக்கேற்ப, ஒரு வெளிநாட்டரசாங்கத்தின் சட்டமுறையான அதிகாரமின்றி அல்லது சட்டமுறையான சாக்கின்றி, அனுப்பிவைக்கின்ற அல்லது அனுப்புகின்ற;

(க) சட்டமுறையான அதிகாரமின்றி, அவருக்கு வழங்கப்பட்டுள்ளதும் அப்போதைக்கு வலுவிலுள்ளதுமான ஒன்றுக்கு மேற்பட்ட பயண ஆவணங்களைத் தனதுடைமையில் வைத்திருக்கின்ற;

(ங) இலங்கைப் பிரசையாகவிராது செல்லுபடியான இலங்கைப் பயண ஆவணத்தைத் தனதுடைமையில் வைத்திருக்கின்ற; அல்லது

(ச) தனக்காக அல்லது வேறெவரேனுமாளுக்காக ஒரு கடவுச்சீட்டை, ஒரு விசாவை அல்லது வேறேதேனும் பயண ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக, எவையேனும் பொய்யாகப் புனையப்பட்ட அல்லது பொய்யான ஆவணங்களை அல்லது பொய்யான தகவல்களைச் சமர்ப்பிக்கின்ற,

எவரே னுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள் நீதிவானொருவரினாலான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது பின்வருவனவற்றுக்கு ஆளாதல் வேண்டும்:-

(அ) பந்திகள் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ) அல்லது (ஐ) என்பவற்றின்கீழான தவறொன்றின் விடயத்தில், ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பந்திகள் (ஒ), (ஓ), (ஔ), (க), (ங) அல்லது (ச) என்பவற்றின்கீழான தவறொன்றின் விடயத்தில், இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற, அல்லது அதனைப் புரிவதற்கு ஆயத்தநிலையான ஏதேனும் செயலைச் செய்கின்ற அல்லது அதனைப் புரிவதற்கு உதவுகின்ற அல்லது உடந்தையளிக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாகவிருந்துள்ளார் மற்றும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார் என்றாற்போன்று அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) இலங்கையினுள் அல்லது ஒரு வெளிநாட்டிற்கு வேறோராளின் உட்பிரவேசத்தை வசதிப்படுத்துவதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள், வெளிநாட்டினுள் அந்த வேறாளின் உட்பிரவேசம் அந்நாட்டினுட் பிரவேசிப்பதற்காக அந்நாட்டின் சட்டத்தின்கீழான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாதவிடத்து, குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் ஏற்பாடுகள், 137 ஆம், 138 ஆம் மற்றும் 139 ஆம் பிரிவுகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட மனிதரைக் கள்ளமாகக் கடத்தல் என்ற தவறுகள் தொடர்பானவையாக இருப்பின் மட்டுமே எவரேனுமாளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## அத்தியாயம் III

### நடவடிக்கைமுறை

தவறுகளை இணக்குதல்

**140.** கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, 33 ஆம், 117 ஆம், 118 ஆம் பிரிவுகளின்கீழான, 127 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஏ) மற்றும் (ச) என்னும் பந்திகளின் கீழான, 128 ஆம் மற்றும் 133 ஆம் பிரிவுகளின்கீழான ஏதேனும் தவறை, அத்தவறைப் புரிந்துள்ளவரெனச் சார்த்தப்படுகின்ற, அல்லது நியாயமானமுறையில் சந்தேகிக்கப்படுகின்ற

ஆளிடமிருந்து அத்தவறுக்காக இச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆளின்மீது விதிக்கப்படுவதற்கு அவர் ஆளாகவுள்ள அதிக பட்சக் குற்றப்பணத்தின் அரைவாசித் தொகையை விஞ்சாத பணத்தொகையொன்றை ஏற்றுக்கொண்டு அத்தவறை இணக்கலாம்.

**141.** இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் தடுத்துவைக்கப்படுகின்ற எவரேனுமாள், அவ்வாறு தடுத்துவைக்கப்படுகையில், சட்டப்படியான கட்டுக்காப்பில் இருப்பவராகக் கருதப்படுதல் வேண்டும்.

*தடுத்துவைக்கப்பட்ட ஆட்கள் சட்டப்படியான கட்டுக்காப்பில் உள்ளவர்களாகக் கருதப்படுதல்*

**142.** (1) இச்சட்டத்தின்கீழ் எந்த ஆட்களின் தடுத்துவைப்பு தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்த ஆட்களின் தடுத்துவைப்பு நோக்கத்துக்காக, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அந் நோக்கத்துக்காகத் தோதாகவுள்ள பொருத்தமான அமைவிடங்களில் தடுத்துவைத்தல் நிலையங்களைத் தாபித்தல் வேண்டும்.

*தடுத்துவைத்தல் நிலையங்களைத் தாபித்தல்*

(2) ஒரு தடுத்துவைத்தல் நிலையத்தில் பேணப்படவேண்டிய நிலைமைகளும் அத்தகைய நிலையங்களை நிருவகிக்கும் முறையும் விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

(3) ஒரு தடுத்துவைத்தற் கட்டளையை மீறி தடுத்துவைத்தல் நிலையத்திலிருந்து தப்பிச்செல்லும் எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் கைது செய்யப்படுவதன்மீது நாட்டின் பொதுச் சட்டத்துக்கு அமைந்த வராதலும் வேண்டும்.

**143.** (1) இச்சட்டத்தின்கீழ் எந்த ஆட்களின் தடுத்துவைப்பு தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்த ஆட்களைத் தற்காலிகமாகத் தடுத்து வைக்கும் நோக்கத்துக்காக, அமைச்சர், தடுத்துவைக்கப்பட்டவர் இயைபான முகவராண்மைகளிடம் கையளிக்கப்படும்வரை வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் ஒரு கடற்றுறையினுள் அல்லது விமானநிலையத்தினுள் அந்நோக்கத்துக்காகத் தோதாகவுள்ள பொருத்தமான அமைவிடங்களில் வைத்திருத்தற் செயலிடங்களைத் தாபிக்கலாம்.

*வைத்திருத்தற் செயலிடங்களைத் தாபித்தல்*

(2) அத்தகைய வைத்திருத்தற் செயலிடங்களில் பேணப்பட வேண்டிய நியமங்களும் அத்தகைய செயலிடங்களை நிருவகிக்கும் முறையும் விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

(3) ஒரு வைத்திருத்தற் செயலிடத்திலிருந்து தப்பிச்செல்லும் எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் பற்றுதல் செய்யப்படுவதன்மீது நாட்டின் பொதுச் சட்டத்துக்கு அமைந்தவராதலும் வேண்டும்.

இலங்கைப் பிரசையல்லாத ஆளொருவரின் கட்டுக்காப்புத் தொடர்பான நடவடிக்கை முறையும் தத்துவங்களும்

**144.** (1) படைகளின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினர் அல்லது கரையோரக் காவல் திணைக்களத்தின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட கரையோரக் காவல் அலுவலர், பிரிவுகள் 47, 136, 137, 138, 139, 142 அல்லது 143 என்பவற்றின்கீழான ஏதேனும் தவறைப் புரிந்துள்ளவரெனச் சந்தேகிக்கப்பட்ட ஆளொருவரைப் பிடியாணையின்றிக் கட்டுக்காப்பினுள் எடுக்கலாமென்பதுடன் மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்கு அத்தகைய ஆளை உடனடியாகக் கையளித்தலும் வேண்டும்.

(2) பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் இருபத்திநான்கு மணித்தியாலங்களினுள் அத்தகைய ஆளை நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவான்முன்னர் நிறுத்துதல் வேண்டும்.

(3) நீதிவானொருவர், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், புலனாய்வுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அத்தகைய ஆளைக் கட்டுக்காப்பில் தடுத்துவைப்பது அவசியமென்ற பொருள்பட பொலிசு அத்தியட்சகர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள ஒரு பொலிசு அலுவலரினால் சான்றிதழ் கோப்பிடப்படுவதன் மேல், நாற்பத்தெட்டு மணித்தியாலங்களை விஞ்சாதிருக்க வேண்டிய மேலதிகக் காலப்பகுதியொன்றுக்காக அத்தகைய ஆள் தடுத்துவைக்கப்படுவதற்குக் கட்டளையிடலாம்.

**145.** (1) ஒரு குடிவரவு அலுவலர் அல்லது ஒரு பொலிசு அலுவலர், இச்சட்டத்தின் 124 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிந்தவரெனச் சந்தேகிக்கப்பட்டவரும், இலங்கைப் பிரசையல்லாதவருமான ஆளொருவரைக் கைதுசெய்யலாம்.

*124 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றைப் புரிந்தவர்களெனச் சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆட்களைத் தடுத்து வைத்தல்*

(2) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அல்லது உதவிப் பொலிசு அத்தியட்சகர் என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள எவரேனும் பொலிசு அலுவலர், ஆளொருவர் தனது குற்றமின்மையை நிலைநாட்டும்வரை அல்லது 98 ஆம் அல்லது 99 ஆம் பிரிவின்கீழ் அவ்வாளுக்கெதிராக அமைச்சரினால் கட்டளையொன்று ஆக்கப்படும்வரை, 142 ஆம் அல்லது 143 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனுமிடத்தில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கைதுசெய்யப்பட்ட அவ்வாள் தடுத்துவைக்கப் படுவதற்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆள், அவர் எத்தேதியன்று முதன்முதலாவதாகத் தடுத்துவைக்கப்பட்டாரோ அத்தேதியிலிருந்து இருவாரங்களைக்கொண்ட காலப்பகுதி முடிவுறுகையில் தடுத்துவைப்பில் இருப்பின், அத்தகைய ஆள் தோதான ஏதேனும் கட்டளை ஆக்கப்படுவதற்கு நீதிவானொருவர்முன்னர் உடனடியாக நிறுத்தப்படுதல் வேண்டும்.

**146.** இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வெளிநாட்டினத்தவரொருவரைக் கட்டுக்காப்பினுள் எடுக்கின்ற எவரேனும் பொலிசு அலுவலர், படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினர், கரையோரக் காவல் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட கரையோரக் காவல் அலுவலர், அல்லது ஒரு சட்ட வலுவுறுத்தல் அதிகாரசபையின் வேறெவரேனும் உறுப்பினர் உடனடியாகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

*வெளிநாட்டினத்தவரொருவர் கட்டுக் காப்பினுள் எடுக்கப்படுகின்றமை பற்றிக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்படுதல்*

இலங்கைப் பிரசையல்லாத எவரேனுமாளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்படும் போது, அவருக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கப் படும்போது அல்லது அவர் விடுவிக்கப்படும் தறுவாயிலுள்ள போது கட்டுப்பாட்டாளர் தலைமையதி பதிக்கு அறிவித்தல் வேண்டும்.

**147.** (1) இலங்கைப் பிரசையல்லாத ஓராளுக்கெதிராக நீதிமன்றத்தினால் குற்றவழக்குத்தொடுக்கப்படுமிடத்து அல்லது அவருக்குத் தண்டனைத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அத்தகைய தகவல், நீதிமன்ற வழக்குநடவடிக்கைகளின் சான்றுப்படுத்தப் பட்ட பிரதியொன்றுடன்சேர்த்து இயைபான நீதிமன்றத்தின் பதிவாளரினால் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) இலங்கைப் பிரசையல்லாதவரும் நீதிமன்றத்தினால் மறியற்றண்டனையளிக்கப்பட்டவருமான ஆளொருவர் விடுவிக்கப்படவுள்ளவிடத்து, அத்தகைய தகவல், அத்தகைய தீர்மானத்தின் இயைபான பிரதியுடன் அத்தகைய விடுவிப் பிலிருந்து இருவாரங்களின்முன்னர் இயைபான மறியற்சாலைக் கண்காணிப்பாளரினால் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

பிடியாணையொன்று சேர்ப்பிக்கப் பட்டுள்ள குற்றஞ்சாட்டப் பட்டவர், சந்தேகிக்கப் பட்டவர் அல்லது சாட்சி ஒருவரின் வருகையைப் பெறுவதற்கு நீதிமன்றம் பயண ஆவணத்தைப் பற்றிவைக்கலாம் அல்லது பயணத்தடையை விதிக்கலாம்.

**148.** (1) ஏதேனும் சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு தொடர்பிலான ஏதேனும் வழக்குநடவடிக்கையில் ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவரின் அல்லது சந்தேகிக்கப்பட்டவரின் வருகை அல்லது ஒரு சாட்சியின் விசாரணை அவசியமாக வுள்ளதென நீதிமன்றத்துக்குத் தோன்றும்போதெல்லாம், நீதிமன்றமானது-

(அ) விடயத்துக்கேற்ப, பிடியாணை சேர்ப்பிக்கப்பட்டுள்ள அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு, சந்தேகிக்கப் பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பயண ஆவணத்தை, அத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டவரின், சந்தேகிக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் வருகையைப் பெறுவதற்கு அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்குப் பற்றிவைக்கலாம்; அல்லது

(ஆ) நாட்டை விட்டுநீங்குவதிலிருந்து அல்லது பயண ஆவணத்தைப் பயன்படுத்திச் சர்வதேசரீதியில் பயணஞ்செய்வதிலிருந்து அத்தகையவோராளைத் தடுக்கும்படி கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு கட்டளையிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனுமாளுக்கெதிராக இப்பிரிவின்கீழான கட்டளையொன்றை ஆக்குகின்ற நீதிமன்றமொன்று, அத்தகைய கட்டளையின் பிரதியொன்று கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

*சுங்க அலுவலர் களினால் சந்தேகத்துக் கிடமான பயண ஆவணங்கள் கைப்பற்றப் படுதல்.*

**149.** (1) சுங்க அலுவலரொருவர், பின்வருமாறிருப்பின், பயண ஆவணமொன்றைக் கைப்பற்றலாம்:-

(அ) ஒரு பயண ஆவணம் எவரேனும் தனியாளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருப்பின் அல்லது இராதிருப்பின்; அத்துடன்

(ஆ) பயண ஆவணம் ஒரு கொள்கலத்தினுள் இருப்பின், மற்றும் அக்கொள்கலன் எவரேனும் தனியாளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருப்பதனைப் பொருட்படுத்தாது, அத்தகைய ஆவணம் அதனுள் உள்ளதாவென்பதனைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக அக்கொள்கலத்தைச் சுங்க அலுவலர் தேடலாம்.

(2) சுங்க அலுவலரொருவர் ஒரு பயண ஆவணத்தைக் கைப்பற்றலாம் என்பதுடன் இச்சட்டத்தின்கீழ் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியின் அனுமதியின்றி ஆளொருவர் அவருக்கு வழங்கப்பட்டிராத ஒரு பயண ஆவணத்தைக் கொண்டு சென்றால் அவ்வாளைக் கைதுசெய்யலாம்.

(3) ஓராம், மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் கீழ் கைப்பற்றப்பட்ட பயண ஆவணத்தையும் கைதுசெய்யப்பட்ட ஆளையும் சுங்க அலுவலர் உடனடியாகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்குக் காண்பித்தலும் அவரின்முன் நிறுத்துதலும் வேண்டும்.

(4) சுங்க அலுவலர் எந்த வளவுகளினுட் பிரவேசிப்பதற்கு வேறுவகையாக அதிகாரமளிக்கப்படமாட்டாரோ அந்த எவையேனும் வளவுகளினுட் பிரவேசிப்பதற்கு இப்பிரிவு அத்தகைய அலுவலருக்கு அதிகாரமளிப்பதில்லை.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக-

(அ) "கொள்கலன்" என்பது, பயணப்பொதி, அஞ்சற் பெறுகலன், மற்றும் பண்டங்களைக் கொண்டுசெல்வதற்காக வடிவமைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி பண்டங்களைக் கொண்டு செல்லும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படக்கூடிய வேறேதேனும் பொருள் என்பவற்றை உள்ளடக்கும்; அத்துடன்

(ஆ) "சுங்க அலுவலர்" என்பது, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஓர் அலுவலர் என்று பொருளாகும்.

**150.** இச்சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக அல்லது இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட எது தொடர்பாகவும், எவரேனுமாளினால்- எண்பிப்பதற்கான பொறுப்பு

(அ) தான் இலங்கைப் பிரசையல்லரென;

(ஆ) தான் இலங்கைப் பிரசைகளல்லாத குறிப்பிட்ட ஏதேனும் வகுப்பினரான அல்லது விவரணத்தினரான ஆட்களைச் சேர்ந்தவரென;

(இ) தான் இலங்கை பிரசையாகவுள்ளாரென;

(ஈ) தான் இலங்கைப் பிரசைகளாகவுள்ள குறிப்பிட்ட ஏதேனும் வகுப்பினரான அல்லது விவரணத்தினரான ஆட்களைச் சேர்ந்தவரென;

(உ) தான் ஏதேனும் குறிப்பிட்ட நாட்டின் நாட்டினத்தவரென; அல்லது

(ஊ) தான் இலங்கையில் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குப் பயணஞ்செய்து கொண்டிருந்தாரென,

சார்த்தப்படின், அந்நிகழ்வை எண்பிக்கும் பொறுப்பு, (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அவ்வாளின் மீதாதல் வேண்டும்.

**151.** (1) (அ) எவரேனும் பொலிசு அலுவலர் அல்லது கோப்பறல் அல்லது தலைமைக் கடலோடி என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள படைகளின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினர் அல்லது கரையோரக் காவல் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், அல்லது குடிவரவு அலுவலரொருவர், இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது அணித்தாயுள்ள வலயத்தில் உள்ள வானூர்தியொன்றல்லாத ஏதேனும் கலத்தினுட் பிரவேசித்துத் தேடலாம் என்பதுடன் இச்சட்டத்தின் 46, 47, 51, 124, 126, 137, 138 அல்லது 139 ஆகிய பிரிவுகளின்கீழான ஏதேனும் தவறைப் புரிந்தவரெனச் சந்தேகிக்கப்படும் அத்தகைய கலத்தின்மீதுள்ள எவரேனுமாளைக் கைதுசெய்து கட்டுக்காப்பினுள் எடுக்கலாம்.

(ஆ) பந்தி (அ) வின் நோக்கங்களுக்காக, அணித்தாயுள்ள வலயம் என்பது, 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தினால் குறித்துரைக்கப்பட்ட அணித்தாயுள்ள வலயம் என்று பொருளாகும்.

(2) எவரேனும் குடிவரவு அலுவலர் அல்லது பொலிசு அலுவலர் அல்லது கோப்பறல் அல்லது தலைமைக் கடலோடி என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள படைகளின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினர் அல்லது கரையோரக் காவல் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினர், ஏதேனும் வாகனம், கலன், அல்லது வேறு போக்குவரத்து வழிவகைகள் இச்சட்டத்தின் 46, 47, 51, 124, 126, 136, 137, 138 அல்லது 139 ஆகிய பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் தவறைப் புரிவதில், அல்லது அது சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதென நம்புவதற்கு அத்தகைய எவரேனும் அலுவலருக்குக் காரணங்கள் உள்ளவிடத்து, ஏதேனும் வாகனத்தை, கலத்தை அல்லது வேறு போக்குவரத்து வழிவகைகளை, அவற்றின் எவையேனும் சாதனங்களுடனும் துணைப்பொருட்களுடனும் சேர்த்து உடனடியாகக் கைப்பற்றித் தடுத்துவைக்கலாம்.

*கைதுசெய்வதற்கு அல்லது கைப்பற்றுவதற்கு ஏதேனும் கலத்தினுள் அல்லது வளவுகளினுள் பிரவேசித்துத் தேடுவதற்கான தத்துவம்*

(3) எவரேனும் குடிவரவு அலுவலர் அல்லது உதவிப் பொலிசு அத்தியட்சகர் பதவவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட பொலிசு அலுவலர், இச்சட்டத்தின்கீழான தவறுகளுள் எவற்றையும் புரிந்தமை சம்பந்தமாக அத்தகைய வளவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என நம்புவதற்கு அவர்களுக்குக் காரணங்கள் உள்ளவிடத்து, எவையேனும் வளவுகளினுட் பிரவேசித்து அவற்றைத் தேடலாமென்பதுடன் அதன்கண் ணுள்ள எவரேனுமாளைக் கைதுசெய்து கட்டுக்காப்பினுள் எடுக்கலாம் அல்லது இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு புரியப்படுகின்றமை சம்பந்தமான அல்லது சம்பந்தப்பட்டுள்ள தென நியாயமானமுறையில் சந்தேகிக்கப்பட்ட ஏதேனும் எந்திரத்தொகுதியை, ஆவணத்தை, சாதனத்தை அல்லது பொருளைக் கட்டுக்காப்பினுள் எடுக்கலாம்.

(4) உட்பிரிவு (2) அல்லது (3) றின்கீழ் கைப்பற்றப்பட்ட ஏதேனும் வாகனம், கலன் அல்லது வேறு போக்குவரத்து வழிவகைகள், சாதனங்கள் அல்லது துணைப்பொருட்கள் அல்லது ஏதேனும் எந்திரத்தொகுதி, ஆவணம் அல்லது பொருள், இயன்றளவு விரைவாக கைப்பற்றுகையைச் செய்கின்ற அலுவலரினால், அல்லது அத்தகைய அலுவலர் படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினராகவிருக்குமிடத்து, கரையோரக் காவல் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலராகவிருக்குமிடத்து அவரினால் அல்லது எவரேனும் பொலிசு அலுவலரினால் தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதிவானொருவரின்முன்னர் காண்பிக்கப்படுதல் வேண்டும் அல்லது சோதனைக்காகக் கிடைக்கக்கூடியதாக்கப் படுதல் வேண்டுமென்பதுடன் அதன்மேல் நீதிமன்றம் அவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனம், கலன் அல்லது வேறு போக்குவரத்து வழிவகைகள், சாதனங்கள், துணைப்பொருட்கள் அல்லது ஏதேனும் எந்திரத்தொகுதி, ஆவணம் அல்லது பொருள் (5) ஆம் உட்பிரிவின்கீழ் கையுதிர்க்கப்படும்வரை அவற்றின் கட்டுக்காப்புத் தொடர்பாகத் தோதானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்குதலும் வேண்டும்.

(5) எவரேனுமாளின் உடைமையிலிருந்து (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் கைப்பற்றப்பட்ட ஏதேனும் வாகனம், கலன் அல்லது வேறு போக்குவரத்து வழிவகைகள்,

சாதனங்கள், துணைப்பொருட்கள் அல்லது ஏதேனும் எந்திரத் தொகுதி, ஆவணம் அல்லது பொருள்-

(அ) கைப்பற்றுகையின்பின்னர் ஆறுவாரங்கள் முடிவுற்ற தன்மேல் உடனடியாக, சார்த்தப்பட்ட தவறுக்காக அக்காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் குற்ற வழக்குத் தொடுக்கப்பட்டாலொழிய, அவ்வாளுக்குத் திருப்பிக்கொடுக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) அரசுக்கு இழப்பிக்கப்பட்டதென உரியமுறையில் வெளிப்படுத்தப்பட்டாலொழிய அல்லது (6) ஆம் உட்பிரிவின்கீழ் அழிக்கப்படவேண்டுமெனக் கட்டளை யிடப்பட்டாலொழிய, குற்றவழக்கின் இறுதித் தீர்மானத்துக்குப்பின்னர் உடனடியாக அவ்வாளுக்குத் திருப்பிக்கொடுக்கப்படுதல் வேண்டும்.

(6) நான்காம் உட்பிரிவின்கீழ் நீதிவானொருவருக்குமுன்னர் காண்பிக்கப்பட்ட அல்லது அவரினாலான சோதனைக்காகக் கிடைக்கக்கூடியதாக்கப்பட்ட ஏதேனும் வாகனம், கலன் அல்லது வேறு போக்குவரத்து வழிவகைகள், சாதனங்கள், துணைப்பொருட்கள் அல்லது ஏதேனும் எந்திரத்தொகுதி, ஆவணம் அல்லது பொருள் இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்படுவதில், அல்லது புரியப்படுவது சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதென எண்பிக்கப்படுமிடத்து, அத்தகைய நீதிமன்றம், விடயத்துக்கேற்ப, அத்தகைய எல்லாப் பொருட்கள் அல்லது வஸ்துக்கள் அரசுக்கு இழப்பிக்கப்படுவதற்கான அல்லது அழிக்கப்படுவதற்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் புலனாய்வு செய்யப்படுவதற்கான தத்துவம்

**152.** (1) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் கீழ் ஒரு விசாவை வழங்குமுன்னர் அல்லது நீடிக்குமுன்னர், விசாவுக்கான விண்ணப்பத்தில் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்றின் உண்மைபற்றித் தன்னைத் திருப்திசெய்வதற்கெனத் தகுதியானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்யலாம் அல்லது அத்தகைய சான்று காண்பிக்கப்படுவதனைத் தேவைப்படுத்தலாம் அல்லது ஏதேனும் புலனாய்வை நடாத்தலாம்.

(2) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின்கீழ் ஓர் இலங்கைப் பயண ஆவணத்தை வழங்குமுன்னர் பயண

ஆவணத்துக்கான விண்ணப்பத்தில் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்றின் உண்மைபற்றித் தன்னைத் திருப்திசெய்வதற்கெனத் தகுதியானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்யலாம் அல்லது அத்தகைய சான்று காண்பிக்கப்படுவதனைத் தேவைப்படுத்தலாம் அல்லது ஏதேனும் புலனாய்வை நடாத்தலாம்.

(3) இச்சட்டத்தை மீறி எவரேனுமாளினால் புரியப்பட்டுள்ள அல்லது புரியப்பட்டுள்ளதென நம்பப்பட்ட ஏதேனும் தவறுக்கெதிராக ஏதேனும் புலனாய்வை நடாத்தும்படி இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி ஒரு குடிவரவு அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம்.

(4) உட்பிரிவு (1), (2) அல்லது (3) என்பவற்றின்கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் விசாரணையின் அல்லது ஏதேனும் புலனாய்வின் நோக்கங்களுக்காக, கட்டுப்பாட்டாளர் தலைமை யதிபதி அல்லது வேறெவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பின்வரும் எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) சாட்சிகளை வருகைதரும்படி கட்டளைவிட்டழைப்பதற்கும் கட்டாயப்படுத்துவதற்கும்;

(ஆ) பயண ஆவணங்களை அல்லது வேறேதேனும் ஆவணத்தைக் காண்பிக்கும்படி கட்டாயப்படுத்துவதற்கும்;

(இ) சாட்சிகளுக்கு ஏதேனும் சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவதற்கும்; அத்துடன்

(ஈ) பயண ஆவணங்களை அல்லது வேறேதேனும் ஆவணத்தைக் கைப்பற்றுவதற்கும்.

(5) உட்பிரிவுகள் (1) அல்லது (2) இன்கீழ் சாட்சியொருவராகக் கட்டளைவிட்டழைக்கப்பட்டவரும் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் வருகைதருவதற்கு நியாயமான காரணமின்றித் தவறுகின்றவரும் அல்லது வருகைதந்திருந்து அவரிடம் சட்டமுறையாகக் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு மறுமொழியிறுக்க அல்லது காண்பிப்பதற்கு அவரது தத்துவத்திலுள்ள ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்க மறுக்கின்றவருமான எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

**153.** (1) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி-

இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிராதவையுட்பட, பொதுவாக ஆட்களை விசாரணை செய்வதற்கும், கட்டளை விட்டழைப்பதற்கும் அல்லது தகவல்களைத் தேவைப்படுத்துவதற்கும் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்குள்ள தத்துவம்

(அ) பின்வரும் நோக்கங்களுக்காக அவசியமாகவுள்ளதும் பணிப்பில் குறிப்பீடுசெய்யப்பட்ட வேறெவரேனுமாள் தொடர்பாக அவ்வாறு குறித்துரைக்கப்பட வேண்டியதும் அவரது அறிவுக்குட்பட்டதுமான அத்தகைய தகவலை அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய காலப்பகுதியினுள் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவும்படி எவரேனுமாளைப் பணிக்கலாம்:-

(i) இச்சட்டத்தின்கீழ் அத்தகைய வேறு ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தைக் கையுதிர்ப்பதற்காகவும்;

(ii) அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் விபரங்களின் சரியானதன்மை யைச் சரிபார்ப்பதற்காகவும்; அல்லது

(iii) இச்சட்டத்தின்கீழ் அத்தகைய வேறு ஆளினால் செய்யப்பட்ட அல்லது கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டின் அல்லது தகவலின் சரியானதன்மையைச் சரிபார்ப்பதற்காகவும்; அத்துடன்

(ஆ) காலத்துக்குக்காலம், இச்சட்டத்தின்கீழான அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்காக அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லா விசாரணைகளையும் நடாத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் விசாரணையின் நோக்கங்களுக்காக, கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அல்லது கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலர் பின்வரும் எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) சாட்சிகளை வருகைதரும்படி கட்டளை விட்டழைப்ப தற்கும் கட்டாயப்படுத்துவதற்கும்;

(ஆ) ஆவணங்களைக் காண்பிக்கும்படி கட்டாயப்படுத்து வதற்கும்; அத்துடன்

(இ) சாட்சிகளுக்கு ஏதேனும் சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவதற்கும்.

(3) உட்பிரிவு (1) றின்கீழ் சாட்சியொருவராகக் கட்டளை விட்டழைக்கப்பட்டவரும் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் வருகைதருவதற்கு நியாயமான காரணமின்றித் தவறுகின்றவரும் அல்லது வருகைதந்திருந்து அவரிடம் சட்டமுறையாகக் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு மறுமொழியிறுக்க அல்லது காண்பிப்பதற்கு அவரது தத்துவத்தி லுள்ள ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்க மறுக்கின்றவருமான எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

குடிவரவு அலுவலர்களுக்கு உதவுவதற்கும் அவக்ஷகளின் கட்டளையை நிறைவேற்று வதற்கும் பொலிசு அலுவலர் களுக்குள்ள கடமை

**154.** ஒவ்வொரு பொலிசு அலுவலரும், ஒரு குடிவரவு அலுவலரினால் அவ்வாறு கோரப்படும்போது, இச்சட்டத்துக்கு முரணாகச் செயலாற்றுகின்ற ஓராளைக் கைதுசெய்வதற்காகவும் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட எவரேனுமாளின் தடுத்துவைப்புக்காகவும் அல்லது அப்புறப் படுத்துகைக்காகவும் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி யின் ஏதேனும் எழுத்திலான கட்டளையை ஏற்று அதன் தாற்பரியத் தின்படி அதனை நிறைவேற்றுதல் வேண்டும்.

குறித்தசில சான்றிதழ்கள் தொடர்பான ஊகம்

**155.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுக்கும் முரணாக ஆளொருவர் இலங்கையினுட் பிரவேசித்தல் அல்லது இலங்கையில் தரித்திருத்தல் அல்லது இலங்கையை விட்டுநீங்குதல் தொடர்பாக உதவிப் பொலிசு அத்தியட்சகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவரினால் அல்லது உதவிக் குடிவரவுக் கட்டுப்பாட்டாளர் என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அலுவலரொரு வரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று, அவ்வாறு பெயர் குறிப்பிடப்பட்ட ஆள்-

(அ) இச்சட்டத்தின் பாகங்கள் III, IV, V மற்றும் VI ஏற்புடையனவாகாத அல்லது இச்சட்டத்தின் அத்தகைய ஏற்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஆளொருவராகவுள்ளார்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுக, விடயத்துக்கேற்ப, இலங்கையினுட் பிரவேசித்தார் அல்லது இலங்கையில் தரித்திருந்தார் அல்லது இலங்கையை விட்டுநீங்கினார்; அல்லது

(இ) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் விலக்களிக்கப்பட்ட ஆளொருவராகவுள்ளார்,

எனக் குற்றஞ்சாட்டப்பட்டவரினால் எண்பிக்கப்பட்டாலொழிய, அத்தகைய நிகழ்வுபற்றி முதற்றோற்றச் சான்றாக ஊகிக்கப்படுதல் வேண்டும்.

*அமைச்சரினால் அல்லது வெளிநாட்டு இராஜதந்திரிகளினால் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட சாதனம் பற்றிய எண்பிப்பு*

**156.** (1) விதித்துரைக்கப்பட்டவாறு, விடயத்துக்கேற்ப, அமைச்சரினால், கட்டுப்பாட்டாளக்ஷ தலைமையதிபதியினால் அல்லது ஒரு வெளிநாட்டரசாங்கத்தின் தராதர அங்கீகாரம்பெற்ற பிரதிநிதியொருவரினால் அல்லது தகுதிவாய்ந்த குடிவரவு அதிகாரியினால் உரியமுறையில் கையொப்பமிடப்பட்டு வழங்கப்பட்ட ஒவ்வோர் ஆவணமும், அதன்கண்ணுள்ள கையொப்பங்களுள் எவற்றினதும் எண்பிப்பின்றியும் சாட்சிக்காரராக அத்தகைய அலுவலர்களை அழைக்காமலும் சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன் முரணானது எண்பிக்கப்படும்வரை அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகள்பற்றிப் போதிய சான்றாகவிருத்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணமொன்று பொய்யாகப்புனையப்பட்டதென ஆளொருவர் சார்த்துமிடத்து, அது பொய்யாகப்புனையப்பட்டதென எண்பிப்பதற்கான பொறுப்பு அவ்வாளின் மீதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆவணம் என்பது, ஒரு கட்டளையை, பணிப்பை, அறிவுறுத்தலை, அனுமதிப்பத்திரத்தை, அறிக்கையை அல்லது வேறேதேனும் ஒத்த தன்மையினதான தொடர்புபட்ட விடயத்தை உள்ளடக்கும்.

**157.** (1) இலங்கையை விட்டுநீங்கவுள்ள ஆளொருவர், அவ்வாள் அவ்வாறு விரும்பின், இச்சட்டத்தின் 46, 47, 51, 124, 126, 136, 137, 138 அல்லது 139 என்னும் பிரிவுகளின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்பட்ட எவரேனுமாள் தொடர்பாகச் சத்தியஞ்செய்யப்பட்ட அல்லது உறுதிப்படுத்தப்பட்ட கூற்றொன்றை அளிக்கலாம்:

*இலங்கையை விட்டு நீங்கவுள்ள ஆளொருவரின் குறித்தசில தவறுகள் சம்பந்தமான சான்று*

ஆயின், அத்தகைய கூற்று, தவறொன்றைப் புரிந்துள்ளவரெனச் சார்த்தப்பட்ட ஆளின் சமுகத்தில் அளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கூற்று ஒரு சமாதான நீதிவானின்முன்னர் அல்லது உதவிப் பொலிசு அத்தியட்சகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள ஒரு பொலிசு அலுவலரின் முன்னர் அளிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்தச் சமாதான நீதிவான்முன்னர் அல்லது பொலிசு அலுவலர்முன்னர் கூற்று அளிக்கப்படுகின்றதோ அந்தச் சமாதான நீதிவான் அல்லது பொலிசு அலுவலர்-

(அ) அத்தகைய கூற்றை எழுத்தில் அல்லது இலத்திரனியல் ரீதியில் பதிதல் வேண்டும்;

(ஆ) தவறொன்றைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்பட்ட ஆளின் சமுகத்தில் கூற்றை அளிக்கின்ற ஆளுக்கு அத்தகைய கூற்றை வாசித்துக்காட்டுதல் வேண்டும்;

(இ) தவறொன்றைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்பட்ட ஆளுக்குக் கூற்றை விளக்குதல் வேண்டும்;

(ஈ) தவறொன்றைப் புரிந்துள்ளாரெனச் சாக்ஷத்தப்பட்ட ஆளுக்கு, கூற்றை அளிக்கின்ற ஆளிடமிருந்து கூற்றுக்கு இயைபான ஏதேனும் கேள்விகளைக் கேட்பதற்கு முழுவாய்ப்பையும் அளித்தல் வேண்டும்;

(உ) கூற்றை அளிக்கின்ற ஆளினால் கொடுக்கப்பட்ட மறுமொழிகளுடன்சேர்த்து அத்தகைய கேள்விகளைப் பதிதல் வேண்டும்;

(ஊ) கூற்றை அளிக்கின்ற ஆளின் கையொப்பத்தைக் கூற்றின் பதிவுக்குப் பெறுதல் வேண்டும்; அத்துடன்

(எ) விடயம் அத்தகையதாகவிருப்பின், இப்பிரிவின் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப் பட்டுள்ளன வெனச் சான்றுப்படுத்துதல் வேண்டும்.

(3) எவரேனும் சமாதான நீதிவான் அல்லது உதவிப் பொலிசு அத்தியட்சகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசை யிலுள்ள ஒரு பொலிசு அலுவலர் பின்வருமாறு செய்வதற்கு இத்தால் தத்துவமளிக்கப்பட்டுத் தேவைப்படுத்தப்படுகின்றார்:-

(அ) இப்பிரிவிற்கிணங்கக் கூற்றொன்றை அளிப்பதற்கு விரும்புகின்ற எவரேனுமாளுக்கு, (17 ஆம் அத்தியாயமான) சத்தியங்கள் மற்றும் உறுதியுரைகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் சாட்சிகளுக்காக அதிகார மளிக்கப்பட்ட முறையில் ஒரு சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவதற்கும்; அத்துடன்

(ஆ) அதன்பின்னர் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழான வழக்குநடவடிக்கைகளை எடுப்பதற்கும்.

(4) இப்பிரிவின்கீழ் அளிக்கப்பட்டதாகக் கொள்ளப்பட்ட கூற்றொன்று, வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நீதிமன்றத்தில் காண்பிக்கப்படலாமென்பது டன் பிரிவுகள் 46, 47, 51, 124, 126, 137, 138 அல்லது 139 என்பவற்றின் கீழான ஏதேனும் தவறைப் புரிந்தவரெனச் சார்த்தப்பட்ட எவரேனுமாளுக்கெதிராகச் சான்றாகக் கொடுக்கவும்படலாம்; அத்துடன் அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்.

சட்டத்தின் கீழான வழக்கு நடவடிக்கைகள் நீதிமன்றத்தில் முன்னுரிமை கொண்டிருத்தல்

**158.** (1) இச்சட்டத்தின்கீழ் எவரேனுமாளினால் புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்டவொரு தவறு தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்திலான வழக்குநடவடிக்கை, அந்நீதிமன்றத்தின் மற்றெல்லா அலுவல்களும் முன்னரே கையாளப்படுவதனைச் சூழ்நிலைகள் அவசியமாக்கும்போதுதவிர, அத்தகைய வேறு அலுவல்களிலும்பார்க்க முன்னுரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவரின் விளக்கத்தைத் தொடக்கத்தேதியன்று முடிபுக்குக் கொண்டுவர முடியாதிருக்குமிடத்து, அத்தகைய விளக்கம் தொடர்ந்துநடாத்தப்படுவதனைச் சூழ்நிலைகள் செயல்முறைக்குகந்ததல்லதாக்குமிடத்துத்தவிர, அல்லது உடனடுத்துப் பின்வரும் வேலைநாளன்று வேறு அலுவல்கள் கையாளப்படுவதனை அவசியமாக்குமிடத்துத்தவிர, உடனடுத்துப் பின்வரும் வேலைநாளன்று தொடர்ந்து நடாத்தப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான பணிகளைப் புரிவதற்குப் பயன்படுத்தப் பட்ட முறைகளும் தொழினுட்ப வியல்களும்

**159.** (1) அமைச்சர், கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடன், இச்சட்டத்தின்கீழான பணிகளைப் புரிவதற்காகப் பயன்படுத்தப்படவேண்டிய முறைகளும் தொழினுட்பவியல்களும் தொடர்பில் பணிப்புகளை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ளதெதுவும், அங்கீகரிக்கப்படாத முறைகளும் அல்லது தொழினுட்பவியல்களும் இச்சட்டத்தின் கீழான பணிகளைப் புரிவதற்காகப் பயன்படுத்தப்படுதலாகாதென்பதை உட்கிடையாகக் கூறுவதாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலாகாது.

(3) அத்தகைய முறைகளை அல்லது தொழினுட்பவியல்களைப் பயன்படுத்தும் நடைமுறை, ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

பாதுகாப்பு அல்லது குற்றவியல் நடத்தை தொடர்பான வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட தகவல்கள் முடிபு செய்வதில் நம்பப்படலாம் அத்துடன் அத்தகைய தகவல்கள் வெளிவிடப் படுதலாகாது

**160.** (1) வகுப்பாக்கஞ்செய்யப்பட்ட தகவல்கள் பாதுகாப்பு அல்லது குற்றவியல் நடத்தை பற்றிய கருமங்கள் தொடர்பானவையென அமைச்சர் தீர்மானித்தால், முடிபுகளைச் செய்வதில் அல்லது வழக்குநடவடிக்கைகளைத் தீர்மானிப்பதில் வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட தகவல்களின்மீது நம்பப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகுமிடத்து, அமைச்சர், பின்வருவனபற்றி முடிபொன்றைச் செய்வதற்கெனத் தகவல்கள்மீது நம்புவதற்குக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு அதிகாரமளிக்கலாம்:-

(அ) விசாவின் வழங்குகை;

(ஆ) வந்தடைதல் மற்றும் புறப்பாட்டுச் செய்முறைப் படுத்துகை;

(இ) அப்புறப்படுத்துகை மற்றும் நாடுகடத்துகைச் செய் முறை; அத்துடன்

(ஈ) இலங்கையில் இருக்கையில் இலங்கைப் பிரசைகளாக வல்லாத ஆட்களின் செயற்பாடுகளினது மேற்பார்வை.

(3) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் முடிபைச்செய்யும் அல்லது எவையேனும் நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக நம்பப்படும் வகுப்பாக்கஞ்செய்யப்பட்ட தகவல்கள் அந்தரங்க மானவையாக வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் வெளிவிடப்படுதலுமாகாது.

(4) அத்தகைய எல்லா வகுப்பாக்கஞ்செய்யப்பட்ட தகவல்களும் பாதுகாப்பானமுறையில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியின் கட்டுக்காப்பின்கீழ் பேணப் படுதலும் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, "வகுப்பாக்கஞ் செய்யப் பட்ட தகவல்கள்" என்பது, பின்வரும் காரணங்களுக்காக, வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வெளிவிடப்படமுடியாத எவையேனும் தகவல்கள் என இயைபான முகவராண்மையொன்றின் தலைவர் எழுத்தில் சான்றுப்படுத்துகின்ற தகவல்கள் என்று பொருளாகும்:-

(அ) (i) தகவல்களானவை (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவொரு வகையினவான தகவல்கள்; அத்துடன்

(ii) தகவல்களின் வெளிப்படுத்துகை (இ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவொரு வகையின வான தகவல்கள்.

(ஆ) தகவல்கள் பின்வருமாறிருப்பின் இவ்வுட்பிரிவினுள் அடங்குகின்றன:-

(i) தகவல்களின் மூலம், தகவல்களின் தன்மை, உள்ளீடு அல்லது நோக்கெல்லை, அல்லது இயைபான முகவராண்மைக்குக் கிடைக்கக்கூடிய உதவியின் அல்லது தொழிற்பாடுசார் முறைகளின் தன்மை அல்லது வகை என்பவற்றை அடையாளங் காண்பதற்கு இட்டுச்செல்லக்கூடியதாயின் அல்லது அவைபற்றிய விபரங்களை வழங்கக்கூடியதாயின்;

(ii) இயைபான முகவராண்மையின் பணிகளுள் எவற்றையும் பின்பற்றி, அது, பொறுப்பேற்கப் பட்டுள்ள அல்லது பொறுப்பேற்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது பொறுப்பேற்கப் படுவதற்கு உத்தேசிக்கின்ற குறிப்பிட்ட தொழிற்பாடுகள் பற்றியதாகவிருப்பின்; அல்லது

(iii) வேறொரு நாட்டின் அரசாங்கத்தினால், வேறொரு நாட்டின் அரசாங்கத்தினது முகவராண்மை யினால் அல்லது ஒரு சர்வதேச ஒழுங்கமைப்பி னால் அது இயைபான முகவராண்மைக்கு வழங்கப்பட்டிருப்பின் மற்றும் இத்தகவல்கள் எந்த அரசாங்கத்திலிருந்து, முகவராண்மையிலிருந்து, அல்லது ஒழுங்கமைப்பிலிருந்து வழங்கப்பட்டுள்ள னவோ அந்த அரசாங்கம், முகவராண்மை அல்லது ஒழுங்கமைப்பு வெளிப்படுத்துகைக்குச் சம்மதிக்காதிருக்கும் காரணமாக இத்தகவல்கள் இயைபான முகவராண்மையினால் வெளிப்படுத் தப்படமுடியாதிருப்பின்.

(இ) வெளிப்படுத்துகையானது பின்வருவனவற்றைச் செய்யக்கூடிய சாத்தியங்கொண்டதாகவிருப்பின், தகவல்களின் வெளிப்படுத்துகை இவ்வுட்பிரிவினுள் அடங்குகின்றது:-

(i) இலங்கையின் தேசியப் பந்தோபஸ்தை அல்லது பாதுகாப்பை அல்லது இலங்கையின் சர்வதேசத் தொடர்புகளைப் பங்கப்படுத்துவதற்கு;

(ii) வேறொரு நாட்டின் அரசாங்கத்தினால், வேறொரு நாட்டின் அரசாங்கத்தினது முகவராண்மை யொன்றினால் அல்லது சர்வதேச ஒழுங்கமைப் பொன்றினால் நம்பிக்கை என்ற அடிப்படையின் மீது இலங்கை அரசாங்கத்துக்குத் தகவல்கள் பொறுப்பிக்கப்படுவதனைப் பங்கப்படுத்துவதற்கு;

(iii) தவறுகளைத் தடுத்தலும், புலனாய்வு செய்தலும் மற்றும் கண்டுபிடித்தலும், ஒரு நியாயமான விளக்கத்துக்கான உரிமையுமுட்பட, சட்டத்தின் பேணுகையைப் பங்கப்படுத்துவதற்கு; அல்லது

(iv) எவரேனுமாளின் காப்பை அபாயத்துக்குட்படுத்து வதற்கு.

## பாகம் IX

## நாடுகடந்த வழக்குநடவடிக்கைகள்

*ஆள்புலத்துக்கு அப்பாற்பட்ட நியாயாதிக்கம்*

**161.** (1) இலங்கையின் ஆள்புலத்துக்கு வெளியேயுள்ள ஏதேனுமிடத்தில் இச்சட்டத்தின்கீழான தவறொன்றை ஆளொருவர் புரியுமிடத்து, அத்தகைய தவறு தொடர்பிலான வழக்குநட வடிக்கைகள் இலங்கையின் மேல் நீதிமன்றத்தில் தொடுக்கப் படலாம்.

(2) கொழும்பில் நடைபெறும் இலங்கையின் மேல்நீதிமன்றம் அல்லது 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்துவாசிக்கப்படும் அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறுகளை விளங்கித் தீர்மானிப்பதற்கு நியாயாதிக்கங்கொண்டிருத்தல் வேண்டும்.

*மீளவொப் படைத்தல் ஒழுங்கேற் பாடுகள் தொடர்பான ஏற்பாடு*

**162.** இலங்கை அரசாங்கத்துக்கும் வேறேதேனும் அரசின் அரசாங்கத்துக்குமிடையே மீளவொப்படைத்தல் ஒழுங்கேற்பா டொன்று வலுவிலுள்ளவிடத்து, அத்தகைய ஒழுங்கேற்பாடு, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப்படைத்தல் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின்கீழான தவறொன்று

தொடர்பிலும் அத்தகைய தவறைப் புரிவதற்கு எத்தனித்தல் அல்லது சதிசெய்தல் அல்லது அத்தகைய தவறைப் புரிவதற்கு உதவுதல் மற்றும் உடந்தையளித்தல் தொடர்பிலும் மீளவொப் படைத்தற்கான ஏற்பாட்டை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப் படைத்தல் சட்டத்தைத் திருத்துதல்*

**163.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப்படைத்தல் சட்டத்திற்கான அட்டவணை, அதன் பாகம் ஆ வுக்கு நேர்முன்னர் பின்வருவதனை உட் புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"( ) ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குடிவரவுச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட தவறொன்று."

*மீளவொப் படைத்தல் சட்டம் தொடர்பான பொருள் கோடல்*

**164.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப்படைத்தல் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் நியதிகளின்படியான தவறொன்று, அச்சட்டத்தின்கீழான மீளவொப்படைத்தல் நோக்கத்துக்காக மட்டுமே ஓர் அரசிறைத் தவறாக அல்லது ஓர் அரசியற் பண்பினதான தவறாக அல்லது ஓர் அரசியல் தவறுடன் சம்பந்தப்பட்ட தவறாக அல்லது அரசியல் நோக்கங்களினால் உந்தப்பட்ட தவறாக இராததாகக் கருதப்படுதல் வேண்டும்.

*எந்த ஆட்களுக் கெதிராக மீளவொப் படைத்தல் கோரிக்கை செய்யப் படுகின்றதோ அந்த ஆட்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட விதிமுறைகள் பற்றிக் கோரிக்கை செய்யும் அரசுக்கு அறிவிப்பதற்கு அமைச்சருக் குள்ள கடமை*

**165.** இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப் பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளை மீளவொப்படைப்பதற்காக வேறொரு நாட்டின் அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் இலங்கை அரசாங்கத்துக்குக் கோரிக்கை யொன்று செய்யப்படுமிடத்து, அமைச்சர், அத்தவறுக்காக அவ்வாளுக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்பதற்காக அல்லது அவரை மீளவொப்படைப்பதற்காக, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள அல்லது எடுப்பதற்கு உத்தேசித்துள்ள வழிமுறைகள்பற்றிக் கோரிக்கைசெய்கின்ற அரசின் அரசாங்கத்துக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இலங்கைப் பிரசைக ளல்லாத ஆட்களின் உரிமைகள்*

**166.** இலங்கைப் பிரசையல்லாத ஆளொருவர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் கைதுசெய்யப்படுமிடத்து, அத்தகைய ஆள் பின்வருவனவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்:-

(அ) அவர் எந்த அரசின் நாட்டினத்தவராக உள்ளாரோ அல்லது எந்த அரசு அவரது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வேறுவகையில் உரித்துடைய தாகவுள்ளதோ அந்த அரசின் மிகக்கிட்டிய தோதான பிரதிநிதியுடன் அல்லது அவர் ஒரு நாடற்ற ஆளாகவிருப்பின், அவர் வழக்கமாக வதிந்த ஆள்புலத்திலுள்ள அரசின் மிகக்கிட்டிய தோதான பிரதிநிதியுடன் தாமதமின்றித் தொடர்புகொள்வ தற்கும்; அத்துடன்

(ஆ) அவ்வரசின் பிரதிநிதியொருவரினால் வருகை தரப்படுவதற்கும்.

*ஏனைய அரசுகளுக்கு உதவியளிப் பதற்கு அரசாங்கத்துக் குள்ள கடமை*

**167.** இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கு நேரொத்ததாக வுள்ள அவ்வரசின் சட்டத்தின்கீழான தவறொன்று தொடர்பில், எவரேனுமாளுக்கெதிராக அவ்வரசில் தொடுக்கப்பட்ட குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் சம்பந்தமாக அவசியமாகக்கூடியவாறான ஏதேனும் வெளிநாட்டரசின் இயைபான அதிகாரிகளுக்கு, அதன் கையுதிர்ப்பிலுள்ள ஏதேனும் இயைபான சான்றின் வழங்குகை உட்பட, அரசாங்கமானது அத்தகைய உதவியை அளித்தல் வேண்டும்.

## பாகம் X

## பொது

*ஒழுங்கு விதிகள்*

**168.** (1) இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்களுக்காக ஒழுங்கு விதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படு கின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பிலும், அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் அல்லது அதன் நெறிகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அவசியமாகக்கூடியவாறாக அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களுக்குப் பங்கமின்றியும், அமைச்சர் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:–

(அ) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் கூறப்பட்ட எல்லாக் கருமங்களும்;

(ஆ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக எவரேனுமாளைப் பரிசோதனை செய்தலும், ஏதேனும் ஆவணத்தைக் காண்பித்தலும், சோதனையிடுதலும், அதற்கு இலச்சினையிடுதலும்;

(இ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக எவரேனுமாளிட மிருந்து அல்லது ஏதேனும் வகுப்பினரான அல்லது விவரணத்தினரான ஆட்களிடமிருந்து அடையாளங் காண் தகவல்களைப் பெறுதல்;

(ஈ) ஏதேனும் படிவத்திலான தற்காலிகப் பயண ஆவணத்தை வழங்குதல்; அத்துடன்

(உ) இலங்கைப் பிரசைகளல்லாத ஆட்களைத் தடுத்துவைப் பதற்கான தடுத்துவைத்தல் நிலையங்களையும் வைத்திருத்தற் செயலிடங்களையும் தாபித்தலும் அத்தகைய வைத்திருத்தல் நிலையங்களினதும் செயலிடங்களினதும் நடவடிக்கைமுறைகளும் வசதிகளும்.

(3) அத்தகைய ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானி யில் வெளியிடப்பட்டபின்னர் வசதியானளவு விரைவாக, அங்கீ காரத்துக்காகப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதியானது ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்பட்ட தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**169.** (1) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி பின்வருவன தொடர்பாக இலத்திரனியற் படிவத்திலான பதிவேடுகளையும் ஆவணங்களையும் பேணலாம் மற்றும் பேணிக்காக்கலாம்:- *பதிவேடு களையும் ஆவணங் களையும் இலத்திரனியல் படிவத்தில் பேணுதலும் பேணிக் காத்தலும்*

(அ) விசா;

(ஆ) உட்பிரவேச மற்றும் புறப்பாட்டு நடைமுறை;

(இ) அப்புறப்படுத்துகையும் நாடுகடத்துதலும்;

(ஈ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இலங்கைப் பிரசைகளல்லாத ஆட்கள் இலங்கையில் இருக்கையில் அத்தகைய ஆட்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தலும் புலனாய்வுசெய்தலும்;

(உ) இலங்கைப் பயண ஆவணங்கள்; அத்துடன்

(ஊ) இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் விதிக்கப்பட்ட வாறாக அல்லது குறித்தளிக்கப்பட்டவாறாகக் குடிவரவு தொடர்பான வேறேதேனும் கடமை அல்லது பணி.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒவ்வொரு பதிவேடும் அல்லது ஆவணமும் 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியற் கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் அல்லது வேறேதேனும் இயைபான சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பேணப்படுதலும் பேணிக்காக்கப்படுதலும் வேண்டும். அத்தகைய பதிவேடு அல்லது ஆவணம், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட ஒரு பணியின் முதற்றோற்றச் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு பணி தொடர்பாகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் வைத்திருக்கப்பட்ட பதிவேடுகளினதும் ஆவணங்களினதும்

வன்பிரதிகள், அத்தகைய பதிவேடு அல்லது ஆவணம் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் மெய்யென்று உறுதிப் படுத்தப்பட்டு சான்றுப்படுத்தப்பட்டிருப்பின், இலத்திரனியற் பதிவேடு அல்லது ஆவணமெதுவும் வைத்திருக்கப்படாத விடயத்தில், முதற்றோற்றச் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

அடையாளங் காண் தகவல்களைச் சேகரித்தல், பயன் படுத்துதல், செய்முறைப் படுத்துதல் மற்றும் களஞ்சியப் படுத்துதல் என்பன சட்டமுறையாக விருத்தல்

**170.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பின்வருவோர் பற்றிய எவையேனும் அடையாளங்காண் தகவல்களின் சேகரிப்பு, ஒருங்கியைப் பாவனை, செய்முறைப்படுத்துகை மற்றும் தேக்கி வைப்பு என்பவற்றுக்கு நியாயமானமுறையில் அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல், 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டுக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) இலங்கைப் பிரசையல்லாத எவரேனுமாள்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளவ ரெனச் சந்தேகிக்கப்படுகின்ற அல்லது சார்த்தப்படு கின்ற எவரேனுமாள்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பின்வருவோர் பற்றிய நிழற்படங்கள், அளவீடுகள், கைவிரலடையாளங்கள் மற்றும் வேறேதேனும் அடையாளங்காண் தகவலையெடுப்பதற்கு நியாயமானமுறையில் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல், சார்ஜண்டு என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவருக்கு அல்லது ஒரு கோப்பறல், தலைமைக் கடலோடி என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசை யிலுள்ள படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினரொரு வருக்கு அல்லது கரையோரக் காவல் திணைக்களத்தின் கரையோரக் காவல் அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண் டும்:-

(அ) இலங்கைப் பிரசையல்லாத எவரேனுமாள்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ள வரெனச் சந்தேகிக்கப்படுகின்ற அல்லது சார்த்தப் படுகின்ற எவரேனுமாள்.

(3) இச்சட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட தனிப்பட்ட எல்லாத் தகவல்களும் செய்முறைப்படுத்தற்காகவும் தேக்கிவைக்கப்படுத் தற்காகவும் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக அனுப்பப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட அடையாளங் காண் தகவல்களின் பாவனையினது நோக்கெல்லை

**171.** (1) இச்சட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட அடையாளங்காண் தகவல்கள் பின்வரும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் படலாம்:-

(அ) ஓர் இலங்கைப் பயண ஆவணத்துக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற எவரேனும் விண்ணப்பகாரரை அல்லது ஓர் இலங்கைப் பயண ஆவணத்தை வைத்திருப்பவரை அடையாளங் காண்பதில் உதவுதலும், அவரின் ஆளடையாளத்தை மெய்யென்று உறுதிப்படுத்துதலும்;

(ஆ) இலங்கைப் பயண ஆவணமொன்று வழங்கப்பட்டுள்ள ஆளொருவரின் சர்வதேசப் பயணத்துக்கு வசதியளித்தலும் அல்லது அதற்கு வேறுவகையாக உதவுதலும்;

(இ) ஓர் இலங்கை விசாவுக்கான எவரேனும் விண்ணப்ப காரரை அல்லது ஓர் இலங்கை விசாவை வைத்திருப்ப வரை அடையாளங்காண்பதில் உதவுதலும், அவரின் ஆளடையாளத்தை மெய்யென்று உறுதிப்படுத்துதலும்;

(ஈ) இலங்கைக்குப் பயணஞ்செய்யும் நோக்கங்களுக்காக ஒரு கலத்தில் அல்லது வானூர்தியில் ஏறுவதற்கு உத்தேசிக்கின்ற எவரேனுமாளை அடையாளங்காண் பதில் உதவுதலும், அவரின் ஆளடையாளத்தை மெய்யென்று உறுதிப்படுத்துதலும்;

(உ) இலங்கையினுட் பிரவேசிப்பதற்கான அனுமதியை விண்ணப்பிக்கின்ற எவரேனுமாளை அடையாளங் காண்பதில் உதவுதலும், அவரின் ஆளடையாளத்தை மெய்யென்று உறுதிப்படுத்துதலும்;

(ஊ) இலங்கைப் பிரசையொருவருட்பட, இலங்கையிலிருந்து புறப்படுகின்ற எவரேனுமாளை அடையாளங் காண்பதில் உதவுதலும், அவரின் ஆளடையாளத்தை மெய்யென்று உறுதிப்படுத்துதலும்;

(எ) இலங்கையிலிருந்து அப்புறப்படுத்தப்படுவதற்கு அல்லது நாடுகடத்தப்படுவதற்கு எவரேனுமாளை அடையாளங்காண்பதில் உதவுதலும், அவரின் ஆளடையதளத்தை மெய்யென்று உறுதிப்படுத்துதலும்;

(ஏ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ள எவரேனுமாளை அடையாளங்காண்பதில் உதவுதலும், அவரின் ஆளடையாளத்தை மெய்யென்று உறுதிப் படுத்துதலும்;

(ஐ) குற்றவியல் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகளை அல்லது இலங்கையின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் பந்தோபஸ்துக்கு அல்லது பொது ஒழுங்கமைதியின் அல்லது அத்தியாவசியச் சேவைகளின் பேணுகைக்குப் பங்கம்விளைவிக்கக கூடிய செயற்பாடுகளைத் தடுத்தலும், கண்டு பிடித்தலும் அல்லது புலனாய்வுசெய்தலும்;

(ஒ) ஏதேனும் சட்டத்துக்கெதிரான தவறொன்றுக்காக ஆளொருவரைப் புலனாய்வுசெய்தல் அல்லது அவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுத்தல் உட்பட, எழுத்திலான சட்டத்தை வலுவுறுத்துதல்;

(ஓ) குடிவரவுக் கருமங்களில் ஆவண மற்றும் ஆளடையாள மோசடியை முறியடித்தல்;

(ஔ) அடையாளங்காண் தகவல்களை நிருவகித்தல் அல்லது முகாமைசெய்தல்;

(க) அடையாளங்காண் தகவல்கள் வேறு அடையாளங் காண் தகவல்களுடன் இணக்கப்படுவதனை இயலச் செய்வதற்கு அல்லது பிழைகளைத் திருத்துவதற்கென அல்லது தோதான நியமங்களுக்கு இணங்கியொழுகு வதனை உறுதிப்படுத்துவதற்கென அவற்றை நாளது வரையாக்குதல்;

(ங) இலங்கையின் தேசிய பந்தோபஸ்துக்கு அச்சுறுத்தலாக விருக்கக்கூடிய அல்லது குற்றவியல் தன்மையினவான செயற்பாடுகளில் இணைந்துள்ளவர்களும் பொது மக்களின் காப்பு, அமைதி மற்றும் நல்லொழுங்கு என்பவற்றின் நலன்கருதி அவ்களின் தடுத்துவைப்பு அல்லது மேற்பார்வை அவசியமாகவிருக்கக்கூடிய வர்களுமான ஆட்களை அடையாளங்காணல்;

(ச) எந்த வேறு நோக்கத்தின் பாவனை வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகார மளிக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் வேறு நோக்கம்; அத்துடன்

(ஞ) இச்சட்டத்தின்கீழ் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப் பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ் முடிபுகளைச் செய்தல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக அடையாளங்காண் தகவல்களைப் பயன்படுத்தவேண்டிய அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களை அமைச்சர் விதித்துரைத் தல் வேண்டும்.

அடையாளங் காண் தகவல்களை வெளிப்படுத்து வதற்கு அல்லது அவற்றை அணுகுவதற்கு அதிகார மளித்தல்

**172.** (1) அமைச்சர், எழுத்திலான கட்டளைமூலம், பின்வருமாறு செய்யும்படி குறித்துரைக்கப்பட்டவொரு அதிகாரிக்கு அதிகாரமளிக்கலாம்:-

(அ) தரவுப் பாதுகாப்புத் தொடர்பான ஏதேனும் எழுத்தி லான சட்டத்துக்கிணங்கக் கட்டளையிற் குறித்துரைக் கப்பட்ட வகையினவான அடையாளங்காண் தகவல்களை அணுகுவதற்கும்; அல்லது

(ஆ) அமைச்சரின் கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட வகையினவான அடையாளங்காண் தகவல்களை, இலங்கையில் தரவுப் பாதுகாப்புத் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்துக்கிணங்க அமைச்சரின் கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக அல்லது நோக்கங்களுக்காக, 171 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வேறொரு நிறுவனத்துக்கு எழுத்திலான வேண்டுகோளின்மீது வெளிப்படுத்துவதற்கும்.

(2) அமைச்சர், இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் பின்வரும் நோக்கங்களுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ, இலங்கையில் தரவுப் பாதுகாப்புத் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கிணங்க அணுகுகை அல்லது வெளிப்படுத்துகை அதிகாரமளிக்கப்படுகின்ற நோக்கமாக அல்லது நோக்கங்களாகக் குறித்துரைக்கலாம்:-

(அ) ஓர் இலங்கைப் பயண ஆவணத்துக்கான எவரேனும் விண்ணப்பகாரரை அல்லது அதனை வைத்திருப்பவரை அடையாளங்காண்பதில் உதவுதலும், அவரின் ஆளடையாளத்தை மெய்யென்று உறுதிப்படுத்துதலும்;

(ஆ) இலங்கைப் பயண ஆவணமொன்று வழங்கப்பட்டுள்ள ஆளொருவரின் சர்வதேசப் பயணத்துக்கு வசதியளித்தலும் அல்லது அதற்கு வேறுவகையாக உதவுதலும்;

(இ) ஏதேனும் சட்டத்துக்கெதிரான தவறொன்றுக்காக ஆளொருவரைப் புலனாய்வுசெய்தல் அல்லது அவருக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுத்தல் உட்பட, எழுத்திலான சட்டத்தை வலுவுறுத்துதலும்;

(ஈ) குடிவரவுக் கருமங்களில் ஆவண மற்றும் ஆளடையாள மோசடியை முறியடித்தலும்;

(உ) அடையாளங்காண் தகவல்களைத் தேக்கிவைப்பதனை நிருவகித்தலும் அல்லது முகாமைசெய்தலும்;

(ஊ) அடையாளங்காண் தகவல், வேறு அடையாளங்காண் தகவலுடன் இணக்கப்படுவதனை இயலச்செய்வதற்கு, அல்லது பிழைகளைத் திருத்துவதற்கு அல்லது தோதான நியமங்களுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு அதனை நாளதுவரையாக்குதலும்;

(எ) இலங்கையின் தேசிய பந்தோபஸ்துக்கு அச்சுறுத்தலாகவிருக்கக்கூடிய அல்லது குற்றவியல் தன்மையினவான செயற்பாடுகளில் இணைந்துள்ளவர்க்கும் பொதுமக்களின் காப்பு, அமைதி மற்றும் நல்லொழுங்கு என்பவற்றின் நலன்கருதி அவர்களின் தடுத்துவைப்பு அல்லது மேற்பார்வை அவசியமாகவிருக்கக்கூடியவர்களுமான ஆட்களை அடையாளங்காணலும்;

(ஏ) எந்த நோக்கத்துக்காக வெளிப்படுத்துதலானது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தேவைப் படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்?கப்படுகின்றதோ அந்த வேறேதேனும் நோக்கம்;

(ஐ) குற்றவியல் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகளை அல்லது இலங்கையின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் பந்தோபஸ்துக்கு அல்லது பொது ஒழுங்கமைதியை அல்லது அத்தியாவசியச் சேவைகளைப் பேணுவதற்கு பங்கம்விளைவிக்கக்கூடிய செயற்பாடுகளைப் புலனாய்வுசெய்தலும், கண்டுபிடித்தலும் அல்லது தடுத்தலும்; அத்துடன்

(ஒ) இச்சட்டத்தின்கீழ் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ் முடிபுகளைச் செய்தலும்.

(3) ஓராம் உட்பிரிவின் குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையானது, பொலிசாரை, ஏதேனும் சட்ட வலுவுறுத்தற் குழுவை, ஒரு வெளிநாட்டின் எல்லைக் கட்டுப்பாட்டுக் குழுவை அல்லது அத்தகைய அதேபோன்ற நிறுவனமொன்றை உள்ளடக்கலாம்.

கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி வேறு உள்நாட்டு அல்லது சர்வதேசச் சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைகளுடன் தகவல்களைப் பகிரலாம்

**173.** கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, அடையாளங்காண் தகவல்களை அல்லது வேறெவையேனும் தகவல்களை, இலங்கையில் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தொடர்பான அத்தகைய எழுத்திலான சட்டத்துக்கிணங்க அடையாளங்காண் தகவல்களை அல்லது வேறெவையேனும் தகவல்களைப் பயன்படுத்துதல், பகிரும் முறையியல் மற்றும் அத்தகைய அடையாளங்காண் தகவல்களைப் பாதுகாத்தல் என்பன தொடர்பாகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியுடன் ஏதேனும் இருபுடை உடன்படிக்கையைச் செய்துகொண்டுள்ள வேறு உள்நாட்டு அல்லது சர்வதேசச் சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைகளுடன் அல்லது அரசுகளுடன் பகிரலாம்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துதல் தொடர்பாகத் தன்னியக்க மாக்கப்பட்ட முடிபை ஆக்குதல்

**174.** அமைச்சரின் பணிப்புகளுக்கிணங்க முன்னர் தீர்மானிக்கப்பட்ட கட்டளைக்கற்களை ஏற்புடையதாக்குகின்ற தன்னியக்கமாக்கப்பட்ட இலத்திரனியல் முறைமையொன்று, இச்சட்டத்தின் ஏதேனும் பாகம் தொடர்பாக ஒரு விண்ணப்பத்தைச் செய்முறைப்படுத்துவதற்கு அல்லது தொழிற்பாடொன்றை நிறைவேற்றுவதற்குக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் பயன்படுத்தப்படலாம்.

குடிவரவு அலுவலர்களின் வெகுமதி நிதியம்

**175.** (1) (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) குடிவரவு அலுவலர்களின் வெகுமதி நிதியம் எனவறியப்படவேண்டிய நிதியமென்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் மற்றும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் விசாக் கட்டணமாக அல்லது இலத்திரனியல் பயண அதிகாரவளிப்புக் கட்டணமாகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதிக்கு வரவுவைக்கப்பட்ட பணங்களின் ஒரு சதவீதத்துக்குச் சமமான பணத்தொகையொன்று நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறு அத்தகைய குடிவரவு அலுவலர்களுக்கு வெகுமதிகளாகக் கொடுக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும்; அத்துடன்

(ஆ) நிதியத்தை நிருவகிப்பதில் உறப்பட்ட ஏதேனும் செலவு.

(4) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி நிதியத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(5) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் நிதியத்தின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) அமைச்சர் பின்வரும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) நிதியம் எம்முறையில் நிருவகிக்கப்படவேண்டுமோ அம்முறையை விதித்துரைத்தலும்; அத்துடன்

(ஆ) விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப் பட்ட கருமங்கள் தொடர்பிலும்.

கட்டுப் பாட்டாளர் தலைமை யதிபதியும் அலுவலர்களும் சமாதான அலுவலர் களாகக் கருதப்படுதல்

**176.** (1) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, மேலதிகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, ஒரு குடிவரவுக் கட்டுப்பாட்டாளர், ஒரு பிரதிக் குடிவரவுக் கட்டுப்பாட்டாளர், ஓர் உதவிக் குடிவரவுக் கட்டுப்பாட்டாளர், பிரதான குடிவரவு அலுவலர் மற்றும் ஒரு குடிவரவு அலுவலர் என்போர், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினால் ஒரு சமாதான அலுவலருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக அச்சட்டத்தின் கருத்துக்குட்பட சமாதான அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சர், விசேட சூழ்நிலைகளில், ஒரு சமாதான அலுவலராகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான அவசியங்களையும் அவசரநிலைமைகளையும் கவனத்துட்கொண்டு பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பெறப்பட்ட இயைபான அதிகார வளிப்பைத் தம்வசம் வைத்திருக்கும்படி மேற்குறிப்பிடப்பட்ட சமாதான அலுவலர்களைப் பணிக்கலாம்.

சத்தியங்களை எடுத்தோது வதற்கான தத்துவம்

**177.** கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, மேலதிகக் கட்டுப் பாட்டாளர் தலைமையதிபதி, ஒவ்வொரு கட்டுப்பாட்டாளர், ஒவ்வொரு பிரதிக் கட்டுப்பாட்டாளரும், ஒவ்வொரு குடிவரவு

உதவிக் கட்டுப்பாட்டாளரும், ஒவ்வொரு பிரதான குடிவரவு அலுவலரும், மற்றும் ஒவ்வொரு குடிவரவு அலுவலரும், சட்டத்தின் நோக்கங்களுக்காக, (17 ஆம் அத்தியாயமான) சத்தியங்கள் மற்றும் உறுதியுரைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க சத்தியங்களை எடுத்தோதுவதற்குத் தத்துவமுடையோராதல் வேண்டும்.

அறிவித்தல்களைச் சேர்ப்பிக்கும் முறை

**178.** எவரேனுமாளுக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப் பட்ட ஏதேனும் அறிவித்தல், அத்தகைய அறிவித்தல் பதிவுக்கடிதத்தின்மூலம் அஞ்சலில் அனுப்பப்படின், அல்லது அவ்வாளினால் கொடுத்துதவப்பட்ட முகவரிக்கு இலத்திரனியல் ரீதியில் அனுப்பப்படின், அவ்வாளுக்கு முறையாகச் சேர்ப்பிக் கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

சட்டத்தை நிருவகிப்பதற்கான செலவுகள்

**179.** இச்சட்டத்தை நிருவகிப்பதில் உறப்பட்ட எல்லாச் செலவுகளும், அவை இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு கொடுத்துத்தீர்க்கப்படும் அளவுவரை தவிர, திரட்டு நிதியத்தின்மீதான ஒரு பொறுப்பாதல் வேண்டும்.

துடர்ச்சியிலிருந்தான அல்லது குற்றவழக்கிலிருந்தான பாதுகாப்பு

**180.** (1) கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, மேலதிகக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி, ஒரு குடிவரவுக் கட்டுப்பாட்டாளர், ஒரு பிரதிக் குடிவரவுக் கட்டுப்பாட்டாளர், ஓர் உதவிக் குடிவரவுக் கட்டுப்பாட்டாளர், பிரதான குடிவரவு அலுவலர், ஒரு குடிவரவு அலுவலர், ஒரு பொலிசு அலுவலர், படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் உறுப்பினர் அல்லது கரையோரக் காவல் திணைக்களத்தின் ஒரு கரையோரக் காவல் அலுவலர் என்போருக்கெதிராக, இச்சட்டத்தின்கீழ் அவர்களின் மீது சுமத்தப்பட்ட அல்லது அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் பணியின் அல்லது தத்துவத்தின் புரிகையில் அல்லது பிரயோகத் தில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட எதற்காகவும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப் பட்ட ஆளொருவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும்

நீதிமன்றத்தின்முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயலானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்.

**181.** இச்சட்டத்தில் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில், கட்டளையில், பணிப்பில், அறிவுறுத்தலில் அல்லது வேறு சாதனத்தில் உள்ளதெதுவும், விடயத்துக்கேற்ப, கலனொன்றின்மூலம் அல்லது வானூர்தியொன்றின்மூலம் எவரேனுமாள் பயணிக்கும்போது இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனுமிடத்தை அக்கலன் அல்லது வானூர்தி வந்தடையாததாக அல்லது வந்தடையமாட்டாததாக இருப்பின், இலங்கையிலுள்ள வேறேதேனும் இடத்திலிருந்து அல்லது வேறேதேனும் இடத்துக்கு அக்கலனின்மூலம் அல்லது வானூர்தியின்மூலம் பயணமொன்றை மேற்கொண்டுள்ள அவ்வாள் இலங்கையிலுள்ள ஏதேனும் இடத்தினுட் பிரவேசிப் பதனை அல்லது அவ்விடத்திலிருந்து புறப்படுவதனை எம்முறையிலும் தடைசெய்வதாக அல்லது மட்டுப்படுத்துவதாகக் கருதப்படுதலோ அல்லது பொருளமைத்துக் கொள்ளப்படுதலோ ஆகாது.

*இலங்கையி லுள்ள இடங்களுக் கிடையேயான பயணங் களுக்குச் சட்டம் ஏற்புடைய தாகாது*

**182.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், ஆட்கள் இலங்கையினுட் பிரவேசித்தல் மற்றும் இலங்கையிலிருந்து புறப்படுதல் தொடர்பாக, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் மற்றும் (222 ஆம் அத்தியாயமான தனிமைப்படுத்தல் மற்றும் நோய்களைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமானவையாகவிருத்தல் வேண்டு மென்பதுடன் அவற்றை மதிப்புக் குறைப்பனவாகவிருத்தலாகாது:

*சட்டத்தைப் பொருள மைத்துக் கொள்ளல்*

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தினதும் அத்தகைய ஏதேனும் கட்டளைச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கிநிற்றல் வேண்டும்.

**183.** சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினா லொழிய, இச்சட்டத்திலும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளிலும்- பொருள் கோடல்

"முற்கூட்டிய பயணித் தகவல்கள்" என்பது, பறத்தல்கள் வந்தடையுமுன்னரும் புறப்படுமுன்னரும் எல்லைக் கட்டுப்பாட்டு முகவராண்மைகளுக்கு ஓர் இலத்திரனியல் தொடர்பாடல் முறைமையினூடாகச் சேகரிக்கப்பட்டு அனுப்பப்பட்டவையும் உட்பிரவேச அல்லது புறப்பாட்டு வாயிலில் ஆரம்பக் கோட்டில் கிடைக்கக்கூடியனவாக்கப் பட்டவையுமான தரவுகளின் அம்சங்கள் என்று பொருளாகும்;

"உதவுதலும் உடந்தையளித்தலும்" என்பது, (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 101 ஆம் பிரிவிலுள்ள அதேபொருளைக் கொண்டி ருத்தல் வேண்டும்;

"அங்கீகரிக்கப்பட்ட வாயில்" என்பது, இச்சட்டத்தின் 45 ஆம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட உட்பிரவேச அல்லது புறப்பாட்டு வாயிலாக அமைச்சரினால் வெளிப்படுத் தப்பட்ட ஒரு கடற்றுறை அல்லது ஒரு விமானநிலையம் என்று பொருளாகும்;

"அங்கீகரிக்கப்பட்ட உட்பிரவேச இடம்" மற்றும் "அங்கீகரிக்கப் பட்ட புறப்பாட்டிடம்" என்பன, 45 ஆம் பிரிவின்கீழ் அத்தகையனவாக வெளிப்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப் பட்டவொரு விமானநிலையம் அல்லது கடற்றுறை என்று பொருளாகும்;

"உயிரியளவை" என்பது, கைவிரலடையாளங்கள் உட்பட, ஆளொருவருக்குக் குறிப்பிடத்தக்கதாகவுள்ள தனித்துவ மான உயிரியியற்சார் தரவுகள் என்று பொருளாகும்;

"எல்லை" என்பது, இலங்கையின் ஆள்புலக் கடல்களையும் வான்வெளியையும் கொண்டுள்ளது;

"சிறுவர்" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொரு வர் என்று பொருளாகும்;

"செலவுதொகைகளும் விதிப்பனவுகளும்" என்பது, இலங்கைப் பிரசையல்லாத எவரேனுமாள் தொடர்பாக, அத்தகைய ஆள் அங்கிருந்து புறப்படுவதனை உறுதிப் படுத்துவதற்காக அல்லது வசதிப்படுத்துவதற்காகப் பொது நிதிகளிலிருந்து செலவிடப்பட்ட ஏதேனும் பணம் என்று பொருளாகும் என்பதுடன் பின்வருவனவற்றை யும் உள்ளடக்கும்:-

(அ) அவரது நிவாரணத்துக்காக, பராமரிப்புக்காக, கவனிப்புக்காக அல்லது சிகிச்சைக்காகப் பொது நிதிகளிலிருந்து செலவிடப்பட்ட ஏதேனும் பணம்; அத்துடன்

(ஆ) பொது நிதிகளிலிருந்து அல்லது எந்தத் தரும நிறுவனத்துக்கான ஆதாரத்துக்காக அரசாங்கம் உதவுதொகையளிக்கின்றதோ அந்த ஏதேனும் தரும நிறுவனத்தினால் பேணப்படுகின்றதும் நோய்வாய்ப்பட்ட அல்லது இலம்பாடுற்ற ஆட்களுக்கான நிவாரணத்துக்கானதுமான ஏதேனும் வைத்தியசாலையில், அல்லது வேறு நிறுவனத்தில் அத்தகைய ஏதேனும் நிவாரணம், பராமரிப்பு, கவனிப்பு அல்லது சிகிச்சைக்கான செலவுகள்;

"ஒரு வானூர்தியின் பணிமுதல்வர்" என்பது, அவ்வானூர்தி யின் ஏவுகைக்கு அல்லது கட்டுப்பாட்டுக்கு அப் போதைக்குப் பொறுப்பாகவுள்ள ஆள் என்று பொருளாகும்;

"காவுநர்" என்பது, நீர்மூலம் அல்லது வான்மூலம் பயணிகளை இடம்பெயர்க்கும் தொழிலில் ஈடுபடுகின்ற ஆளொருவர் என்று பொருளாகும் என்பதுடன் கூட்டிணைக்கப் பட்டதாயினுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி எந்த ஆட்கள் கழகத்தினால் வானூர்தி அல்லது கப்பல்

சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றதோ அல்லது வாடகைக்கமர்த்தப்படுகின்றதோ அந்த ஏதேனும் ஆட்கள் கழகத்தையும் உள்ளடக்கும்;

"குடியியல் வான்செலவு அதிகாரசபை" என்பது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் தாபிக்கப் பட்ட குடியியல் வான்செலவு அதிகாரசபை என்று பொருளாகும்;

"குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம் என்று பொருளாகும்;

"சிப்பந்திகள்" என்பது, ஒரு கலத்தின் அல்லது வானூர்தியின் வேலையில் அல்லது சேவையில் தொழிலுக்கமர்த்தப் பட்ட ஆட்கள் தொகுதி என்று பொருளாகும்;

"அபாயகரமான அவுடதம்" என்பது, (218 ஆம் அத்தி யாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தினுள் அடங்குகின்ற அல்லது அதனிடத்தில் இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் அவுடதம் என்று பொருளாகும்;

"தங்கிவாழுநர்" என்பது, பராமரிப்புக்காகவும் ஆதரவுக்காக வும் முழுமையாகவும் நேரடியாகவும் வேறெவரேனும் ஆளின்மீது தங்கியுள்ளவரும் பின்வருமாறாக அத்தகைய வேறு ஆளுக்கு உறவினராகவுள்ளவருமான ஆளொரு வர் என்று பொருளாகும்:-

(அ) அவரது வாழ்க்கைத்துணை;

(ஆ) அவரது அல்லது அவரது வாழ்க்கைத்துணை யின் பெற்றோர் ஒருவர் அல்லது பாட்டன் அல்லது பாட்டி;

(இ) ஒன்றில் திருமணம் முடிக்காதுள்ள அல்லது விதவையாகவுள்ள அல்லது மணநீக்கஞ் செய்தவராகவுள்ள, அவரது அல்லது அவரது வாழ்க்கைத்துணையின் மகள், பேத்தி, சகோதரி அல்லது மருமகள்; அல்லது

(ஈ) இருபத்தொரு வயதுக்குக் குறைந்தவராக அல்லது அவ்வயதுக்கு மேற்பட்டவராகவிருந்து, நிரந்தரமாக உடற்றகுதியற்றவராகவும் தன்னைப் பராமரிப்பதற்கு இயலாதவராகவும் உள்ள, அவரது அல்லது அவரது வாழ்க்கைத்துணை யின் மகன், பேரன், சகோதரன் அல்லது மருமகன்;

"நாடுகடத்தல்" என்பது, அமைச்சரினால் வழங்கப்பட்ட கட்டளை வலுவிலிருக்கும் காலம்வரை இலங்கைக்கு வெளியே தரித்திருப்பதற்கான அக்கட்டளையின்மூலம் இலங்கைப் பிரசையல்லாத ஆளொருவரின் வலோத் காரமான புறப்பாடு என்று பொருளாகும்;

"வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர்" என்பது, 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் என்று பொருளாகும்;

"குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"நேரடி இடைப்பெயர்வுப் பயணி" என்பது, வானூர்திமூலம் இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட விமானநிலைய மொன்றை வந்தடைந்து இலங்கையினுட் பிரவேசிக் காமல் வேறொரு நாட்டுக்குச் செல்லும்வழியில் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விமானநிலையத்தி னூடாகச் செல்கின்ற பயணியொருவர் என்று பொருளாகும்;

"வெளிப்படுத்துதல்" என்பது, அடையாளங்காண் தகவல்களுக்கு அணுகுகையை வழங்குதலையும் உள்ளடக்கும்;

"ஆவணம்" என்பது, பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:-

(அ) ஏதேனும் புறக்குறிப்பு;

(ஆ) எழுத்துள்ள ஏதேனும் பத்திரம் அல்லது வேறு பொருள்;

(இ) பின்வருமாறான குறிகள், எண்கள், சின்னங்கள் அல்லது ஊடுதுளையுள்ள ஏதேனும் பத்திரம் அல்லது வேறு பொருள்:-

(i) அவற்றுக்குப் பொருள்கோடுவதற்குத் தகைமையுள்ள ஆட்களினால் அர்த்தமொன்று கொடுக்கப்படக்கூடிய ஆற்றலுடையவை; அல்லது

(ii) ஒரு கணனியினால், ஒரு பொறியினால் அல்லது ஓர் இலத்திரனியல் உபகரணத்தினால் அவற்றுக்குப் பதிலிறுக்கப்படக்கூடிய ஆற்றலுடையவை;

(ஈ) வேறேதேனும் பொருளின் அல்லது உபகரணத்தின் உதவியின்றி அதிலிருந்து தகவல்களை மீளத்தோற்றக்கூடிய ஆற்றலுடைய ஏதேனும் பொருள் அல்லது விடயம்;

(உ) ஏதேனும் இலத்திரனியற் பதிவேடு; அல்லது

(ஊ) ஏதேனும் வஸ்து அல்லது பொருள்;

"இலத்திரனியல் உபகரணம்" என்பது, இலத்திரனியற் படிவத்தில் ஓர் எழுத்திலான ஆவணத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஆவணத்தைக் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் இலத்திரனியல் உபகரணம் என்று பொருளாகும்;

"புறக்குறிப்பு" என்பது, இச்சட்டத்தின் பாகம் III, IV, V அல்லது பாகம் VII இன்கீழ் அளிக்கப்பட்ட புறக்குறிப்பு என்று பொருளாகும்;

"உட்பிரவேசம்" என்பது, பின்வருவன என்று பொருளாகும்:-

(அ) கடல்வழியாக வந்தடைகின்ற ஆளொருவரின் விடயத்தில், அவர் வந்தடைகின்ற கலத்திலிருந்து இலங்கையில் கப்பலிலிருந்து இறங்குகின்றமை;

(ஆ) ஓர் இலங்கை விமானநிலையத்தில் வான்வழியாக ஏதேனும் விமானத்தில் வந்தடைகின்ற ஆளொருவரின் விடயத்தில், அவர் அந்த விமானத்தின்மூலம் அல்லது அந்த விமான நிலையத்திலிருந்து வெளியேறும்வரை அவர் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இலங்கைக்குள் நுழைந்தவராகவோ அல்லது இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட ஒருவராகவோ கருதப்படல் ஆகாது;

(இ) இலங்கைப் பிரசையல்லாதவரும் இலங்கையில் பிறந்தவருமான ஒரு பிள்ளையின் விடயத்தில், இலங்கையில் அவர் பிறக்கின்றமை; அத்துடன்

(ஈ) வேறேதேனும் விடயத்தில், கடல்வழியாக அல்லது வான்வழியாக இலங்கையினுள்ளான ஏதேனும் உட்பிரவேசம், ஆனால் எவ்விடயத்திலும் இச்சட்டத்துக்கு இணங்கியொழுகும் நோக்கத்துக்காகச் செய்யப்பட்ட ஓர் உட்பிரவேசத்தை அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான ஏதேனும் விசாரணையின் அல்லது தடுத்துவைப்பின் நோக்கத்துக்காக ஒரு குடிவரவு அலுவலரினால் வெளிப்படையாக அல்லது உட்கிடையாக வலுவளிக்கப்பட்ட ஓர் உட்பிரவேசத்தை உள்ளடக்குதலாகாது;

"வைத்திருப்பவர்" என்பது, ஏதேனும் விசா தொடர்பாக, அத்தகைய விசா எவ்வாளுக்கு வழங்கப்படுகின்றதோ அவ்வாள் என்று பொருளாகும்;

"வைத்திருத்தற் செயலிடம்" என்பது, இச்சட்டத்தின்கீழ் எவ்வாட்களின் தடுத்துவைப்பு தேவைப்படுத்தப் பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அவ்வாட்களுக்காக ஒரு விமானநிலையத்தில் அல்லது கடற்றுறையில் அமைந்துள்ள தற்காலிகத் தடுத்து வைத்தல் நிலையம் என்று பொருளாகும்;

"அடையாளங்காண் தகவல்கள்" என்பது, பின்வருவன என்று பொருளாகும்:-

(அ) எவையேனும் உயிரியளவைத் தகவல்கள்;

(ஆ) எவையேனும் உயிரியளவைத் தகவல்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் அர்த்தபூர்வமான அடையாளங்காட்டி;

(இ) எவையேனும் உயிரியளவைத் தகவல்களைப் பகுப்பாய்வுசெய்வதன் விளைவான ஏதேனும் பதிவேடு அல்லது எவையேனும் உயிரியளவைத் தகவல்களிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் அர்த்தபூர்வமான அடையாளங்காட்டி;

(ஈ) குறிப்பிட்டவோராளின் ஆளடையாளத்தை கண்டறிவதற்கு அல்லது குறிப்பிட்டவோராள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படக்கூடியவையும் எவையேனும் உயிரியளவைத் தகவல்களிலிருந்து பெறப்பட்ட அர்த்தபூர்வமான அடையாளங்காட்டியிலிருந்து அல்லது பந்தி (இ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒருவகையினதான ஏதேனும் பதிவேட்டிலிருந்து பெறப்பட்டவையுமான வேறெவையேனும் தகவல்கள்; அல்லது

(உ) குறிப்பிட்டவோராளை அடையாளங்காண்பதனை வசதிப்படுத்துகின்ற வேறெவையேனும் தகவல்கள்;

"குடிவரவு" என்பது, குடிவரவு மற்றும் குடியகல்வு ஆகிய இரண்டையும் உள்ளடக்கும்;

"குடிவரவு இடப்பரப்பு அல்லது வலயம்" என்பது, ஆட்கள் இலங்கையினுட் பிரவேசித்தல் அல்லது இலங்கையிலிருந்து புறப்படுதல் தொடர்பாக இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட, அவர்கள்மீது சுமத்தப்பட்ட அல்லது அவர்களுக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளைப் பிரயோகிப்பதற்காக, புரிவதற்காக அல்லது நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு ஓர் அங்கீகரிக்கப்பட்ட வாயிலினுள் பெயர்குறிக்கப்பட்ட ஓர் இடப்பரப்பு அல்லது வலயம் என்று பொருளாகும்;

"குடிவரவு இசைவு" என்பது, எவரேனுமாள் தொடர்பாக, ஆளொருவர் இலங்கையினுட் பிரவேசிப்பதனை அல்லது இலங்கையிலிருந்து புறப்படுவதனை அனுமதித்தல், ஏற்றுக்கொள்ளுதல் அல்லது மறுத்தலையும் உள்ளடக்குகின்றது;

"குடிவரவுச் சைகை" என்பது, இலங்கையை வந்தடைகின்ற கலன்களுக்காக விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சைகை என்று பொருளாகும்;

"ஊடாட்ட முற்கூட்டிய பயணித் தகவல்கள்" என்பது, எல்லைப் பந்தோபஸ்தை அதிகரிக்கின்றவையும் காவுநரினால் சேகரிக்கப்பட்ட முற்கூட்டிய பயணித் தகவல் தரவுகளின் அடிப்படையின்மீது உடனடிப் பதிலை அறிவிப்பதற்கு எல்லைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு அனுமதியளிக்கின்றவையுமான மேலதிக வழிவகைகள் என்று பொருளாகும்; எல்லைக் கட்டுப்பாட்டு அதிகாரியின் உடனடிப் பதிலின் விளைவாக, பயணியானவர் வானூர்தியில் அல்லது கப்பலில் ஏறுவதனை அனுமதிப்பதற்கு அல்லது தடுப்பதற்கு முடிபுசெய்வதற்குக் காவுநர் இயன்றவராகவுள்ளார்;

"விட்டுநீங்குதல்" என்பது, பின்வருவன என்று பொருளாகும்:-

(அ) கடல்வழியாக இலங்கையை விட்டுநீங்குகின்ற ஆளொருவரின் விடயத்தில், இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் இடத்துக்குக் கலனொன்று புறப்படும் நேரத்தில் இலங்கையை விட்டுநீங்கும் தறுவாயிலுள்ள அத்தகைய கலத்தினுள் இலங்கையில் ஏறுதல் மற்றும் அத்தகைய கலத்தில் தரித்திருத்தல்;

(ஆ) வான்வழியாக இலங்கையை விட்டுநீங்குகின்ற ஆளொருவரின் விடயத்தில், இலங்கையிலிருந்து புறப்படும் தறுவாயிலுள்ள வானூர்தியொன்றில் இலங்கையில் ஏறுதல்;

(இ) இலங்கைப் பிரசையொருவரல்லாத ஆளொருவர் இலங்கையில் இறக்கும் விடயத்தில், அவர் இலங்கையில் இறத்தல்;

(ஈ) விடயத்துக்கேற்ப, கடல்வழியாக அல்லது வான்வழியாக இலங்கையை விட்டுநீங்கும் ஒரு கலனின் அல்லது வானூர்தியின் விடயத்தில், இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனுமிடத்துக்குக் கடல்வழியாக இலங்கையிலுள்ள ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வாயிலிலிருந்து அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் விமானநிலையத்திலிருந்து புறப்படுதல்;

"கலத்தின் கப்பற்றலைவர்" என்பது, அக்கலத்துக்கு அப்போதைக்குப் பொறுப்பாகவுள்ள, அதன் ஏவுகையைக் கொண்டுள்ள அல்லது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள ஆட்கள் என்று பொருளாகும்;

"சிப்பந்தி உறுப்பினர்" என்பது, ஒரு கலன் அல்லது வானூர்தி தொடர்பாக, விடயத்துக்கேற்ப, அக்கலத்தின் அல்லது வானூர்தியின் வேலையில் அல்லது சேவையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனுமாள் என்று பொருளாகும்;

"பராயமடையாதவர்" என்பது, பதினெட்டு வயதை எய்தியிராத ஆளொருவர் என்று பொருளாகும்;

"போதையூட்டும் அவுடதங்கள்" என்பது, 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங் களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங் களினதும் சட்டமுரணான வியாபாரத்துக்கெதிரான சமவாயத்தின் மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக் கப்பட்ட அவுடதங்கள் என்பவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்;

"கடல்கடந்த முன்னாள் இலங்கையர்" என்பது, 34 ஆம் பிரிவின்கீழ் கடல்கடந்த முன்னாள் இலங்கையராகப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர் என்று பொருளாகும்;

"பயணி" என்பது, ஒரு கலத்தின் அல்லது வானூர்தியின் சிப்பந்திகளினது உறுப்பினராகவிராதவரும் அக்கலத்தில் அல்லது வானூர்தியில் பயணிக்கின்றவரும் அல்லது பயணிக்க நாடுகின்றவருமான எவரேனுமாள் என்று பொருளாகும்;

"இடைப்பெயர்விலுள்ள பயணி" என்பது, ஒரு வானூர்தியின் மூலம் அல்லது கலத்தின்மூலம் இலங்கையின் அங்கீகரிக்கப்பட்டவொரு வாயிலை வந்தடைகின்றவரும் வேறொரு நாட்டுக்குச் செல்கையில் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட வாயிலினூடாகச் செல்கின்றவருமான ஒரு பயணி என்று பொருளாகும் என்பதுடன் "இடைப்பெயர்வு விசா" என்பது, அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்;

"பயணிப் பெயர்ப் பதிவேட்டுத் தகவல்கள்" என்பது, வானூர்தியின் அல்லது கப்பலில் ஆசனமொன்றை ஒதுக்கிய பயணியினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஒவ்வொரு வானூர்திக்காகவும் கப்பலுக்காகவும் காவுநர்களினால் உருவாக்கப்பட்ட பதிவேடுகளுக்குக் கொடுக்கப்பட்ட இனப்பெயராகும் என்பதுடன் அப்பதிவேடானது, பயணியின் பெயர்

பிரயாண விபரங்கள், பயணச்சீட்டுத் தகவல்கள், தொடர்பு விபரங்கள், கொடுப்பனவு முறைகள் முதலியன போன்ற தகவல்களையும் கொண்டுள்ளது;

"சமாதான அலுவலர்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையது;

"முழுவயதையடைந்த ஆள்" என்பது, பதினெட்டு வயதை யடைந்துள்ள ஆளொருவர் என்று பொருளாகும்;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்;

"விதித்துரைக்கப்பட்ட மருத்துவ அலுவலர்" என்பது, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட ஒரு மருத்துவ அலுவலர் என்று பொருளாகும்;

"சர்வதேசரீதியில் பயணிப்பதிலிருந்து தடுத்தல்" என்பது, பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:-

(அ) இலங்கையில் தரித்திருப்பதற்குத் தேவைப்படுத் தப்படுதல்;

(ஆ) ஓர் இலங்கைக் கடவுச்சீட்டை அல்லது ஓர் இலங்கைப் பயண ஆவணத்தை ஒப்படைக்கும் படி தேவைப்படுத்தப்படுதல்;

(இ) ஓர் இலங்கைக் கடவுச்சீட்டுக்காக அல்லது ஓர் இலங்கைப் பயண ஆவணத்துக்காக விண்ணப் பிப்பதற்கு அனுமதிக்கப்படாதிருத்தல்; அல்லது

(ஈ) ஓர் இலங்கைக் கடவுச்சீட்டை அல்லது ஓர் இலங்கைப் பயண ஆவணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கப்படாதிருத்தல்;

"உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்கள்" என்பது, 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங் களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களின தும் சட்டமுரணான வியாபாரத்துக்கெதிரான சமவாயங்கள் சட்டத்தின் நான்காம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்;

"அப்புறப்படுத்துகை" என்பது, 98 ஆம் பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளிற் குறித்துரைக்கப்பட்டவாறு இலங்கைப் பிரசையொருவரல்லாத ஆளொருவரின் வலோத்காரமான புறப்பாட்டை எய்துவதற்குக் குடிவரவு அலுவலர்களினால் தொடக்கிவைக்கப்பட்ட ஒரு வலுவுறுத்தல் நடைமுறை என்று பொருளாகும்;

"கடலோடி" என்பது, கலத்தின் கப்பற்றலைவர் தவிர்ந்தவரும் ஒரு கலத்தின்மீது அல்லது கலத்தின் அலுவலின்மீது ஏதேனும் தன்மையில் தொழிலுக்கமக்ஷத்தப்பட்டவரும் அல்லது ஈடுபடுத்தப்பட்டவருமான ஆளொருவக்ஷ என்று பொருளாகும்;

"தனிவேறான மற்றும் புறநீங்கலான குடிவரவு இசைவு" என்பது, ஒரு நாளில் குறிப்பிட்டவொரு காலப்பகுதியின் போது அல்லது காலப்பகுதிகளின்போது மட்டும் ஒரு குறிப்பிட்ட ஆளுக்காக அல்லது ஆட்களின் வகுப்புக்காக நிறைவேற்றப்பட்ட குடிவரவு இசைவையும் உள்ளடக்கும்;

"கரையோர அனுமதிச் சீட்டு" என்பது, சிப்பந்திகளின் கலன் ஒரு வாயிலில் தரித்திருக்கும் காலம்வரை அத்தகைய வாயிலின் நகரத்தினுட் பிரவேசிப்பதற்குச் சிப்பந்தி உறுப்பினரொருவரை அனுமதிக்கின்ற ஒரு சீட்டு என்று பொருளாகும்;

"இலங்கை" என்பது, இலங்கையின் ஆள்புலநீர்ப்பரப்பு களையும் உள்ளடக்கும்;

"இலங்கைக் கடவுச்சீட்டு" என்பது, இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட ஒரு கடவுச்சீட்டு என்று பொருளாகும்;

"இலங்கைப் பயண ஆவணம்" என்பது, இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியின்கீழ் வழங்கப்பட்டதும் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதியினால் அல்லது ஓர் இலங்கைக் கடல்கடந்த தூதரகத்தினால் வழங்கப்பட்டதும் இலங்கையினுட் பிரவேசிப்பதற்கு அல்லது இலங்கையை விட்டுநீங்குவதற்கு ஆளொருவரை அனுமதிக்கின்றது மான ஓர் இலங்கைக் கடவுச்சீட்டு, ஓர் அவசரகாலச் சான்றிதழ், ஓர் அடையாளங்காண் சான்றிதழ் அல்லது வேறேதேனும் தற்காலிகப் பயண ஆவணம் என்று பொருளாகும்;

"கட்டணமில்லாக் கரவுப்பயணி" என்பது, ஒரு கலத்தின் கப்பற்றலைவரினது அல்லது கலத்துக்கு அல்லது வானூர்திக்குப் பொறுப்பாகவுள்ள வேறு ஆளினது சம்மதமின்றி அக்கலத்தில் அல்லது வானூர்தியில் இரகசியமாகவிருக்கும் ஆளொருவர் என்று பொருளாகும் என்பதுடன் ஏதேனும் கலத்தின் கப்பற்றலைவரினது அல்லது அக்கலத்துக்கு அல்லது வானூர்திக்குப் பொறுப்பாகவுள்ள வேறு ஆளினது சம்மதமின்றி அக்கலத்தில் அல்லது வானூர்தியில் இலங்கையை வந்தடைகின்ற அல்லது இலங்கையிலிருந்து புறப்படுகின்ற அத்தகையவோர் ஆளையும் உள்ளடக்கும்;

"இலங்கையின் ஆள்புலநீர்ப்பரப்புகள்" என்பது, அரசியலமைப்பிலுள்ள அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"பயண ஆவணம்" என்பது, இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஓர் இலங்கைப் பயண ஆவணம் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பயண ஆவணம், கடவுச்சீட்டு அல்லது அனுமதியாவணம் உட்பட இருநாடுகளுக்கிடையே ஆட்களின் நடமாட்டத்தை வசதிப்படுத்துகின்ற ஒவ்வோர் ஆவணமும் என்று பொருளாகும்;

"செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது பயண ஆவணம்" என்பது, பின்வருமாறாகவுள்ளதும் ஒரு கடவுச்சீட்டின் பண்புகளை உடையதுமான ஒரு கடவுச்சீட்டு அல்லது வேறு ஆளடையாள ஆவணம் என்று பொருளாகும்:-

(அ) இலங்கை அரசாங்கத்தினால் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் எவரேனுமாளுக்கு வழங்கப்பட்டதும்;

(ஆ) அத்தகைய கடவுச்சீட்டை வைத்திருப்பவரை அடையாளங்காண்பதற்குப் போதியதான தனிப்பட்ட விவரணமொன்றைக் கொண்டுள்ளதும் அவரது நிழற்படம் அதனோடு இணைக்கப்பட்டதும்; அத்துடன்

(இ) அப்போதைக்கு வலுவிலுள்ளதும்;

அத்துடன் ஒரு பயண ஆவணத்தையும் உள்ளடக்கும்;

"கலன்" என்பது, ஓர் அரசாங்கத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்படுவனவும் அல்லது தொழிற்படுத்தப்படுவனவும், அப்போதைக்கு அரசாங்க வர்த்தகஞ்சாராச் சேவையின்மீது மட்டுமே பயன்படுத்தப்படுவனவும், ஒரு போர்க்கப்பல், கடற்படைசார் துணைக் கப்பல் அல்லது வேறு கலன் தவிர்ந்தனவும், நீரின்மீது இடப்பெயர்வு வழிவகையொன்றாகப் பயன்படுத்தப்படுவனவும் அல்லது பயன்படுத்துவதற்கு இயன்றதாகவுள்ளனவுமான இடப்பெயர்ச்சியற்ற மரக்கலன்களும் முந்நீர்விமானங்களுமுட்பட, எவையேனும் வகையினவான நீர் மரக்கலன்கள் என்று பொருளாகும்;

"விசா" என்பது, இலங்கை அரசாங்கத்தினால் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒரு விசாவையும் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட விசாவையும் உள்ளடக்கும்;

"தன்னிச்சையான புறப்பாடு" என்பது, குடிவரவு அலுவலர்களினால் தொடக்கிவைக்கப்பட்ட வலுவுறுத்தல் நடைமுறையின்றி, அப்போது செல்லுபடியாகவுள்ள விசாவெதனையும் உடையவராகவிராது தனது சொந்த விருப்பத்தின் மீது இலங்கைப் பிரசையல்லாத ஆளொருவரின் புறப்பாடு என்று பொருளாகும்.

**184.** (1) (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர் மற்றும் குடியகல்வோ சட்டமும் 1971 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, கடவுச்சீட்டு (ஒழுங்குபடுத்தல்) மற்றும் வெளிச்செல்லல் அனுமதிப்பத்திரச் சட்டமும் இத்தால் நீக்கப்படுகின்றன. நீக்கமும் பேணல்களும்

(2) (இதனகத்துப்பின்னர், "நீக்கப்பட்ட சட்டங்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டமும் 1971 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, கடவுச்சீட்டு (ஒழுங்குபடுத்தல்) மற்றும் வெளிச்செல்லல் அனுமதிப்பத்திரச் சட்டமும் நீக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும்-

(அ) நீக்கப்பட்ட சட்டங்களின் கீழ் ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் அல்லது வேறேதேனும் நிறுவனத்தில் தொடுக்கப்பட்ட எல்லா வழக்குகளும், கருமங்களும் அல்லது வழக்குநடவடிக்கைகளும்; அத்துடன்

(ஆ) நீக்கப்பட்ட சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான கட்டளைகளிலிருந்தும் தீர்ப்புக்களிலிருந்துமான எல்லா மேன்முறையீடுகளும்,

அத்தகைய சட்டங்கள் நீக்கப்பட்டிருக்கவில்லை யென்றாற்போன்று எல்லா அம்சங்கள் தொடர்பிலும் கேட்டுத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) நீக்கப்பட்ட சட்டங்களின்கீழ் வழங்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று உள்ளவையுமான எல்லாச் சான்றிதழ்களும், உரிமங்களும், விசாக்களும், கடவுச் சீட்டுகளும், பயண ஆவணங்களும் மற்றும் வேறு ஆவணங்களும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறுவனவாக இச்சட்டத்

தின்கீழ் வழங்கப்பட்டவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பது டன் அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப் படுதலும் வேண்டும்.

(4) நீக்கப்பட்ட சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதியன்று வலுவிலுள்ளவையும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராதவையுமான எல்லாத் துணைநிலைச் சட்டவாக்கங்களும், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களினால் அவை நீக்கப்படும்வரை அல்லது ஒழிக்கப்படும்வரை இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) (அ) நிரந்தர வதிவு அனுமதிப்பத்திரங்களும் தற்காலிக வதிவு அனுமதிப்பத்திரங்களும் தொடர்பான சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளின் நீக்கம், ஒழிப்பு அல்லது திருத்தம் எவ்வாறிருப்பினும், 1955 ஆம் ஆண்டு யூன் 6 ஆந்நாளுக்குமுன்னர் வழங்கப்பட்டதும் அத்தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளதுமான அத்தகைய ஏதேனும் அனுமதிப்பத்திரம், அத்தகைய அனுமதிப்பத்திரத்தின் காலஎல்லையின்போது அத்தேதிக்குப்பின்னர் வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டுமென் பதுடன் அதன்பின்னர் பயனில்லாதொழிதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய தேதிக்குமுன்னர் அத்தகைய அனுமதிப் பத்திரங்களுக்கு ஏற்புடையற்பாலனவான சட்டத்தின் ஏற்பாடுகள், அவை அத்தேதிக்குமுன்னர் ஏற்புடையற்பாலனவாக இருந்தன என்றாற்போன்று அதேமுறையில் அத்தகைய அனுமதிப்பத்திரங் களின் செல்லுபடிக் காலப்பகுதியின்போது அத்தேதிக்குப் பின்னர் அத்தகைய அனுமதிப்பத்திரங்களுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(ஆ) (2 ஆம் அத்தியாயமான) பொருள்கோடற் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு, ஏதேனும் நீக்கத்தின் விடயத்தில் அவ்வுட்பிரிவு ஏற்புடையதாகின்ற அதேமுறையில் நிரந்தர வதிவு அனுமதிப்பத்திரங்களும் தற்காலிக வதிவு அனுமதிப்பத்திரங்களும் தொடர்பான சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை விட்டுவிடுகின்ற பயனைக் கொண்டிருக்கின்ற ஏதேனும் திருத்தத்தின் விடயத்தில் ஏற்புடையதாதல் வேண்டும்.

**185.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்